THAYAGAM

# தாயகம்

75¢

20 . 8 . 93

உண்மை:5
தேடல்:7

# பொருளாதார தடையை நீக்க அரசு மறுப்பு

## கைதிகளைப் பரிமாற மட்டும் இணக்கம்



## ஐ.நா தலையீட்டுக் கோரிக்கை நிராகரிப்பு

தமிழகம் தனிநாடாகுமா?
ஜெயலலிதாவின் அச்சுறுத்தல்

விருப்பத்தின் படி நாடு திரும்பும் அகதிகள்

## பொலிசாரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EVERGREEN
## IMPORT & DISTRIBUTORS

**TEXTILES, GIFTS, EVERSILVER ITEMS & BOOKS**

**566 A PARLIAMENT ST**
(PARLIAMENT/WELLESLEY)
**(416) 964-8601**
**324-9345**
**968-9545**

**வர்த்தகர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு**

தலைநகை, தலைப்பாகை வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன், அனுராதா ரமணன், சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, லேனா தமிழ்வாணன், மு.கருணாநிதி, கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா உட்பட தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள் மலிவு விலையில் கிடைக்கும்.**

இலங்கை, இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். நேரடிவினியோகமும் உண்டு.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- சாறி வகைகள்
- அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

அனைத்தும் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

**வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் உடனுக்குடன் பணம் அனுப்பி வைக்கப்படும்**

**566 A PARLIAMENT ST (PARLIAMENT/WELLESLEY)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

## பேச்சுவார்த்தைக்கு தயார் புலிகள் லண்டனில் அறிவிப்பு

இனப்பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயார் என்று புலிகள் அறிவித்துள்ளனர். வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம் அமைந்த சமஷ்டி அமைப்பை பரிசீலிக்க பிரபாகரன் தயாராக இருப்பதாக லண்டனில் உள்ள புலிகளின் அலுவலகம் தெரிவித்ததாக அசோசியேட்டட் பிரஸ் செய்திக் குறிப்பு கூறுகிறது.

ஆயினும் பேச்சுவார்த்தைகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது பற்றியோ அரசாங்கத்தின் கருத்து என்ன என்பது பற்றியோ எந்த செய்திகளும் இல்லை. ஆயினும் முன்பு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஹமீது மீண்டும் அமைச்சரவைக்குள் கொண்டு வரப்பட்டதால் அரசாங்கம் புலிகளுடன் பேசுவதற்கு மீண்டும் முயற்சிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## திரும்பி வரும் அகதிகள்

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளின் முதல் தொகுதி தற்போது திருகோணமலையை வந்தடைந்துள்ளது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தங்கள் சட்டி பானைகளுடன் வந்திறங்கிய அவர்கள் தாங்கள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவதாக கூறப்படுவதை மறுத்தார்கள். சுமார் நானூறு பெண்களும் குழந்தைகளும் உட்பட 1080 அகதிகள் எம்.வி.நிக்கோபார் என்ற கப்பலில் திருகோணமலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை மதியம் வந்து சேர்ந்தார்கள். அரச அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், ஐ.நா அகதிகள் தூதுவராலய அதிகாரிகள் ஆகியோர் இவர்களை வரவேற்றனர். இவர்களில் பலர் சைக்கிள்கள், படுக்கைவிரிப்புகள் சகிதம் இறங்கினர்.

அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பான ஏசியா வாச் இந்த அகதிகள் பலவந்தமாக அனுப்பப்படுகிறார்கள் என்று சுமத்திய குற்றச்சாட்டை ஐ.நா அகதிகள் அமைப்பு அதிகாரி நிராகரித்தார். இவர்கள் தாங்களாகவே விரும்பி வருகிறார்கள் என்பது உறுதி செய்யப்பட்டது என்றும் இந்த கப்பலில் இருக்கும் யாரும் பலவந்தப்படுத்தப்படவில்லை என்றும் பீட்டர் நிக்கலஸ் என்ற ஐ.நா அகதிகள் அமைப்பின் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார். ஐ.நா அமைப்பு கடந்த ஆகஸ்ட் மாதமே இந்த அகதிகள் விவகாரத்தில் செயற்படத் தொடங்கியிருந்தது. எவரையும் வரவிடாமல் தடுப்பவர்கள் அவர்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கிறார்கள் என்று நிக்கலாஸ் குற்றம்சாட்டினார்.

வந்தவர்களில் ஒருவரான அரியசுந்தரம் தான் விரும்பியே வந்ததாகவும் இது எனது நாடு. இங்கே தான் நான் வாழ விரும்புகிறேன் என்றும் தெரிவித்தார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த மேரி செல்வம் என்ற ஐந்து குழந்தைகளின் தாய் தனதுவீடும் நிலங்களும் இருப்பதால் தான் திரும்பி வந்ததாகவும் தனது கணவன் இங்கே பாதுகாப்பாக இருக்கலாம் என்று எழுதினார் என்றும் கூறினார்.

இந்தியாவில் இருக்கும் மேலும் 6800 அகதிகள் மீண்டும் இலங்கை வர விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். வருகின்ற செப்டம்பர் மாதம் வரை இவர்கள் கப்பலில் வந்து சேர்வார்கள்.92 தை மாதம் ஆரம்பித்த அகதிகள் மீள்வருகையின் போது சுமார் 23 ஆயிரம் பேர் நாடு திரும்பியிருந்தனர். பின்னர் போதிய கப்பல்கள் இல்லாமல் இந்த வருகை நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிராக இந்திய இலங்கை நட்புறவுக்கழகம் ஆட்சேபம் தெரிவித்த போதும் எந்த வித பாதிப்பையும் அது ஏற்படுத்தவில்லை.

## பிள்ளைகளின் விடுதலையை அரசே குழப்பியது பெற்றோர் குற்றச்சாட்டு

புலிகளினால் பிடித்து வைக்கப்பட்டு உண்ணாவிரதம் இருக்கும் பொலிசாரின் பெற்றோர்கள் அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள்ளனர். அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை தடுப்பதாகவும் அவர்களை விடுவிக்கும் முயற்சிகளை தள்ளிப் போடுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

அவர்களை விடுவிக்க நாங்கள் புலிகளிடம் பேச்சுவார்த்தைகளை நடத்திய போது அரசாங்கம் உள்ளே நுழைந்து எல்லாவற்றையும் சிதைத்து விட்டது என்று பெற்றோர்களில் ஒருவரான யக்குப்பிட்டிய கூறினார்.

அவர் கடந்த புதன்கிழமை சிறிமாவோ பண்டாரநாயக்கவைச் சந்தித்தார். செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக புலிகளிடம் தங்கள் பிள்ளைகளை விடுவிக்கும்படி கேட்டுக் கொள்ளும்படி இவர் சிறிமாவோவை கேட்டுக் கொண்டார்.

நாங்களும் கைதிகளும் போதியளவு துன்பங்களை அனுபவித்து விட்டோம், நாம் ஏழைகள் என்று புலிகளிடம் கெஞ்சினோம். எங்கள் மீது புலிகள் அனுதாபம் காட்டிய வேளை அரசாங்கம் உள்ளே நுழைந்தது. அரசாங்கம் நுழைந்ததும் புலிகள் நிபந்தனைகளை முன்வைத்தனர் என்று யக்குப்பிட்டிய மேலும் கூறினார்.

ஆனால் இது பற்றி கூறிய ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் புலிகள் தான் அரசாங்க பிரதிநிதியை வரும்படி கோரிக்கை விடுத்தனர் என்றும் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பதைப் பயன்படுத்தி அரசாங்கம் மீது அழுத்தம் பிரயோகிக்க முயன்றனர் என்றும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு இட்டோர் இயல்

# விடுதலைப் போராட்டத்தில் யுத்தக் குற்றங்கள்

இரண்டாம் உலக யுத்தத்தின் போது. ஹிட்லர் யூதர்களை இனஅழிப்புச் செய்த போது பலர் விஷவாயு செலுத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். அவ்வாறு கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட முகாம் ஒன்றில் காவலாளியாக இருந்து யூதர்களை துன்புறுத்தினுர் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்க கார் தொழிலாளி ஒருவரைக் கைது செய்து இஸ்ரேல் விசாரணை செய்தது. யுத்தக் குற்றங்களுக்காக டெமான்யுக் என்ற இந்த நபர் தான் **Ivan the Terrible** எனப்படும் காவலாளி என்று அந்த முகாம்களிலிருந்த தப்பிக் கொண்டவர்கள் சாட்சியமளித்தும் இஸ்ரேலிய நீதிமன்றம் அவரை விடுவித்திருக்கிறது.

இந்த சம்பவம் எங்களில் பலருக்கு சம்பந்தம் இல்லாததாக படக்கூடும். ஆனுல் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களுக்காக, இன்றைக்கும் நீதிமன்ற விசாரணைகள் நடைபெறுகின்றன என்பது எங்களில் பலருக்கு ஆச்சரியத்தை தரக் கூடும். நாஜிகளின் கொடுமைகள் இன்னமும் பலரால் மறக்கப்பட முடியாத நிலையில் உள்ளன. தற்போதைய ஜேர்மன் அரசுக்கு கூட அதன் குற்ற உணர்வின் தாக்கம் நிறையவே உண்டு.

அறுபது லட்சம் யூதர்களின் அழிவுக்கு காரணமான பலர் நீண்ட நாட்களின் பின்னர் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டார்கள். ஜேர்மனியின் வீழ்ச்சிக்கு பின்னர் அமெரிக்க, தென்னமெரிக்க நாடுகளில் ஒளிந்து கொண்ட பல நாஸிகள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறுர்கள். அடொல்ப் ஐயிச்மான் கடத்தப்பட்டது உலகப் புகழ் பெற்ற விவகாரம் ஒன்று. நாஸிகளுக்கு தாங்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் எமது நாட்டிலும் பல சிறைகளும் வதை முகாம்களும் உள்ளன.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கை தாயகத்தில் பிரசுரமான போது, அதன் பின்னர் தான் தங்கள் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொண்டவர்கள் பலர். புலிகளால் கொலலப்பட்டவர்களின் மரண அறிவித்தல்களை தங்கள் வெளியீடுகளில் வெளியிடக் கூட புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் ஆதாரம் கேட்ட சம்பவங்கள் கூட உண்டு. கடந்த சில வாரங்களாக தாயகத்தில் வெளிவருகின்ற இக்கட்டுரைத் தொடர் எங்களில் பலரின் முள்ளந்தண்டை சில்லிட வைத்திருக்கும். மனிதத்தை அவமதிக்கும் முறையில் சித்திரவதை செய்யப்படும் தமிழ்க் கைதிகள் பற்றியும் மிருகத்தனமான முறையில் நடந்து கொள்ளும் போராளிகள் பற்றியும் இந்த அறிக்கை தெளிவாகவே குறிப்பிடுகிறது.

இதுவரை காலமும் தங்கள் பற்றிய விமர்சனங்கள் தங்களுக்கு கேட்காதது போல நடந்து கொண்ட புலிகளும் இந்த அறிக்கையில் யாழ்ப்பாண வதைமுகாம்கள் பற்றிய அறிக்கை வந்ததும் அதை மறுக்க வேண்டிய அளவில் இருக்கிறது.

புலிகள் இந்த கைதிகளை வைத்து சித்திரவதை செய்வதற்கான தேவை என்ன? எதிரிகளுக்கு தகவல் கொடுத்தார்கள், மற்ற இயக்கத்தவர்கள், கப்பம் கொடுக்க முடியாதவர்கள் என்பது முதல் எதிர்காலத்தில் அச்சுறுத்தலாக இருக்கக் கூடியவர்கள் என்பது வரை பல்வேறுபட்டவர்கள் இந்த முகாம்களில் சித்திரவதைக்கு ள்ளாகிறுர்கள்.

தீப்பொறி குழுவினர், செல்வி, பத்திரிகையாளர் சண்முகலிங்கம், யாழ் புக் டிப்போ மணியம் போன்று பலர் கைது செய்யப்பட்டும் கொல்லப்பட்டும் இருக்கிறுர்கள். துரோகிகளுக்கு இது தான் தண்டனை என்ற மூளைச்சலவை செய்யப்பட்ட ஆதரவுப் போக்குக்கும் இடையில் பலர் பகிரங்கமாக மரண தண்டனை விதிக்கப்படும் போது இவர்களை ஏன் அடைத்து வைத்திருக்க வேண்டும், இவர்களையும் அவர்கள் நினைத்தால் கொன்றிருக்கலாமே என்ற கருத்துப் போக்கும் இருக்கிறது.

இதில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பலர் முன்பு புலிகளுடன் சேர்ந்திருந்து அவர்களுடன் முரண்பட்டுக் கொண்டவர்களே. தங்களுக்கு அவர்களைத் தேவையில்லாத போது, அல்லது தொல்லை உருவாகும் என்று அஞ்சும் போது அவர்கள் பகிரங்க மரண தண்டனைக்கு ள்ளாகிறுர்கள். மாத்தயா தலைமையில் கொலலப்பட்டவர்களில் சிலர் அவ்வாறுனவர்கள். இவ்வாறுன மரண தண்டனைகள் மக்கள் மத்தியில் பயங்கரமான பயத்தை உண்டுபண்ணி மேலும் அவர்களை மௌனமாக்குதுடன், தங்கள் தவறுகளை மூடி மறைத்து, சமூகத்தின் தீயசக்திகளை அழித்து தூய்மையாக்கும் பணியைத் தொடர்வதான ஒரு பிரமையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கமாகும். ஆனையிறவு மோதல் தோல்வியில் முடிந்த பின்னர் சுன்னுகத்தில் வைத்து இருவர் 'அவர்கள் காட்டிக் கொடுத்ததால் தான் தோல்வியடைய நேர்ந்தது' என்று மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள் என தகவல் வந்ததும் தங்கள் பெயரைச் சொல்லி ஊழல் செய்தார்கள் என்று சிலரைக் கொன்றதும் இதைத் தான் காட்டுகிறது. 'அவங்கள் பிழை செய்தால் தண்டிப்பாங்கள் தானே' என்ற நியாயம் வேறு.

மற்றும்படி கைது செய்து வதை முகாமில் வைக்கப்பட்டு, நீண்ட காலத்தின் பின் அவர்கள் இறந்திருப்பதாக அவர்களின் உடைமைகளைக் கொடுப்பது அவர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டதனுல் அல்ல, மாறுக சித்திரவதைகளின் போது இறந்ததையே குறிக்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் மீது இவர்கள் ஆயுதம் வைத்திருந்தார்கள், தகவல் கொடுத்தார்கள் என்ற வதந்திகளை கிளப்புவதன் மூலம் ஆதரவாளர்கள் மத்தியில் நியாயத்தை ஏற்படுத்துவது நடைபெறுகிறது.

ஒரு சம்பவத்தின் போது, கணவனைக் காணுத மனைவி அவரைத் தேடிச் சென்ற போது, கணவர் அந்த முகாமில், இந்த முகாமில் என்று கூறி ஏமாற்றி விட்டு, ஒரு நாள் கேட்டார்களாம் 'நீ இப்பவும் பொட்டு வைச்சிருக்கிறியோ' என்று. இந்த குரூரம் புலிகளால் மட்டுமே முடியும்.

தனிப்பட்ட கோபதாபங்கள் கூட பழிதீர்க்கப்பட இது ஒரு நல்ல வழியாய் பயன்படுகிறது. இத்தனை ஆயிரம் பேரை அவர்கள் வைத்து உணவு போட தேவை என்ன? முதலில் இது புதிதாக சேர்ந்து கொள்பவர்களுக்கு ஒரு நல்ல களம். தங்கள் மன வக்கிரங்களை தீர்த்துக் கொள்ளவும், இவ்வாறுன சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதால் புதிதாய் உள்ளவர்கள் தங்கள் கைகளை சேற்றுள் புதைத்து தாங்களும் குற்றவாளிகளே என்ற மன உணர்வை ஏற்படுத்தவும் இவை நல்ல சந்தர்ப்பம். அதை விட முக்கியமானது, தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மற்றவர்களுக்கான பயமுறுத்தலே.

சைபீரிய குளிரில் தண்டனை அனுபவிக்க வேண்டிய பயம் தான் ரஷ்யாவில் நீண்ட காலம் பலரை மௌனமாக வைத்திருந்தது. அத்தோடு, இவ்வாறுன சித்திரவதையை அனுபவித்து விடுவிக்கப்படுபவரும் கூட அதைப் பற்றி பேசக்கூடாது என்ற பயமுறுத்தலுடன் விடுவிக்கப்படும் போது மௌனமாக இருப்பதையே விரும்புவார். இவ்வாறுன அடக்குமுறைகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது கேள்விக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானகாயிரம் பேரை பிடித்து சித்திரவதை செய்யும்போது, அது நானகாயிரம் குடும்பங்களின் விரோதத்தை சம்பாதிப்பதாகிறது. தனது மகனை விடுவிக்கும்படி தாய் முறைப்பாட்டுப் பெட்டியில் முறைப்பாடு எழுதிய சம்பவங்களும் உண்டு. தங்கள் கணவர்கள், குழந்தைகளுக்காக முகாம், முகாமாக தமிழ்த் தாய்மார்கள் அலைக்கழிக்கப்படுவது பற்றி அங்கிருந்து வரும் கடிதங்கள் விளக்குகின்றன.

உண்ணாவிரதம் இருக்கும் பொலிசாரின் பெற்றோருக்கு 'கறுத்தக் கொழும்பான் மாம்பழம் கொடுத்து உபசரிக்கும்' புலிகள் சொந்த மண்ணில் சொந்த மக்களை சித்திரவதை செய்வது நியாயமானதா? இதற்கு காரணமும் தேவையும் இருக்கிறது. வெளியுலகிற்கும் சிங்கள மக்களுக்கும் தாம் மனிதாபிமானம் மிக்கவர்கள் என்ற பிரமையை ஏற்படுத்துவதே இதன் நோக்கம்.

இவ்வாறான கொடூரமான யுத்தக் குற்றங்களுக்கு யார் பொறுப்பு? ஏற்கனவே வதை முகாம்களுக்கு பொறுப்பான பலர் தப்பி வந்து வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். கேட்டால், தலைமையின் ஆணையை ஏற்றுச் செயற்பட்டோம் என்ற விதமான பதில். தலைமையிடம் கேட்டாலோ இவ்வாறானவர்களை நீக்கி விட்டோம் என்ற பதில். ஒரு சம்பவத்தின் போது, கைது செய்யப்பட்டவர் தற்செயலாக இறந்த போது அதைச் செய்தது யார் என்று கேட்ட போது, 'அவர்களை நாங்கள் தட்டி விட்டோம்' என்று அலட்சியமாக பதில் வந்திருக்கிறது.

இது கிட்டத்தட்ட கம்யூனிஸ்ட் கட்சி தவறு செய்யவில்லை, கட்சிக்காரர்கள் தான் தவறு செய்தார்கள் என்பது போன்ற வாதமே. தலைவரும் இயக்கமும் தவறுகளுக்கு அப்பாற்பட்டவை, மற்றவர்களே தவறு செய்கிறார்கள் என்ற நிலையே புலிகளிடமும் ஆதரவாளர்களிடமும் இருக்கிறது. இவ்வாறாகப் பார்த்தால் ஒரு காலத்தில் புனிதப் போராளி என்று கொண்டாடப்பட்டு இன்று பதவி இறக்கப்பட்டிருக்கும் மாத்தயா கூட இவ்வாறான ஒரு நிலைக்குள் தான் இருக்கக் கூடும். வதை முகாம் காந்தி போன்றவர்கள் போல, மிகவும் மோசமான மிருகத்தனமாக வக்கிரங்களை நிறைவேற்றி அதில் இன்பம் காண்கின்றவர்கள் எல்லாம் தலைமை சொன்னது, அதை நிறைவேற்றினோம் என்று யேசுவை சிலுவையில் அறைய சொன்ன பிலாத்து மாதிரி 'இதற்கும் எமக்கும் சம்பந்தம் இல்லை' என்று கையைக் கழுவிக் கொண்டால், இதனால் கொல்லப்பட்டு, சித்திரவதை செய்யப்படுகின்ற அப்பாவிகளின் உயிரிழப்புகளுக்கும் வேதனைகளுக்கும் யார் பொறுப்பு?

எங்கள் தலைமையின் சிந்தனை தலைமையைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே நிற்கிறது. இதனால் தான் பல இடங்களில் இவ்வாறான செயற்பாடுகளை கண்டும் காணாமலும் விட்டுக் கொள்கிறது. இராணுவமும் அந்த நிலை தான். தனது வக்கிரங்களுக்கு தடை விதிக்கப்படும் போது கிளர்ந்து எழுகின்றது. இதனால் தான் வேட்டை நாய்கள் போல் கட்டின்றி அவிழ்த்து விடப்படுகின்றன. இதைப் போன்று தான் கடித்துக் குதற மட்டுமே கற்பிக்கப்படுகின்ற ஒரு தலைமுறைக்கு தடைகளைப் போட்டு தலைமையை இழந்து கொள்ள தலைமை ஒரு போதும் விரும்பாது. அத்தோடு இவ்வாறு செயற்பாடுகளை அங்கீகரிக்கும் போது 'என்னை மட்டும் கொலைகாரன் என்று நீ கூற முடியாது, நீயும் கூடத் தான். எனவே நீ புனிதன் அல்ல' என்ற நியாயப்படுத்தலும் எழுகிறது.

வெற்றி பெறும் போது தலைமையின் சீரிய சிந்தனையும் இவ்வாறான உரிமை மீறல்கள் நடைபெறும் போது கீழ் மட்டத்தின் கட்டுப்பாடற்ற தன்மையும் பிரசாரப்படுத்தப்படுகின்றன.

இனத்திற்கு, முழு உலகத்தமிழினத்திற்கே, தலைமையை ஏற்றுக் கொண்டதாக உரிமை கோருபவர்கள் மனிதாபிமானமற்ற இந்த நடவடிக்கைகளுக்கு மட்டும் மற்றவர்களில் பழியைப் போட்டு அவர்களையும் 'போடுவதன்' மூலம் தான் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கொன்று விடும் முயற்சி இது. இதன் மூலம் தங்கள் தவறுகளுக்கு எந்த வித சாட்சியமும் இல்லாதபடிக்கு உறுதி செய்து கொள்ளப்படுகிறது.

இவ்வாறான நிலை தொடருவதை எந்த வகையில் இந்த தமிழினம் ஏற்றுக் கொள்கிறது? கிட்டுவை விடுவிக்கும்படி இந்தியாவிடம் கோரிக்கை எழுப்ப ஆயிரக்கணக்கில் திரள முடியுமானால், எங்கள் மண்ணிலேயே கைதிகளாக சித்திரவதைக்குள்ளாகின்றவர்களை விடுவிக்கும்படி ஏன் அத்தனை பேரும் முன்வரவில்லை?

எத்தனை வருடங்கள் சென்றாலும் தாங்கள் தேடிக் கண்டுபிடிக்கப்படுவோம் என்ற எண்ணம் வர வேண்டும் என்பதற்காகத் தான் நாம் இந்த நாஸிகளைத் தேடுகிறோம் என்று இஸ்ரேலியர்கள் கூறியிருந்தார்கள். எங்களை யாரும் தண்டிக்க முடியாது என்ற சிந்தனைதான் எங்கள் நாட்டில் இந்த சித்திரவதைகளுக்கு காரணமாகிறது.

இந்த யுத்த காலக் குற்றங்கள் 'விடுதலைப் போராட்டம்' என்ற பூச்சுக்குள் மறைக்கப்பட வேண்டிய ஒன்றா? அல்லது நாஸிகளின் மீதான வேட்டை போன்று இதற்கு காரணமானவர்கள் அனைவரும் தண்டனைக்குள்ளாக வேண்டியவர்களா? என்பதை தமிழினம் தீர்மானிக்க தவறினால் நாளை முழுத் தமிழினமுமே இவ்வாறான கொடுமைகளுக்கு பொறுப்பேற்க வேண்டி வரும்.

# மந்திரம் செய்த மந்திரி

தனது மைத்துனரான மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூமை எதிர்க்க மந்திரவாதிகளைப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட மாலைதீவு அமைச்சர் நாட்டை விட்டு தப்பியோடி விட்டார்.

இல்யாஸ் இப்ராகிம் எனப்படும் இந்த அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் சிங்கப்பூருக்கு சென்றுள்ளார். இவர் மீது இவரில்லாமலேயே விசாரணை நடைபெறும். இந்த மாதம் ஜனாதிபதி தெரிவு நடைபெறும் போது தன்னை வேட்பாளராக தெரிவு செய்ய உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காக டொன் டிடி என்ற பெண் மந்திரவாதி இந்த அமைச்சரின் வீட்டில் வைத்து சடங்குகள் நிகழ்த்தினார்.

கடந்த பதினைந்து வருடங்களாக எந்த எதிர்க்கட்சிக்கும் இடம் விடாமல் ஆட்சி செய்து வருகிறார். பாராளுமன்றத்தில் தனியான ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டு போட்டியிடுவார். பாராளுமன்றத்தில் உள்ள 51 உறுப்பினர்கள் மத்தியில் இல்யாஸ் ஆதரவு தேடி வந்தார். இவர் ஜனாதிபதி அலுவலக அமைச்சரே அன்றி வேறு எந்த முக்கியமான அமைச்சுகளும் இல்லாதவர்.

மாலைதீவில் 90 முதல் 35 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியிருக்கிறது. 89 பாராளுமன்றத் தேர்தலில் வாக்கு மோசடி செய்ததாக குற்றம் சாட்டி துண்டுப்பிரசுரம் வினியோகித்தவர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

# அவசரநிலை நீடிப்பு

இலங்கைப் பாராளுமன்றம் அவசர கால விதிகளை நீடிப்பதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறது. கடந்த வியாழன் நடைபெற்ற அவசர காலநீடிப்பு பிரேரணைக்கு ஆதரவாக 114 பேரும் எதிராக 47 பேரும் வாக்களித்தனர்.

முதலில் ஜே.வி.பியினருக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக கொண்டு வரப்பட்ட இச்சட்டம் பின்னர் புலிகள் மீதான நடவடிக்கைக்காக நீடிக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா தலையீட்டுத் திட்டம் நிராகரிப்பு

இலங்கைப் பிரச்சனையைத் தீர்க்க ஐ.நா தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது. நோபல் பரிசு பெற்றவர்களின் அமைப்பான பூகோள ஒத்துழைப்புக்கான உலக கவுன்சில் இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்க்க ஐ.நா தலையிட வேண்டும் என்று கோரியிருந்தது.

ஆயினும் இந்த அமைப்புக்கு எழுதிய கடிதத்தில் 'ஐ.நா தலையிடுவதற்கு எந்த காரணமும் இல்லை என அரசு கருதுவதாக' ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாச தெரிவித்துள்ளார்.

மருத்துவத்திற்காக 67 இல் பரிசு பெற்ற ஜோர்ஜ் வால்ட் என்ற அமெரிக்கர், சமாதானப் பரிசு பெற்ற மெய்ரெட் மாகிர் என்ற ஐரிஷ்காரர், இல்யா பிரிகோகின் என்ற இரசாயனவியல் பரிசு பெற்ற பெல்ஜியம்காரர், ஜன் தின்பேர்கன் என்ற பொருளாதாரத்திற்கான பரிசு பெற்ற ஒல்லாந்துக்காரர் ஆகியோர் சேர்ந்து இந்த விண்ணப்பத்தை ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தனர்.

வடக்கு கிழக்கில் நடைபெறும் பிரச்சனை உள்நாட்டுப் பிரச்சனை என்றும் இது இனப பிரச்சனையில்லை, பயங்கரவாதப் பிரச்சனையே என்றும் துப்பாக்கிக் கலாசாரத்தை சுற்றிய இந்தப்பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கம் சமாதான தீர்வு ஒன்றை நாடுகிறது என்றும் செயலாளர் மேலும் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கில் ஐ.நா மேற்பார்வையில் தேர்தல், ஐ.நா மேற்பார்வையில் யுத்த நிறுத்தம், சமஷ்டி அமைப்பு முறை என்பன இத்திட்டத்தில் வலியுறுத்தப் பட்டிருந்தது.

## கிளாலியில் மோதல்

கடந்த வாரம் சனிக்கிழமை கிளாலிக்கடலில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் இரண்டாயிரம் பேரை பெருநிலப்பரப்பு பகுதிக்கு பாதுகாப்பாக கொண்டு வந்து விட்ட பின்னர், புலிகள் திரும்பிச் செல்லும் போதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. ஆயினும் இந்த சண்டையின் சேதவிபரங்கள் பற்றி தெரியவில்லை என்றும் தாம் துப்பாக்கிப் பிரயோகச் சத்தத்தையே கேட்டதாகவும் வந்தவர்கள் கூறினர்.

அத்துடன் வடபகுதியில் விமானத் தாக்குதலால் வெறும் வீடு ஒன்று சேதமாகியதாகவும் வந்தவர்கள் கூறினர்.

## பொருளாதார தடையை நீக்க மறுப்பு

புலிகளின் பிடியில் உள்ள பொலிசாரை விடுவிக்க, பொருளாதாரத் தடையை நீக்கக் கோரும் புலிகளை கோரிக்கையை இராணுவம் நிராகரித்துள்ளது. 'நாங்கள் பரஸ்பர கைதி மாற்றத்துக்கு சம்மதிக்கிறோம். பொருட்களை தடையின்றி செல்ல அனுமதிக்க மாட்டோம்' என கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. அராசங்கம் தற்போது படைகளின் பிடியில் உள்ள புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 61 பேரின் பெயர்களை புலிகளிடம் கொடுத்துள்ளது. 1990ம் ஆண்டு யுத்தம் தொடங்கிய பின்னர் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

பட்டரிகள், சைக்கிள்கள், எரிபொருள், ரேடியோ, காகிதாதிகள், உரம், மருந்துகள் என பல அத்தியாவசிய பொருட்கள் யாழ்ப்பாணம் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை உண்ணாவிரதம் இருக்கும் பொலிசாரின் உறவினர்கள் கொழும்பு வந்துள்ளனர். இந்த பொலிசார் தங்கள் உண்ணா விரதத்தை கைவிட்டுள்ளனர். ஆயினும் ஐவர் தொடர்ந்தும் அடையாள உண்ணா விரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

## காமினி இணைப்பு உறுதி

ஜனாதிபதி தனது அமைச்சரவையில் மாற்றம் செய்ததை அடுத்து இன்னொரு மாற்றம் விரைவில் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களான காமினியும், பிரேமசந்திரவும் மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று கருதப்படுகிறது. ஆயினும் இவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தேசிய பட்டியலில் இருந்து இரண்டு எம்.பிக்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும். ஆனால் அடுத்த மார்ச் மாதம் ஐந்து ஆண்டுகள் முடிய முன்னர் தாங்கள் பதவி நீங்கினால் தங்களுக்குரிய பென்சன் பணம் கிடைக்காது என்ற அச்சத்தில் எம்.பிக்கள் பதவி நீங்க மறுத்து வருவதாக கூறப்படுகிறது. ஆயினும் மூன்று எம்.பிக்கள் ஜனாதிபதி விரும்பினால் தாம் பதவி நீங்க தயார் என்று கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் முக்கிய அமைச்சர்கள் சிலர் இவர்கள் மீண்டும் சேர்க்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த வண்ணம் உள்ளனர். இதற்குள் காமினியின் கட்சிக்குள்ளும் லலித் ஆதரவாளர்கள் இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

## ஜெயலலிதாவின் பிரிவினைக் கோரிக்கை

தமிழ்நாட்டின் பிரிவினைக் கோரிக்கையை மீண்டும் தொடங்குவதாக ஜெயலலிதா மீது காங்கிரஸ் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை இந்திய சுதந்திர தினத்தன்று ஆற்றிய உரையில் காவேரி நீரை கர்நாடக அரசு அதிகளவில் தமிழ்நாட்டுக்கு விட வேண்டும் என்றும் இதற்கு புதுடெல்லி நீதி வழங்க வேண்டும் என்றும் ஜெயலலிதா குறிப்பிட்டார். புதுடெல்லியின் ஆற்றுநீர்க் கொள்கை இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும் என்றும் கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரத்தை பாதுகாக்க நினைக்கும் எவரும் எங்கள் தேசிய ஒற்றுமை உணர்வை இவ்வாறு வலுவிழக்க செய்ய விரும்ப மாட்டார்கள் என்றும் ஜெயலலிதா தனது உரையில் குறிப்பிட்டார். இந்த உரையே காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது.

ஜெயலலிதாவின் இந்த உரை பிரிவினைக்கான பயமுறுத்தல் என்றும் அரசாங்கம் இதற்கு வன்மையாகப் பதிலளிக்க வேண்டும் என்றும் இந்திரா காங்கிரஸ் எம்.பியான ஜெயந்தி நடராஜன் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் சங்கர் ராவ் சவாண் பேசுகையில் தான் காவேரிப் பிரச்சனையைத் தீர்ப்பதாகவும் ஆனால் அதற்காக ஜெயலலிதா இவ்வாறு பேசியிருக்கத் தேவையில்லை என்றும் தெரிவித்தார். அத்துடன் அவர் உண்மையில் அவ்வாறு பேசினாரா என்பது பற்றியும் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகவும் சவாண் மேலும் கூறினார்.

சமீபத்தில் நரசிம்மராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது ராவுக்கு எதிராக அ.தி.மு.க வாக்களித்ததை அடுத்து, ஜெயலலிதாவின் அரசை கலைக்கும்படி இந்திரா காங்கிரஸ் கோரி வருகிறது.

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொலிசார் தங்கள் உண்ணா விரதத்தை கைவிட்டுள்ளனர். இரண்டு வார காலமாக தங்களை விடுவிக்கக் கோரி இவர்கள் நடத்திய உண்ணாவிரதம் தற்போது முடிவடைந்துள்ளது. புலிகளின் பிடியில் உள்ள 39 பேரில் தற்போது ஐவரே அடையாள உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். ஒரு வார காலம் உணவின்றி இருந்தவர்களில் முப்பது பேர் கடும் சுகவீனம உற்றிருந்தனர்.

இவர்களில் சில வைத்தியசாலையில் அனுமதிக்கப ்பட்டு சிகிச்சையும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பியின் யோசனை நிராகரிப்பு

வடக்கு கிழக்கை நிர்வகிக்க இடைக்கால மாகாண சபை ஒன்றை நிறுவ வேண்டும் என்று ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த கோரிக்கையை அரசியலமைப்புக்கான அமைச்சர் சொக்ஸி நிராகரித்துள்ளார். அரசியலமைப்பில் அதற்கான வசதிகள் இல்லாததால் அதை அமுல்படுத்த முடியாது என்று சொக்ஸி சார்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

ஈ.பி.டி.பி தனது யோசனையை சபாநாயகரிடம் முன்வைத்த போது. இந்த யோசனையைப் பரிசீலிக்கும்படி சபாநாயகர் முகமது அரசியல் கட்சித் தலைவர்களிடம் கேட்டிருந்தார். ஈ.பி.டி.பியின் யோசனைப்படி 'அந்த பகுதியில் செயற்படும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாகாண சபை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும், இது தேர்தல் நடத்த உதவும்' என்று கூறப்பட்டிருந்தது.

இந்த யோசனையை புலிகளும் நிராகரித்திருக்கிறார்கள். தங்கள் மீதான தாக்குதலை நடத்துவதற்கான அரசின் தந்திரம் இது என்று வர்ணித்துள்ளனர். இந்த முறை மூலம் சில தமிழ்க் குழுக்களின் உதவியுடன் இராணுவத் தீர்வை காண அரசு முயல்கிறது என்று திலகர் றெய்ட்டர் நிருபருக்குத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாண சபை தற்போது ஆளுனரினால் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

# மீண்டும் ஹமீது

தான் பதவியேற்ற மூன்று மாதங்களுக்குள் ஜனாதிபதி விஜேதுங்க அமைச்சரவையில் முதல் முதலாக மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளார். தற்போது மீண்டும் வெளிவிவகார அமைச்சராக ஏ.சி.எஸ். ஹமீது நியமிக்கப்பட்டிருக்கிறார். பதினொரு வருட காலம் அமைச்சராக இருந்த இவர் முன்பு உடைகளை சலவை செய்ய மட்டுமே இலங்கை வருவார் என்று கிண்டல் செய்யும் அளவுக்கு வெளிநாட்டு விஜயங்களை அதிகளவில் மேற்கொண்டிருந்தார். பிரேமதாசா பதவிக்கு வந்ததும் இவரின் பதவிகளில் குறைப்பு ஏற்பட்டு, புலிகளுடனான பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

முன்ப, பிரதமர்களே வெளிவிவகார அமைச்சர்களாக இருக்கும் சம்பிரதாயத்தையும் மீறி இவரை ஜே.ஆர் நியமித்திருந்தார். பிரேமதாச இவரது வெளிநாட்டு விவகாரங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் அதற்கென தனியான ஆலோசகராக பிரட்மன் வீரக்கோனையும் நியமித்திருந்தார்.

புலிகளுடன் யுத்தம் தொடங்கிய நேரம் வரை பேச்சுவார்த்தை நடத்தி வந்த இவர் பின்னர் பிரான்ஸில் சென்று திலகருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் வதந்திகள் அடிபட்டிருந்தன. இப்போதும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காகவே இவரை மீண்டும் நியமித்திருப்பதாக ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

தகவல் அமைச்சர் லொக்குபண்டார தற்போது கல்வி அமைச்சராக்கப்பட்டிருக்கிறார். அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்பட்ட போதும் நிதி, பாதுகாப்பு என்பவற்றுக்கு அமைச்சர்கள் இன்னமும் நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதியே அவற்றைக் கையாள்கிறார்.

# கிளாலி மோதல்கள்

கிளாலியில் சென்ற மாதம் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் காணாமல் போனதாக குறிப்பிடப்பட்ட ஒன்பது பேர் முகாம்களில் கைது செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. இவர்களில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் ஏழு பேர் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு படகுகளின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது ஒன்பது பேர் காணாமல் போயிருந்தனர்.

# கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசு உத்தேசித்துள்ளது. தேர்தல் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான தேதிகளாக செப்டம்பர் 3 முதல் 10ம் திகதி வரை தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார் என்று அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். தேர்தல் ஆணையாளர் திணைக்களம் இந்த செய்தியை ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள மாநகர, நகர, பட்டண, கிராம சபைகளுக்கு இந்த தேர்தல் நடத்தப்படும்.

1991 இல் இலங்கை முழுவதும் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்ட போதும் வடக்கு கிழக்கில் நடைபெறவில்லை.

சென்ற மாதம் இது குறித்து கருத்து தெரிவித்த இராணுவம் இவ்வருட இறுதிக்குள் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்று தெரிவித்திருந்தது. வேட்பு மனுத்தாக்கல் செய்து ஐந்து முதல் எட்டு வாரங்களுக்குள் தேர்தல் நடைபெற வேண்டும்.

# பிக்குவுக்கு மரணதண்டனை

தான் திருமணம் செய்ய விரும்பிய பெண்ணின் தந்தையைக் கொன்ற பிக்குவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. வண.பன்னல சோமவன்ச தேரோ எனப்படும் பிக்கு பன்னிரண்டு வயதான பெண் ஒருத்தி மேல் காதல் கொண்டிருந்தார். இதற்கு பெண்ணின் தந்தையான விஜந்திர கே சோமரத்தின எனப்படும் 45 வயதானவர் மறுப்புத் தெரிவித்ததால் அவரை 90 ஜனவரி 15 அன்று கொலை செய்திருந்தார்.

பிக்கு பெண்ணின் தந்தையை தடியால் அடித்துக் கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும் நீண்ட காலமாக இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படாததால் இவர் ஆயுட்தண்டனையை அனுபவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தொடர்ந்து போராடும் புலிகள்

அரசாங்கம் தொடர்ந்தும் தமிழ் மக்களை அடக்க முயன்றால் தமிழ் மக்களுக்கு தனிநாடு அமைக்கும் வரை சண்டையிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று புலிகள் கூறியுள்ளனர்.

ஜெனிவாவில் நடைபெற்ற சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புக்கும் பாரபட்ச தடுப்புக்குமான ஐ.நா. உபகுழுவின் கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதி திலக் மாரப்பன வழங்கிய அறிக்கைக்கு பதிலாக வெளியிட்ட அறிக்கையிலேயே புலிகள் இவ்வாறு கூறியுள்ளனர். திலக் மாரப்பன அடிப்படைப் பிரச்சனையை புரிந்து கொள்ள தவறி விட்டார் என்றும் மாரப்பன தெரிவுக்குழு பற்றி கூறியது தவறு என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுப் பார்வையில் நியாயமான தோற்றத்தை பெற தெரிவுக்குழு பயன்படும் அதே வேளை, அரசாங்கம் இனஅழிப்பு இராணுவ நடவடிக்கைகளை தொடர்கிறது என்றும் தெரிவித்ததுடன் ஐ.நா அகதிகள் அமைப்பு சங்குப்பிட்டிப் பாதையை திறக்க முயன்றதற்கு புலிகள் மறுப்பு தெரிவித்தனர் என்று மாரப்பன கூறியதற்கும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா அகதிகள் அமைப்பின் முயற்சியை தாம் வரவேற்பதாகவும் இராணுவம் அங்கு சோதனை முகாம் அமைப்பதற்கு தாம் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் கூறிய புலிகள் உண்மையில் ஐ.நா அகதிகள் அமைப்பின் மேற்பார்வையிலேயே மக்கள் பயணம் செய்ய வேண்டும் என தாம் கேட்டுக் கொண்டதாக கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடு சென்றேரிடம் வரி

மடு ஆலயத் திருவிழாவில் கலந்து கொள்ள வந்த யாத்திரிகர்களிடம் புலிகள் இருநூறு ரூபாய் வரி அறவிட்டதாக செய்திகள் கூறுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து செல்வோரிடமே இந்த வரி அறவிட்டிருப்பதாக கூறப் படுகிறது. பணம் செலுத்தா விட்டால் அவர்களை செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று புலிகள் கூறியதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அத்துடன் மடு ஆலயம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் இருப்பதால் அரசாங்கமும் அங்கு செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தியுள்ளது.

## இராணுவம் ஆட்சேர்க்கிறது

இராணுவம் தற்போது தனது அளவை அதிகரிக்க உள்ளது. தற்போதுள்ளதுடன் மேலும் பத்து ஆட்படைப் பிரிவுகள் சேர்க்கப்பட உள்ளன. ஜானகபுர தாக்குதலுக்கு பின்பே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போது எண்பதாயிரம் பேர் உள்ள இராணுவத்தில் முப்பது ஆட்படைப் பிரிவுகள் உள்ளன. கடந்த பத்தாண்டுகளில் இராணுவத்தின் அளவு பத்து மடங்கு அதிகரித்துள்ளது. ஆயினும் கைப்பற்றிய பிரதேசங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க போதியளவ, ஆட்கள் இராணுவத்தில் இல்லை.

## அகதிகளின் வீடுகள் எரிந்தன

பொலநறுவ மாவட்டத்தில் 250 முஸ்லிம் அகதிகளின் வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன. 36 வீடுகள் எரிந்ததுடன் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்றனவும் எரிந்துள்ளன. மாணிக்கம்பிட்டிய என்ற கிராமத்திலேயே இந்த தீவிபத்து நிகழ்ந்தது. இந்த விபத்தில் யாரும் காயமடையவில்லை. மண்ணெண்ணெய் விளக்கு ஒன்றே இந்த விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து புலிகளால் விரட்டப்பட்ட பின்னர் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இவர்கள் மூன்று வருடங்களுக்கு முன் மாணிக்கம்பிட்டியவில் வீடுகளை அமைத்திருந்தார்கள்.

## இப்படியும் சேதிகள்-

**ஜனமித்திரன்**

பிரதிச் சபாநாயகர் திரு. காமினி பொன்சேக அவர்களுக்குச் சொந்தமாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 'சனசும ஹொலிடே ரிசோட்' என்னும் பெயரில் உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்று இருந்தது. இதனை இராணுவத்திற்கு விற்பதற்கென இதன் பெறுமதியாக 18 இலட்சம் ரூபாய் ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் பின்னர் 75 இலட்சம் ரூபாயாக மதிப்பீடு செய்து இராணுவத்தால் கொள்வனவு செய்யப்பட்டதாக அறிய முடிகிறது.

பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேக அவர்களின் இவ் ஹோட்டல் தொடர்பான கொடுக்கல் வாங்கல் ஒரு பெரிய கதையாகும்.

இவ் ஹோட்டலை 1983 ம் ஆண்டு ஜூலை மாதம் திஸ்ஸமகராமை மக்கள் வங்கியில் அடைமானமாக வைத்து ஒன்பது இலட்சம் ரூபாய் பெறப்பட்டது. 1983 ம் ஆண்டு இரண்டு இலட்சம் ரூபாய் நிரந்தர மேலதிகப் பற்றுகவும் ஒன்றரை இலட்சம் ரூபாய் தற்காலிக மேலதிகப் பற்றுகவும் பெறப்பட்டது.

1987ம் ஆண்டு ஜூலை 1ம் திகதி இக்கடன்கள் அனைத்தும் அடைக்கப்பட்டிருக்க வேண்டும். 1992ம் ஆண்டு பெப்ரவரி 18ம் திகதி வரையான செலுத்தப்படாத வட்டி இருபத்தி நான்கு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் ரூபாய் நிலுவையாகவுள்ளது. இச் சொத்துக்கள் அனைத்தும் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன. தென் இலங்கையில் நிலவிய அரசியல் பதட்ட நிலமை காரணமாக 1989ம் ஆண்டு இவ் ஹோட்டல தீக்கிரையாக்கப்பட்டு கட்டிடங்கள் அழிந்தன. அதுவரை காலமும் காப்புறுதி கட்டணத்தைச் செலுத்திய மக்கள் வங்கி திஸ்ஸமாறமைக் கிளை தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திடமிருந்து இழப்பீடு கோரியதோடு முப்பது இலட்சம் ரூபாய் இதற்காக தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தால் அனுமதிக்கப் பட்டது. ஆனால் அனுமதிக்கப்பட்ட இவ் முப்பது இலட்சம் ரூபாய் மக்கள் வங்கிக் கிளைக்கு வழங்கப்படவில்லை. பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேக அவர்களே இதனையும் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் பாழடைய விடப்பட்ட இவ் வீரவிய சனசும ஹொட்டல் இராணுவத்தின் பாவனைக்காக வழங்கப் பட்டதோடு தீயினால் அழிந்த கட்டிடங்களை புனரமைப்புச் செய்ய 9 இலட்சத்து 38ஆயிரம் ரூபாய் இராணுவத்தால் செலவு செய்யப்பட்டது. இதனிடையே 1990 ம் ஆண்டு அக்டோபர் மாதம் நிலத்தினுடைய பெறுமதியாக 18 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் பிரதிச் சபாநாயகர் அத்தொகைக்கு சம்மதிக்காத காரணத்தால் இராணுவத்தால் 9 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு புனரைமைப்புச் செய்யப்பட்ட கட்டிடங்களுடன் இதன் பெறுமதி 75 இலட்சம் ரூபாய் என மீள மதிப்பீடு செய்யப்பட்டது. முதலாவது மதிப்பீட்டிற்கும் இரண்டாவது மதிப்பீட்டிற்கும் இடையேயான பாரிய வேறுபாடு குறித்து இராணுவ பிரதானிகள் ஆச்சரியப்பட்ட போதிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க அவர்களின் பணிப்பின்படி ரூபாய் 75 இலட்சத்துக்கு இவ் ஹோட்டல் கொள்வனவு செய்யப்பட்டது. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பிரதிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறையும்

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறைப்பது பற்றி ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குவார். பதினெட்டுப் பேர் கொண்ட இக்குழு 78ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் பற்றி ஆராயும்.

முன்பு ஜனாதிபதிப் பதவி வெறும் சம்பிரதாய பூர்வமானதாக இருந்தது. பின்னர் ஜே.ஆர் ஆட்சிக்கு வந்ததும் முழு அளவிலான அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை கொண்டு வரப்பட்டது. இதில் ஜனாதிபதியே நாட்டுக்கும் அரசுக்கும் தலைவராக இருப்பார்.

# புதிய தொடர்பு நிறுவனம்

தற்போது இலங்கையில் அதிகரித்து வரும் தொலைபேசிப் பாவனையை நிவர்த்தி செய்ய புதிய நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா டெலிக்கொம் சேர்விஸ் எனப்படும் இந்த நிறுவனம் அரச நிறுவனமான சிறிலங்கா டெலிக்கொம் நிறுவனத்துடன் போட்டியாக இயங்கும். மேலும் சுமார் ஒரு லட்சம் தொலைபேசி இணைப்புகளை இந்த நிறுவனம் வழங்கும்.

தற்போது நாடெங்கும் இரண்டு லட்சம் தொலைபேசிப் பாவனையாளர் உள்ளனர் எனவும் இந்த எண்ணிக்கையை அடுத்த இரு வருடங்களில் இரண்டு மடங்காக்குவதே நோக்கம் என்றும் கூறப்பட்டுள்ளது.

பொதுப் பங்கு நிறுவனமான இந்நிறுவனத்தில் அரசாங்கத்திற்கு 51 வீதப் பங்குகள் இருக்கும்.

அத்துடன் இனிமேல் செலுலர் தொலைபேசிகளுக்கு வரிசலுகை அளிக்கப்படும்.

# சார்க் மாநாடு தீர்க்க வேண்டும்

தென்னாசிய நாடுகள் அந்தப் பிராந்தியத்தில் நடைபெறும் பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்று புதிய வெளிநாட்டமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் தெரிவித்திருக்கிறார். சார்க் நாடுகளின் யாப்பின்படி இரு தரப்பு பிரச்சனைகள் எதுவும் எழுப்பப்படக் கூடாது, மாறாக மொத்த பிராந்தியத்திற்குமான பிரச்சனைகளே ஆலோசிக்கப்பட வேண்டும் என்று இருக்கின்ற போதிலும் இவ்வாறான பிரச்சனைகளை ஆலோசிப்பதற்கு வழி செய்யப்பட வேண்டும் என்றும் இல்லாவிட்டால் வெளியார் தலையீட்டுக்கே வழிவகுக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

தென்னாசிய தொடர்பு சாதன அமைப்பின் தொடக்க விழாவின் போதே ஹமீது இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

---

சபாநாயகர் காமினி பொன்சேகாவுக்கு வழங்கிய 30 இலட்சம் புனரமைப்புக்கென இராணுவம் செலவு செய்த 9 இலட்சம் கொள்வனவு விலையான 75 இலட்சம் அனைத்துமாக காமினி பொன்சேகாவின் இவ் ஹோட்டலுக்காக அரசாங்கம் ஒரு கோடி பதினான்கு இலட்சம் ரூபாய்களை செலவு செய்தது.

இக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் பிரதிச் சபாநாயகர் திரு காமினி பொன்சேக அவர்களால் காலம் சென்ற ஜனாதிபதி திரு பிரேமதாச அவர்களுக்கு 1991ம் ஆண்டு மார்ச் மாதம் அனுப்பிய தனிப்பட்ட கடித மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பின்னரேயே இடம் பெற்றன.

அக்கடிதத்தின் இறுதி அடிகளில் இவ்வாறு காணப்படுகின்றன:

"தேர்தல் தொகுதியின் செலவுகள் சேர்க்கப்படாமலேயே சாப்பாடு பானங்களுக்காக மட்டும் மாதாந்தம் ரூபா 15–16 000 செலவு செய்ய நேரிடுவதால் பாராளுமன்ற சம்பளம் மூலம் விவகாரங்களை கவனிக்க முடியாதுள்ளது.

நீர் அலை மூக்குக்கு மேல் பாயுமுன்னர் மேன்மை தங்கிய நீங்கள் உதவி செய்வீர்களாயின் நன்றியுடையவனாயிருப்பேன். மேன்மை தங்கிய உங்கள் கவனத்தை எதிர்பார்த்து நன்றி கூறுகிறேன்,"

(தகவல் ராவய ஆகஸ்ட் 1,1993)

★ ★ ★

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் நெருங்கிய சகாக்களின் வர்த்தக நிறுவனங்களான வெள்ளவத்தை டெல்மன் வைத்தியசாலை, நவலோக வைத்தியசாலை, MTT தொலைக்காட்சி சேவை, டெல்ஷான் (TNL) தொலைக்காட்சி சேவை ஆகியவை இலங்கை முதலீட்டுச் சபையால் (BOARD OF INVESTMENT OF SRI LANKA- முன்னர் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு என அழைக்கப்பட்டது) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு என்னும் அந்தஸ்தை வழங்கியது இலங்கையிலுள்ள வர்த்தகர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கைத்தொழில் விவசாயம் ஆகிய துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் வெளிநாட்டுச் செலவாணியை இலங்கைக்கு ஈட்டித் தரக்கூடியதுமான தொழில்துறைகளுக்கு மட்டுமே இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் அங்கீகாரம் அளிப்பது வழக்கமாகவிருந்தது. இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெறும் வர்த்தக நிறுவனங்களுக்கு 5–15 வருட காலம் வருமான வரியிலிருந்து பூரண விலக்கு, வரிவிலக்கு காலத்திற்குப் பின்னர் வரி நிவாரணம், இறக்குமதிப் பொருட்களுக்கு சுங்க வரியிலிருந்து விலக்கு, இலாபம் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான சுதந்திரம் ஆகிய பல விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன இவ் விசேட சலுகைகளைப் பெறும் டெல்மன் வைத்தியசாலை உரிமையாளரான திரு எம்.எம்.முகைதீன் அவர்களுக்கே ஜனாதிபதி பிரேமதாசாவின் கம்உதாவ திட்டம் ஆரம்பமான காலத்திலிருந்து கம்உதாவ கட்டிடங்களுக்கான கொந்தராத்துக்கள் வழங்கப்பட்டன. கொன்சோல் எக்ஸ்போ கம்பனியின் உரிமையாளரும் இவரே. M.T.T தொலைக்காட்சி மகராஜா நிறுவனத்தைச் சார்ந்ததாகும். நவலோக வைத்தியசாலை H.K. தர்மதாசாவின் கம்பனிக்கு உரித்தானது. பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்களின் சகோதரரான ஷான் விக்கிரமசிங்க அவர்களின் உடமையே டெல்ஷான் (TNL) தொலைக்காட்சி சேவை

தகவல் (ராவய ஆகஸ்ட் 08,1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் மனைவிக்கு இடையில்

சிவப்பிரகாசம்

சந்தோசமான வாழ்க்கை தாமாக வந்து அமைவதில்லை. நாமாக ஏற்படுத்திக் கொள்வது. ஆனால் அமைதி குலைந்து நிம்மதி இழந்து மௌன வேதனை அடைந்து எத்தனையோ பேர் வாழ்க்கையின் வளமான நாட்களை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் திருமணமான பின் கணவன் மனைவிக்கிடையில் விரிசல்களும் மனத் தாங்கல்களும் இதனால் விரக்தியும் ஏற்படுவதை கண்முன்னாலே பல இடங்களில் கண்டிருக்கிறோம். சிலவேளை கணவன் மனைவி ஒருவருக்கொருவர் எதிரிகள் போன்று நடந்து கொள்வதும் காழ்ப்புணர்ச்சியினால் பழிவாங்கும் எண்ணத்தினால் பீடிக்கப்படுவதும் கூட எமது சமுதாயத்துக்கு புதியதல்ல. இவையெல்லாம் ஏன்? யார் தவறு? சுயவிமர்சன மூலமோ பரஸ்பர புரிந்துணர்வு மூலமோ சிந்தனைத் தெளிவினால் இவற்றை வெற்றி கொள்ளலாமா?

இது பற்றிய ஒரு சமூக நல்லெண்ண ஆய்வை எழுத முற்படும் போது பெரிய தடைக்கல் ஒன்று முன்னாலே கிடக்கிறது. இப்படி எல்லாம் "பச்சையாக" எழுதலாமா? தமிழ்ப்பண்பாடு கலாச்சாரம் என சில எழுத்தாளர்களோ விமர்சகர்களோ கூச்சலிடலாம். கணைகளை வீசலாம். ஆனால் இவ்வாறான "வெறும் விமர்சனத்தனங்கள்" வாழ்க்கைக்கோ சமூகத்துக்கோ எவ்வித உயர்வையோ மறுபரிசீலனையையோ ஏற்படுத்தப் போவதில்லை என்பது எனது அறிவுக்கெட்டிய வரையிலான அபிப்பிராயம் என்பதால் அந்த தடைகள் எனது கருத்துக் கண்களுக்கு தெரியவில்லை. மொழி, இலக்கியம், கலாச்சாரம் மதம் எல்லாமே மனித வாழ்க்கைக்கு அடுத்த படியாகத்தான் வரும். மனித வாழ்க்கையே வரண்டால் எதுவுமே அர்த்தமற்றதாய் போய்விடும்.

பொருத்தம் பார்த்து திருமணம் செய்தால் அந்நியோன்னியமான தாம்பத்திய வாழ்வு ஏற்படும் என்பது பல இந்துக்களின் நம்பிக்கை. ஆனால் நடைமுறைக்கும் இந்த நம்பிக்கைக்கும் தொடர்பு இருப்பதற்கு ஆதாரம் இல்லை. குடும்ப வாழ்க்கையில் புகுந்த எத்தனையோ பேர் மனதுக்குள்ளே குமைந்து கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிப்பது வெளியில் தெரிவதில்லை. அவர்கள் ஒற்றுமையான உண்மைத் தம்பதிகள் என்று நினைத்துக் கொள்வோம்.

"அவன் குடுத்து வைச்சவண்டா. படிப்புக்கு படிப்பு- வடிவுக்கு வடிவு. இப்படி அமையிறதே அதிஸ்டம்" என்று எல்லோரும் பேசிக் கொள்வார்கள். ஆனால் வீட்டுக்குள்ளே நாய் பூனை கடியாக இருக்கும். இவளை ஏன்தான் கட்டினேனோ என்று ஆண் வெதும்ப இப்படி பெற்றோர் தள்ளிவிட்டு பாழடிச்சு விட்டார்களே என்று பெண் செய்வதறியாது நிற்க! எத்தனை எத்தனையோ குடும்பங்கள். காதல்



மணம் செய்தவர்கள் கூட சில சமயங்களில் தமது தேர்வு சறுக்கிவிட்டதே என்று வருந்துவதும் உண்டு. மணம் செய்தவர்கள் கூட சில சமயங்களில் தமது தேர்வு சறுக்கிவிட்டதே என்று வருந்துவதும் உண்டு.

ஜடங்கள் இணையும் போதே "வெடிக்கும்" தருணங்கள் உண்டென்றால் மனங்கள் இணையும் போது வெடிப்புகளுக்கு எத்தனையோ சாத்தியம் இருக்கிறது. இந்த மனங்களையோ அதன் சுரங்களையோ பலர் பொருட்படுத்துவதில்லை. அப்படி ஒன்று இருப்பதை உணர்வதுகூட இல்லை. இதுதான் வெடிப்புகளுக்கு முதல் வித்து. ஒவ்வொருவரின் மனமும் ஒரே மாதிரியாக ஒரே தொனியில் இருக்கும் என நாம் நினைப்போமானால் எங்களைப்போல விபரம் அற்றவர்கள் எவரும் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தமது துணையின் மனங்களை நுகர்ந்து அதனுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டால் அது வெற்றிக்கு முதல் படி. அதை எப்படி செய்யலாம்?

மனவிரிசல்களுக்கு பல காரணங்கள் இருப்பினும் மிக முக்கியமானது எனக் கருதப்படுவது தம்பதிகளுக்கிடையிலான பாலியல் பிரச்சனைகள் என்பதை ஆய்வுகள் தெரிவிக்கிறது. பாலியல் பிரச்சனைகள் அதன் கிளைகளாக வேறு உருவங்களிலும் வரும். சந்தேகம்- வெறுப்பு- கடமைகளைப் புறக்கணிப்பு- எரிந்து விழுதல்- இப்படியெல்லாம். ஆனால் இதற்கு காரணம் பாலியல் பிரச்சனை என்பதை பல தம்பதிகள் அறிந்து கொள்வதில்லை. அறிந்து கொண்டவர்களும் அதற்கான பரிகாரம் தேடுவதில்லை. பரிகாரம் தேட முனைபவர்களுக்கு அதை தெரிந்து கொண்டவர்களும் அதற்கான பரிகாரம் தேடுவதில்லை. பரிகாரம் தேட முனைபவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை தெரிந்து கொள்ள இடமில்லை. உளவியல் மருத்துவ ரீதியான பல நூல்கள் வேற்றுமொழிகளில் இருப்பினும் அதைப் புரிந்து கொள்ள எல்லோராலும் முடியுமா? தமிழிலும் ஒருசில நூல்கள் (மஞ்சள் புத்தகங்கள் அல்ல) வந்திருக்கிறது. அவை இங்கு கிடைப்பதுமில்லை. அதைப் படிப்பதைக் கூட "கலாச்சார பாதுகாவலர்கள்" அனுமதிப்பதில்லை. அப்படி ஒரு நூலை ஒரு பெண் படித்தால் அதை யாரேனும் (தாம் புத்திஜீவிகள் என நினைத்துக் கொள்ளும் பலர் உட்பட) கண்டுவிட்டால் எப்படியெல்லாம் கதைபரவும் என உங்கள் மனக்கண்ணை திறந்து பார்த்தால் தெரியும். இது ஒரு "கட்டுக்கோப்பான" சமூகம் என பெயரளவில் காலாகாலம் நிலைத்து வந்துவிட்டது. கணவன் மனைவிக்கிடையிலான பாலியல் பிரச்சனைகள் பற்றி இனிப் பார்ப்போம்.

திருமணம் முடிந்து விட்டது. இப்போது கணவன் மனைவி இருவரும் புது வாழ்க்கையில்! "அட... போட்டோவில் பார்த்தபோதும் கோவிலில் பார்த்தபோதும் வடிவாய்தானே இருந்தது. இப்ப பார்க்க இப்படி இருக்கே' என்று கணவனோ மனைவியோ சஞ்சலப்படக் கூடாது. அவ்வாறான சஞ்சலத்தால் அர்த்தமும் இல்லை. பிரயோசனமும் இல்லை. சில கணவன்மார் இதை அடிக்கடி சொல்லி மனைவியரை கிண்டல் செய்வதுமுண்டு. இந்தக் கிண்டல்கள் சில பெண்களின் மனத்தில் எங்கேயாவது சிக்குப்பட்டு அவ்வப்போது அதிருப்தியை உருவாக்குகிறது. இதை ஆண்கள் உணர்வதில்லை. அழகு என்பது இயற்கையாக அமைவது. ஆனால் கவர்ச்சி செயற்கையான உருவாக்கப்படக் கூடியது. அழகிலும் பார்க்க கவர்ச்சிதான் ஆண் பெண் உறவுகளுக்கு உதவுகிறது. தெருவிலே மற்றவர்கள் பார்த்து பொறாமைப் படும்படி உடையணிந்து செல்லத் தெரிந்த பல பெண்களுக்கு கணவன் களிக்கும்படி நான்கு சுவர்களுக்குள்ளே கவர்ச்சியைக் காட்டத் தெரியாது. ''இருட்டுக்குள்ளே எல்லாமே ஒன்றுதான்'' என இளைஞர்கள் நகைச்சுவையாக கதைப்பது உணரப்பட வேண்டிய ஒன்று. கவர்ச்சி என்பது தோற்றத்தில் மட்டுமில்லை. வார்த்தைகளிலும் இருக்கிறது என்பதை பலர் அலட்சியம் செய்துவிடுவார்கள். பேச்சிலே கெஞ்சல்களும் கொஞ்சல்களும் வேண்டும். குழைய வேண்டும். குறைகளைச் சொல்லும் போதுகூட இங்கிதம் இணைந்து வரவேண்டும்.

உடலுறவின் போது பெண்ணுக்கு ஏற்படும் இன்பம் ஆணுக்கு ஏற்படும் இன்பத்திலும் பல மடங்கு அதிகமானது. ஆனால் அனேகமான பெண்கள் (மேலைத் தேசம் உட்பட) இத்தகைய இன்பத்தை அனுபவிக்கவில்லை என்று புள்ளிவிபர ஆய்வுகள் கூறுகிறது. பல பெண்களுக்கு இப்படி ஒன்று இருப்பதே தெரிந்திருக்கவில்லை. இதற்கான சந்தர்ப்பத்தை (உரிமையை) ஆண்கள் பெண்களுக்கு அளிப்பதில்லை. ஆண்கள் பலரும் "இதென்ன பெரிய விசயமா. எத்தனை நீலப் படங்கள் பார்த்திருக்கிறோம்" என மார்த்தட்டிச் சொல்வார்கள். ஆனால் அவை பெரும்பாலும் கற்பனைத்தனமானவை என்பதையும் நிஜவாழ்க்கைக்கேற்ற மன உணர்வு, சாஸ்வதமான அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்பதையும் ஆண்கள் உணர்வதில்லை. அதற்கான பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள ஆண்களும் பெண்களும் முதலில் தமது துணையின் உணர்வுக் போக்கை அவதானிக்கவேண்டும். "உணர்வுப்போக்கா! இவருக்கா! விடிஞ்சா பொழுபட்டா வேலை அல்லது சினேகிதக் கூட்டத்தோடை குடியும் ஊர்விசளமும். மனுசியைப் பற்றி.... மனங்களைப்பற்றி ... எப்பவாவது? ஆரட்டைச் சொல்ல" இப்படிப் பல பெண்கள் மனதுக்குள்ளே சொல்லக்கூடும். "மாறி மாறி சீலைகளையும் நகைகளையும் போட்டு ஊர் பெண்டுகளுக்கு விலாசம் காட்டத்தான் தெரியும். நான் ஒருத்தன் முறியோ முறியெண்டு முறிஞ்சு உழைச்சுக் கொட்டுறன். சந்தோசமா சிரிச்சு கதைத்து இங்கிதமாக சல்லாபமாக... கலியாணம் கட்டிப் போட்டும் குஷ்புவையோ ரோஜாவையோ நினைச்சுக்கொண்டுதான் தூங்க வேண்டியிருக்கு. ஏதாச்சும் சொன்னா சிணுங்குது அல்லாட்டில் சீறுது" என ஆண்கள் வெளிப்படையாகவே சொல்லலாம்.

இவ்வாறான பிரச்சனைகள் இருவரும் மனம் விட்டுக் கதைப்பதனாலும் ஒருவரின் உணர்வை மற்றவர் புரிந்து கொள்வதன் மூலமும் மட்டுமே தீர்க்க முடியும். இதைக் கால தாமதம் செய்வது புத்திசாலித்தனமானதல்ல. குளம்பிய குட்டையில் மீன்பிடிக்கக் காத்திருக்கும் சிலருக்கு இது வாய்ப்பைக் கொடுக்கிறது. பசியுடன் இருப்பவர்களுக்கு "அப்போது" எதுவும் நிதானமாக முடிவெடுக்க இயலாமல் வேண்டாத விளைவுகள் ஆகின்றது. எல்லாம் முடிந்தபின் ஆத்திரப்பட்டு ஆகாத காரியங்களை செய்வதிலும் ஆரம்பத்திலேயே சற்று சிந்தித்து பரிகாரம் தேட முனைவதுதான் புத்திசாலித்தனமாக செயல். சூழல் திரைப்படங்கள் தொலைக்காட்சிப்படங்கள் மட்டுமன்றி காம உணர்வுகளைத் தூண்டும் உணவுமுறைகளும் எரியும் நெருப்பில் எண்ணையை வார்க்கின்றன.

பெண்கள் பாலியல் தேவைகளைப் பொறுத்த முறையில் ஆண்களிடம் இருந்து எதிர்பார்ப்பவை எவை? பல தமிழ்ப்பெண்கள் இது பற்றி வெளியில் பேச விரும்பாவிடினும் (இயலாமை) அவர்களிடம் உள்ளத்து உணர்வுகளை அறிய வேண்டியது கணவன்மார்களின் தலையாய கடமை. இவ்வாறான பெண்களின் இயலாமையை "போலித்தனம்" என்று சில எழுத்தாளர்கள் சிந்திக்காமல் எழுதியுள்ளார்கள். "உங்களுக்கு உரிமை இருக்கு. சொல்லுங்க. சொல்லுங்க " என்று ஒருபுறம் சொல்லிக் கொண்டு மறுபுறம் அவர்களுக்கு வாய் பூட்டி வைத்திருப்பதும் எமது சமுதாயம் என்றால் அதையும் மறப்பதற்கு எம் சமுதாயத்திடம் வார்த்தைகளுக்கா பஞ்சம்!

தொடரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி 15 இந்திய சுதந்திரதினம் எமது சுதந்திரத்தையும் எண்ணிடுவோம்!

**கோபி**

ஆடி 29,1987 ம் ஆண்டு இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 6 வருடங்களாகி விட்டன. சற்று அந்த நாட்களை திரும்பிப் பார்ப்பது இன்றைய நிலையில் நலலதாகும் இந்திய அமைதிப்படை எம்மைத் தேடி வருவதற்கு முன்னால் பெங்களூருக்கு அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி வருகின்றார். அவரைச் சந்திப்பதற்கு பிரபாகரன் மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி ஆருடன் விமானத்தில் செல்கின்றார். பிரபாகரனுடன் அரவது மெய்ப்பாதுகாவலர்கள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் சமாதான ஒப்பந்தம் பற்றிப் பேசி அங்கு ஒரு பேரம் முடிக்கப் படுகின்றது. பலகோடிகள் கைமாறின.

புலிகளின் முழுச் சம்மதத்துடன் இந்திய அமைதிப்படை இலங்கை வந்தனர். அவர்கள் புலிகளாலும் தமிழ் மக்களாலும் எவ்வாறு வரவேற்கப் பட்டார்கள் என்பது யாவரும் அறிந்ததே!

ஒப்பந்தத்திற்கு ஓரிரு வருடங்களிற்கு முன்புதான் ராஜீவ் அதிகாரத்திற்கு வந்திருந்தார். அரசியலில் அனுபவமற்ற ராஜீவை சிங்கள அரசியல் சாணக்கியன் ஜே. ஆர் ஓர் வலைக்குள் வீழ்த்தினார். இலங்கையை 9 மாகாணங்களாகப் பிரிந்து அவற்றிற்கு தனித்தனியாக அரசுகளை ஏற்படுத்தி இந்தியாவில் உள்ளது போல் மாநில அரசுக்கான அதிகாரங்களைக் கொடுப்பது தமிழ் மக்களிற்கு வடக்கு, கிழக்கு என இரண்டு தனியான அரசுகளை ஏற்படுத்தி இரண்டு மாநில முதல்வர்களைக் கொடுப்பது இத்திட்டத்தின் மூலம் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தை நிரந்தரமாக இரண்டாகப் பிரிப்பதே ஜே.ஆரின் தந்திரம். அரசியல் சதுரங்கத்தில் தான் ஏமாற்றப் படுகின்றோம் என்பதை அறியாத ராஜீவ் இதனை ஏற்றார். ராஜீவ் இலங்கைத் தமிழ் குழுக்களையும், அரசியல் தலைவர்களையும் அழைத்து இதுதான் தீர்வு! நீங்கள் இரண்டு மாகாணங்களைப் பெற்று இனப் பிரச்சனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வாருங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்த நிலையில்– ஒரு சிலர் என்று தான் கூறவேண்டும்– வடக்கையும், கிழக்கையும் பிரிக்கச் சம்மதிக்கமாட்டோம் என்று யதார்த்த நிலைமைகளை எடுத்துக் கூறி ராஜீவைச் சம்மதிக்க வைத்தனர். இவ்வாறு ராஜீவைச் சம்மதிக்க வைக்க கிட்டத் தட்ட 2 மாதங்கள் சென்றன என்றால் நம்புவீர்களா? இந்தக் கடமையைச் செய்தவர்கள் நிச்சயம் புலிகள் அல்ல, புலிகள் பேரம் பேசுவதிலும் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் தாங்கள் தான் என்பதிலுமே கவனத்தைச் செலுத்தினர்.

இறுதியில் தான் ஜே.ஆரின் நயவஞ்சகத்தால் ஏமாற்றப் பட்டதை உணர்ந்த ராஜீவ் தானே முன் நின்று தமிழ் மக்களிற்கு குறைந்த பட்ச உரிமைகளையாவது எடுத்துக் கொடுப்பது என்று முடிவெடுத்தார் ஜே.ஆரை டெல்லிக்கு அழைத்து ஒப்பந்தத்தை முடிக்கும் திறன் இருந்தும் தாமே இலங்கை வந்து சிங்கள இராணுவச் சிப்பாயிடம் அடி வாங்கி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

புலிகளுடனான பேரத்தின் படி ராஜீவ் புலிகளின் பிரதிநிதிகளிற்கே வட-கிழக்கு இணைந்த மாகாண அரசில் சரி பாதி இடம் அளிக்க முன்வந்தார் ஏனைய பாதி தான் மற்றைய குழுக்களிற்கும் அரசியல் தலைவர்களிற்கும், முஸ்லீம்களிற்கும்! கோடிகள் பெற்றும் சரி பாதி அதிகாரம் பெற்றும் திருப்தியடையாத புலிகள் தம்மையே முற்றுமுழுதான தமிழர்களின் பிரதிநிதி என்று கூறும்படி இந்தியாவை வற்புறுத்தினர். அதற்கு ராஜீவ் தேர்தல் ஒன்றின் மூலம் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று ஏகோபித்த பிரதிநிதிகளாகலாம் என்றார். தேர்தலா? அது புலிகளின் ஜன்மத்துப் பகையாயிற்றே! தேர்தல் முறை என்பது அவர்கள் இயக்கத்திலும் இல்லை. அவ்வுரிமையை அவர்கள் உள்ளவரை தமிழ் மக்களிற்குக் கொடுக்கப் போவதுமில்லை.

இந் நிலையில் சிங்களக் கடற்படையால் உயிருடன் (?) பிடி பட்ட புலிகளை விடுவிக்கும் படி இம்மாவீரர்கள் இந்தியாவைக் கெஞ்சினர். அது கூடச் சாத்தியமாயிருக்கும் அதற்குள் அவர்களிற்கு விஷம் கொடுத்து புலிகளே அவர்களைக் கொன்றனர். அதன் பின் இதனைத் தமிழ் மக்களிற்கு இருந்த மிகப் பெரிய பிரச்சனையாக புலிகள் மாற்றினர். புலிகளின் பெண்கள் அமைப்பான சுதந்திரப் பறவைகளைக் கொண்டு இந்திய இராணுவ முகாம்களிற்கு முன்பாக கல்வீசிக் கலாட்டா செய்தனர். இந்திய இராணுவத்தை எரிச்சலூட்டினர். அதனால் ஆத்திரப்பட்ட இந்திய இராணுவம் எமது மக்களுடன் ஆரம்பத்தில் நடந்து கொண்ட முறைகள் கண்டிக்கத் தக்கவையே. எமது மக்களைக் காப்பாற்றுவதற்காக வந்து இந்திய அமைதிப் படையினர் எமது மக்களைக் கொன்றொழித்தது மன்னிக்க முடியாதது! ஆயினும் எமது மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டிய கடமை இந்திய அமைதிப் படையினரை விட எமது மக்களின் தலைவர்கள் என்று கூறிக் கொண்ட புலிகளிற்கே அதிகளவில் இருக்கவேவண்டும் என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்திய இராணுவத்தை போரிட அழைத்து இடையில் அகப்பட்டு இறந்த அப்பாவி மக்களை வைத்து தமக்கு அரசியல் ஆதாயம் தேட முனைந்த செயல் நிச்சயமாக கேடு கெட்ட மூன்றாம்தர அரசியலே! தமது சுயநலத்திற்காக இந்திய இராணுவத்தை நண்பர்களாக வரவேற்ற புலிகள் பின்னர் சுயநலத்திற்காகவே அவர்களுடன் போரிட்டார்கள். அதுவும் இலங்கை அரசின் கால்களில் விழுந்து அவர்களிடம் ஆயுதம் பெற்றல்லவா போரிட்டார்கள். இதில் எங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது தமிழரின் தன்மானம்! மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற முடியாது தம்மை மட்டும் காப்பாற்ற இந்தச் செயல்களிற்கு எல்லாம் இராஜ தந்திரம் என்று பெயர் வேறு!

எமக்குத் தெரிந்த உண்மைகள்! இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலத்தில் தான் கனடா மற்றும் ஏனைய வெளிநாடுகளில் இருந்தும் எம்மவர்கள் எமது நாட்டிற்குச் சென்று வந்திருக்கின்றனர். இவர்களிற் பலர் புலிகளின் ஆதரவாளர்கள். ஆனால் இன்று புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிற்கு இவர்களில் யாராவது போவதற்குத் துணிவார்களா?

முடிவாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழரின் அபிலாசைகள் முற்றாக நிறைவேறி இருக்க முடியாது என்பது உண்மையே. ஆயினும் அவ்வொப்பந்தம் நிறைவேறி இருந்தால் இன்றைய உயிரிழப்புகள் இல்லாது இருந்திருக்கும். மேலும் குழுக்களிடையே குறைந்த பட்சம் ஒற்றுமை உண்டாகியிருக்கும் அதன் பின் ஏற்பட்ட வடுக்கள் அவை குழுக்களிடையாயினும் இந்திய அரசுடனோ ஆயினும் மறப்பதற்கோ மன்னிப்பதற்கோ இல்லை என்றே தெரிகின்றது. இந்நிலையில் ஒற்றுமை என்பது இனி இல்லாத ஒன்று. இலங்கைத் தமிழருக்கு இனிவருங் காலங்களில் ஏற்படும் ஒரு அரசியல் தீர்வும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தால் ஏற்பட்ட தீர்விலும் பல மடங்கு குறைந்தவையாகவே இருக்கும்.

எனவே இன்றுள்ள நிலையில் எமது கடமைகள் என்ன? தொடர்ந்தும் இந்தியாவைப் பகைத்து எமது இனத்தை முற்றாக அழித்துக் கொள்வதா? இல்லை இழப்புகள் இருபகுதியிலும் என்று உணர்ந்து இந்தியாவுடன் ஒரு சமரசத்தை ஏற்படுத்திக் கொள்வதா? இந்நிலையில் எமது உரிமைக்காக போராடி உயிர் நீத்த எம்மவர்கள் அனைவரையும் எமது பாதுகாப்புக்கு வந்து அநியாயமாக உயிரிழந்து இந்திய அமைதிப் படையினரையும் ஒன்று சேர நன்றியுடன் நினைவு கூருவதே இன்றுள்ள கடமையாகும்.

நண்பர்களாக வந்தவர்களை பகைவர்களாக்கினோம் மீண்டும் நண்பர்களாக்குவோம். இவை எமக்காக இல்லாவிடினும் எமது சந்ததிக்காகவாவது இருக்கட்டும். இந்திய சுதந்திர தினத்தில் எமது சுதந்திரத்தையும் எண்ணிப் பார்ப்போம்— அவை குறைந்த பட்சமாக இருப்பினும் இலங்கை அரசுடன் இணைந்து திரியும் குழுக்களிற்கும் எந்தச் சிங்கள அரசும் எமக்கு ஒரு அரசியல் தீர்வினைத் தாமாக முன்வந்து வைக்கப்போவதில்லை. எனவேதான் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து நீங்கள் புலிகளை அழித்தாலும் உங்களின் உயிரினும் மேலான இலட்சியமான தமிழரின் உரிமையை உங்களால் வென்றெடுக்க முடியுமா?

எந்தாய் நீ தந்த இயற்பொருளெலாமிழந்து நொந்தார்க்கு நீயன்றி நேரா வழிப்பார் யாருளரோ?
இன்று புதிதாய் இரக்கின்றோமோ?
முன்னர் அன்று கொடு வாழ்ந்த அருமையெலாம் ஓராயோ? நீயும் அறமும் நிலைத்திருந்தால் மெய்யானால் ஓயுமனர் எங்களுக்கிவ் ஓர் வரம் நீ நல்குதியே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்


**ANTONY BROTHERS**
**1472 QUEEN ST WEST**
**(LANSDOWNE)**

**எமது வாராந்த மலிவு விலையில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள்**

| | | |
|---|---|---|
| ரின் பால் | ~~1.99~~ | 1.79 |
| 5k G குத்தரிசி | ~~7.99~~ | 6,99 |
| 900 g நிரு தூள் | ~~6.99~~ | 649 |
| 750 நல்லெண்ணெய் | ~~6.99~~ | 5.99 |

SANYO 10 CUP RICE COOKER 54.99

| | | |
|---|---|---|
| திரளி | ~~2.49~~ | 199 |

**இது ஒரு மலிவு விற்பனை அல்ல!**
**எமது சாதாரண விலையில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள்**

| | |
|---|---|
| 10 kg குடாஸ் பார்பொயில் அரிசி | 5.99 |
| பால்(Homo) | 3.20 |
| பால் ( 2%) | 2.99 |
| Yogurt | 1.59 |
| Vegetable oil | 2.99 |
| குத்தரிசி 1 kg | 1.79 |
| சம்பா 2k g | 3.29 |
| அரிசிமா 5kg | 7.99 |

**சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள், பரிசுப் பொருட்களுக்கு**

**ANTONY BROTHERS FASHION HOUSE**
1484 QUEEN ST WEST (JAMESON)
TEL:(416)288 -0310
588-3447





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதியின் பாதிப்பு

தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் எண்ணிக்கை யுத்தம் செய்யும் போராளிகள் மத்தியில் அதிகரிப்பது குறித்து சுட்டிக் காட்டியுள்ளோம். சில இடங்களில் சாதி அமைப்பு முறைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற எண்ணத்தை இது தரக்கூடும். ஆனால் இது தவறானது.

செங்கதிரின் விடயம் சாதி அமைப்பு முறை எப்படி செயற்படுகிறது என்பதைக் காட்டுகிறது. முன்னைய இடதுசாரிகள் செயற்பட்ட போது அவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மத்தியில் செயற்பட்டு அவர்கள் மத்தியில் புத்திசாதுரியத்தையும் கட்டுப்பாட்டையும் அதிகரித்ததுடன், மதிப்பை கொடுக்கின்ற பொறுப்பானவர்களாக ஆக்கியிருந்தது. இது உயர்சாதியோ, தாழ்த்தப்பட்ட சாதியோ ஒருவரை எடுத்து அவரது மோசமான உணர்வுகளைப் பயன்படுத்துவதை விட வேறானது. செங்கதிர் கரவெட்டிப் பகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியிலிருந்து பயன்படுத்தப்பட்ட ஒருவர். மோசமான ஆளாக இருந்த போதும், இவர் மாத்தயாவின் கையாளாகவும் குறிப்பிடத்தக்களவு ஆதிக்கம் கொண்டவராகவும் இருந்தார். செங்கதிரின் கடமைகளில் ஒன்று, உள்ளூர்த் தலைவரான காமினியின் நடவடிக்கைகளை வேவு பார்ப்பதே என்று நம்பப்பட்டது. காமினி இப்பகுதியைச் சேர்ந்த உயர்சாதியினர். பின்னர் காமினி இவ்விடத்தை விட்டு மாற்றப்பட்டு ஆகஸ்ட் 90 இல் கோட்டைத் தாக்குதலின் போது ஒரு காலை இழந்தார். உள்ளூர் மக்கள் காமினி, செங்கதிர் இருவரையும் சாதி என்ற கண்ணோட்டத்திலேயே பார்த்தனர். செங்கதிரின் செல்வாக்கு அதிகரித்து வந்த போது தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஆதிக்கம் சற்று அதிகரித்தது. இத்துடன் உயர்சாதியில் உள்ள தனது காதலிகளின் தொடர்பு காரணமாகவும் செங்கதிர் மீது உயர்சாதியினரின் வெறுப்பு அதிகரித்தது. 1990 இல் மாத்தயாவின் கையாட்கள் முக்கிய பதவிகளிலிருந்து பதவி நீக்கப்பட்டனர். இந்த நேரம் செங்கதிர் காணாமல் போய் விட்டார். இவர் வன்னிக் காட்டில் சண்டையில் இறந்ததாக புலிகள் அறிவித்தனர். ஆனால் இவரது இனத்தவர்கள் இது குறித்து சந்தேகம் கொண்டதுடன் வெறுப்பும் அடைந்தனர். இந்த நிகழ்ச்சி எங்களுக்கு ஒன்றைக் காட்டுகிறது. மனிதத்தை சீரழிக்கும் ஒருநிறுவனம், வெறும் கருவிகளாக மனிதர்களைப் பயன்படுத்தும் போது, சமூகத்தைச் சீர்திருத்துவதில் எந்த நிரந்தர பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது.

# ஆழமாகும் நம்பிக்கையீனத்தின் மத்தியில் நம்பிக்கைக் கீற்றுக்கள்

**மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்**

## மத்தியதர வர்க்கத்தின் மீதான பாதிப்பு

தமிழ் தேசியவாத எண்ணங்களைக் கொண்ட பொருள்முதல்வாத பெறுதிகளைக் கொண்ட இயல்பே இந்த பிரிவினரின் முக்கியமான இயல்பாகும். புலிகளால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மத்தியில் எந்த வித கோப உணர்வும் இல்லாதிருப்பது குறித்து எவரும் ஆச்சரியப்படுவார்கள். உண்மையான பிரச்சனைகளிலிருந்து தப்புவிக்க தேசியவாதம் ஒரு போதைமருந்தாக பாவிக்கப்படுவது பற்றி ஒரு உதாரணம் சமீபத்தில் கிடைத்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மதிப்பு மிக்க கூட்டணி எம். பி ஒருவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கூட்டத்தில் பேசினார். இமயத்தை ஆண்ட சேரன் செங்குட்டுவன் பற்றிய பாடல் ஒன்று பற்றி தனது மகிழ்வை அவர் தெரிவித்தார். மக்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற இளைஞர்கள் பற்றி தான் எவ்வாறு பெருமைப்படுகிறேன் என்றும் அவர் விளக்கினார். உண்மையானதும் அவசரமானதுமான பிரச்சனை தவிர்க்கப்பட்டது. அந்தப் பிரச்சனை எதுவென்றால் உரிமைகளுக்காகப் போராடுகின்ற இளைஞர்கள் கிழக்கில் முஸ்லிம்களை படுகொலை செய்வது தான்.

பயங்கரமும் தேசியவாதத்தின் கவர்ச்சியும் மக்கள் மீது மௌனமாயிருக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்டன. இலங்கைப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களில் மக்கள் அவமானத்திற்கு உள்ளாவதுடன் எதிர்வு கூறமுடியாத நிலையில் உள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அரசியல் மீது கேள்வி எழுப்பாமலும் அரசியல் கைதிகள் பற்றியோ, குழந்தைகள் ஆயுதமயப்படுத்தப்படுவது பற்றியோ கேள்வி எழுப்பாமலும் இருப்பதால் வாழ்வு எதிர்வு கூறக் கூடியதாக உள்ளது. மோசமான விடயங்கள் கண்ணுக்கு தெரியாத விதத்தில் மறைத்து வைக்கப்படுவதுடன் மக்கள் இரவுகளில் பாதுகாப்பாக நடமாட முடிகிறது. இதன் மூலம் தங்கள் குழந்தைகளை வெளியே அனுப்ப வழி செய்கிறார்கள். இது குறுகிய காலத்தில் புலிகளுக்கு நன்றாக பயன்படுகிறது.

## அமைப்புகளின் பங்கு

யாழ்ப்பாணத்தில் பெரியளவு பலம் வாய்ந்த அமைப்புகளாக திருச்சபையும் பல்கலைக்கழகமும் உள்ளன. ஆரோக்கியமாற்றதும் பயங்கரதுமானதுமான செயற்பாடுகள் நடைபெறும் போது, இந்த நிறுவனங்களிலிருந்து கொஞ்ச எதிர்ப்பை எதிர் பார்க்க முடியும். எதிர்கால நன்மைக்காக இந்த நிறுவனங்கள் பயங்கரத்தின் படிமுறைகளூடாக உயிர்ப்புடன் இருக்க வேண்டும் என்று உணரப்பட்டால், குறைந்த பட்சம் இந்த பயங்கர செயற்பாடுகளுக்கு நியாயம் வழங்குவதை தவிர்த்துக் கொண்டிருக்கலாம். ப்ல்கலைக்கழகம் பற்றி முன்னைய அறிக்கைகளில் தெரிவித்திருக்கிறோம். அத்துடன் எவ்வாறு மேல்மட்டங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர்கள் கொடுமையான இந்த அரசியலை புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். இவ்வாறான நியாயப்படுத்தல்கள் மேலும் பல குழந்தைகளை ஆயுதம் ஏந்த வைக்கும். இந்த மேல் மட்டங்களும் அவர்களின் குழந்தைகளும் இதற்கு பிரதியுபகாரமாக மற்ற அப்பாவி மக்கள் படும் கஷ்டங்களிலிருந்து விலக்குப் பெறுகிறார்கள்.

சில கோயில்களும் திருச்சபையும் எவ்வாறு இந்த கீழ் நோக்கிய சரிவுக்கு ஊக்கியாக செயற்பட்டன என்பதற்கான உதாரணங்களைப் பார்ப்போம். சமீப காலங்கள் வரை யாழ்ப்பாண வாழ்க்கை முறையை முன்னேற்றுவதில் சில திருச்சபைகள் செயற்பட்டன. பின்னர் தேசிய வாதக் கொள்கையுடன் தங்களை அடையாளம் காட்டிக் கொண்டும் வெளிநாடுகளில் தங்கள் நோக்கங்களை பிரபலத்தக்கூடிய வலிமையாலும் அவர்களது அதிகாரங்கள் அதிகரித்தன. அத்துடன் புனர்வாழ்வுக்கான நிதியுதவிகளும் பெருமளவில் இவற்றுக்கு கிடைத்தன.

பின்னர் 83 கலவரத்தின் பின்னர் தென்பகுதி திருச்சபையின் உணர்வுகள் இனரீதியானதாகவும் போதாததாகவும் இருந்தன. நீண்ட காலமாக உறுதியான குற்ற உணர்வு காரணமாக தென்பகுதி திருச்சபையின் சில பகுதிகள் வெளிநாடுகளுக்கு மட்டும் பயன்படக் கூடிய அறிக்கைகளுடன் 'தமிழர் சார்பு' நிலையைக் காட்டின.

இதே நேரம் தமிழ் திருச்சபையினர் இன்னொரு சுவாரஷ்யமான விடயத்தில் இறங்கினர். யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போதெல்லாம் அவர்கள் குண்டுவீச்சினாலும் தாக்குதல்களாலும் அரசாங்கத்தின் தடைகளாலும் மக்கள் படும் இன்னல்களைப் பற்றி பேசுவார்கள். ஆனால் புலிகளால் அமுல்படுத்தப்படும் தடைகள், குழந்தைகள் ஆயுதமயப்படுத்தப்படுவது, அரசியல் கைதிகள் பற்றி மௌனமாக இருப்பார்கள். சிலர் தங்கள் நெருங்கிய நண்பர்களுக்கு இரகசியமாகக் கூறக் கூடும். இவ்வாறு வெளியில் பேசப்படாத விடயங்கள் பற்றி பேசினால் தங்களை 'தமிழர்களுக்கு எதிரானவர்கள்' என்று கூறக் கூடும் என்ற அச்சத்தில் தென்பகுதி திருச்சபையினரும் பயப்படுவார்கள். தென்பகுதி திருச்சபையினர் விபரங்களை அறிந்து கொள்ளவோ, தமிழ் பிரச்சனையை ஆழமாக விளங்கிக் கொள்ளவோ விரும்புவதில்லை என்பதையும் காணக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள சகாக்களுடன் வடக்கில் என்ன நடக்கிறது, தமிழ் மக்களை யார் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள், சாதாரண மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பது பற்றி தென்பகுதி திருச்சபையினர் பேசிக் கொள்வது இலகுவானது. உதாரணமாக, வடபகுதியில் உள்ளவர்கள் 'யுத்த நிறுத்தம்' என்றால் இதற்கான திருச்சபையின் நிபந்தனைகள் என்னவென்று தெரியாமல் எல்லாருமே யுத்த நிறுத்தம் வேண்டும் என்பார்கள். வடக்கில் உள்ள அரசியல்கைதிகள், முஸ்லிம் பிரச்சனை என்பது பற்றி பேசாததால் யதார்த்தத்தை பிரதிபலிக்கும் திருச்சபையின் முயற்சி முழுமை பெறுவதில்லை. இது கிறிஸ்தவத்துக்கு முரணான ஒன்றை நியாயப்படுத்தும் பயங்கரமான நிலையை காட்டுகிறது.

தேசிய திருச்சபை எந்த வித கண்டனங்களும் இல்லாமலும் இந்த வித நிரந்தரமான கருத்துக்களும் இல்லாமலும் இருப்பதால் இதே இயல்பு உலக திருச்சபைகளின் கவுன்சிலுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கவுன்சிலில் உள்ள சிலருக்கு இந்த அமைப்பு தமிழர் சார்பானது. அதன்படி புலிகள் தான் தமிழ் மக்களின் முழுமையான பிரதிநிதிகள். இதனால் இவர்கள் தமிழ் திருச்சபையினரைக் கேலி செய்வதன்றி, பிரச்சனையை விளங்கிக் கொள்வதில்லை. பிரச்சனையை விளங்கிக் கொள்பவர்களுக்கும் தங்கள் கருத்துக்களுடன் மேல் கொண்டு செல்வது புத்திசாதுரியமுள்ளதாக தெரிவதில்லை. இறுதியாக தமிழ் மக்களின் நலன்களே இந்த ஆரோக்கியமற்ற நிலைகளை நியாயப்படுத்துவதன் மூலம் பாதிப்படைகின்றன.

உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். குண்டுவீச்சுக்கள், ஷெல் தாக்குதல்களுக்கும் அப்பால், கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பயணம் செய்பவர்கள் ஆனையிறவை விட்டு கடலூடாக தேவையற்ற ஆபத்தான பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இராணுவமோ மக்களை ஆனையிறவு ஊடாக செல்லுமாறு கேட்கிறது. புலிகளோ ஆனையிறவு ஊடாக செல்வதை தடுத்து மக்களை கடற்பாதையூடாக செல்லுமாறு பலவந்தப்படுத்துகிறது. இரண்டு பக்கமுமே இராணுவ காரணங்களைக் காட்டுகின்றனர். மக்கள் ஆனையிறவுப் பாதையைப் பயன்படுத்தினால் இராணுவம் அதைப் பாவித்து முன்னேறலாம் என்பது புலிகளின் கருத்து. ஆனால் கடற்பாதையை மக்கள் பாவித்தால் புலிகள் ஆயுதங்களைக் கடத்த அதைப் பாவிக்கலாம் என்பது இராணுவத்தின் கருத்து.

மக்களைப் பொறுத்தவரை, கடற்பிரயாணம் தேவையற்ற ஒன்று, ஆனையிறவுப் பாதை சீரமைக்கப்பட்டால் யாழ்ப்பாணத்திற்கான உணவு வினியோகமும் சீரடையும். ஆனால் மக்கள் எந்த உதவியுமின்றி தங்கள் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவர்களை விரும்புகிறார்கள். திருச்சபைகள் இதைச் செய்யலாம். கடற்பயணம் செய்பவர்களைத் தாக்கும் இராணுவத்தினரை கண்டிப்பது நியாயமானது. ஆனால் அதை மட்டுமே செய்வது கேள்விக்குரியது. புலிகளின் விருப்பத்திற்கு மாறாக ஆனையிறவால் பயணம் செய்வதை விட, இராணுவத்தின் விருப்பத்திற்கு மாறாக கடலில் பயணம் செய்வது ஆபத்துக் குறைந்தது என்ற கருத்து இதில் சம்பந்தப்பட்டது. புலிகளின் நடவடிக்கையைக் கண்டிக்காமல் இராணுவத்திற்கு எதிராக மட்டும் செயற்படுவது மக்களின் நலனைப் பிரதிநித்துவப்படுத்தும் ஒன்றல்ல. மக்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டிய அமைப்புகள் அவர்களின் இடைஞ்சல்களுக்கு பயன்படுத்தப்படுவதற்கு இது உதாரணமாகும்.

ஆனால், இந்த நிறுவனங்களை விட, பி.பி.சி நிருபர் மட்டுமே கடற் பயணிகளின் நிலைமை பற்றி கேள்வி கேட்கும் நிலை இருந்தது.

இவ்வாறு தான் இந்த தீர்க்கப்படாத சிக்கலற்ற விடயத்தை இந்த திருச்சபைகள் கையாளும் என்றால், யுத்த நிறுத்தம் போன்ற சிக்கலான பிரச்சனைகளை எவ்வாறு கையாளப் போகின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணறு

**(போரை எதிர்த்தும், வாழ்வை யாசித்தல் எழுதப்பட்ட ஓர் சிறுகதை இது)**



## நவகீதன்

எல்லாவற்றுக்கும் விட்டுக் கொடுத்துவிட வேண்டும். எதையுமே எதிர்க்கக் கூடாது. இப்படியே அடங்கிப் போய் விட வேண்டும். கிழித்த கோட்டைத் தாண்டக்கூடாது. கொட்டும் கண்ணீரைத் துடைக்கக் கூடாது. பளிச்சிடும் விழியின் ஒளியில் அதிலிருந்து பிறக்கும் சுவாலைகளினால் நசுக்கப்பட்டு அப்படியே கருகிப் போய்விட வேண்டும். என்னை நோக்கி வருகின்ற முள். அதனைத் தடுக்கக் கூடாது. அது என்னைக் குத்திக் குதற வேண்டும். கடந்த காலங்கள்..... கறுப்பு முத்தங்கள். ... சிவப்பு முத்தங்கள் இவைகள் அனைத்தையுமே மறந்து போக வேண்டும்..... அடுக்கடுக்காக வந்து நிற்கின்ற வேதனைப் பாம்புகள் என்னைக் கொத்திக் கொத்திக் குதறவேண்டும். உடலும் உள்ளமும் சோர்ந்து போயிற்று. எனது விழிபட்ட இடமெல்லாம் சோகங்கள் கசிந்தபடி ... எனக்கு இன்பம் வேண்டுமா? அல்லது எனது இன்பத்தைப் பறித்தவர்களைச் சபித்து விடுவதா? வேண்டாம், யாருமே என்னால் சபிக்கப்பட வேண்டாம். யாராவது என்னைச் சபிக்கவரின் நான் அவர்களைத் தடுக்கவும் மாட்டேன். நன்றாகச் சபியுங்கள். நன்றாகத் திட்டுங்கள். எல்லாவற்றுக்குமே விட்டுக் கொடுத்துவிட வேண்டும்.

"தா!"

எப்போதோ என்னிடமிருந்து என்னை எடுத்தவள் "தா" எனக்கேட்கின்றாள்.

"உனக்கு நான் என்னைத் தந்துவிட்டேன். தயவு செய்து என்னை மட்டும் என்னிடம் திருப்பித் தந்து விடாதே!" நான் அவளிடம் கெஞ்சுகின்றேன்.

"நீ என் சொத்து. உன்னை நான் உன்னிடமும் கூடத் திருப்பித் தந்து விட மாட்டேன்."

நான் எனது பிடிக்கும் சிக்காது போன அவளிடம் அழுகின்றேன். கொட்டும் கண்ணீர்த்துளிகள் கடலாகி, கடலிலிருந்து அலைகள் கொந்தளித்து, அந்த அலைகளினால் நான் தூக்கப்பட்டு... அவை என்னை எங்கே கொண்டு செல்கின்றன....

அந்தக் கிணற்றடிக்கா? நானும் எனது கிணறும். எனது கிணறே அவளாக.... அதற்குள் வீழ்ந்து... மூழ்கி.... முத்துக் குளித்து.... சிரிக்காதே! உனது முகத்தில் கவிந்துள்ள சோகம் அப்படியே இருக்கட்டும். நூதன சாலைகளிலே நான் கண்ட பூர்ஜுவாப் பெண்களின் சித்திரங்கள் போலவே நீ இருக்க வேண்டும். உனது சோகத்தை மட்டுமே நான் ரசிக்க வேண்டும். நான் கொடியவனா? எனது மனதுக்குள் ஓர் குழந்தையின் இதயம் இல்லையா? அழு! உனது விழிகளிலிருந்து கொட்டுகின்ற கண்ணீர்த்துளிகளை மட்டுமே நான் குடிக்க வேண்டும்.

"வா!" நீ என்னை அழைக்கின்றாய் நான் உன்னைப் பார்க்கின்றேன். உனது தோள்களிலே சுயாதீனமாக தவழ்ந்து கிடக்கும் கூந்தலின் ஈரம் மட்டும் காயாமல்..... உனது மேலாடையும் நனைந்தபடி..... உனது சுடர்கொங்கையின் கறுத்தப் புள்ளி என்னையே வெறித்துப் பார்த்தபடி......

"வா"

இவள் என்னை எங்கே கூப்பிடுகின்றாள். நான் மூச்சு விட்டால் எனது மூக்குத்துவாரத்துக்குள் புகுந்து விடும் தூரத்தில் அவளது வீடு. சொர்க்கம் மட்டும் தூரத்தில்..... அது சொர்க்கமா? நரகமா? அவளது விழிகளினுள் நடுங்கிக் கொண்டிருந்த பூபாளத்தைக் கேட்கும் அவா எனக்கும். விலங்கை அடித்து நொருக்கும் பலம் எனக்கு உண்டா?

"கிணற்றுக்குள் வாளி விழுந்து விட்டது. வந்து எடுத்துத்தா!"

எப்போதுமே பூட்டப்பட்டுக் கிடக்கின்ற படலையை அவள் எனக்காகத் திறந்து விடுகின்றாள். கூந்தலிலிருந்து விகர்சித்த வாசத்தை நுகர்ந்தபடி நான் கிணற்றடிக்குப் போகின்றேன். குளிப்பதற்கா? குளிப்பாட்டுவதற்கா? வாழ்வில் ஒரு தடவையாவது அவளைத் தனியாகச் சந்தித்து மனதைத் திறந்து கொட்டி விடவேண்டும் என்ற வெறியின் சுவாலைகள் எனக்குள் வளர்ந்து .......வளர்ந்து ...... இன்று ஒரு சந்தர்ப்பம் ....பேசி விடுவோமா? கோடிக்குள் ஓர் இரவில் அவளுடன் கூடி.. எனது மடியிலே அவளைக் கிடத்தி ... உடல் முழுவதும் முத்தமிட்டு.. உலகை மறந்து ...கனவை வாழ்ந்து கருகி ....நிலத்திற்குப் பசளையாகி விடுவோமா? அவளிற்குள் புகுந்து என்னைத் தொலைத்துத் தேடாதிருக்க வேண்டுமெனக் கனக் கண்ட தினங்கள் பல... அவள்...

கனவுகள் கலைகின்றன வேர் பிடுங்கித் தூக்கி யந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே எறியப்பட்ட பச்சைக்
குழந்தை நான். எனது
புன்னகையை நீங்கள்
பார்த்ததுண்டா? முடியாது!
நீங்கள் அதனைப் பார்த்திருக்க
மாட்டீர்களா! அவளது வட்டக்
கரு விழிக்குள் நான் அதனை
எப்போதோ தாட்டு விட்டேன்.
அகழ்வாராய்ச்சி செய்து அதனை
மீளக் கண்டுபிடிக்க வேண்டும்
என்ற அந்த நோக்கமும்,
இலட்சியமும் எனக்கு இல்லை.
புன்னகையைத் தாட்டவனுல்
ரசிக்கப்பட்ட புன்னகைகள்
அனைத்தும் போலியானவையா?
"ஆகா! உனது புன்னகைதான்
எவ்வளவு புனிதமானது. உன்னை
விடிய விடியப் பார்த்துக்
கொண்டிருக்க வேண்டும்"
சிவப்பு முத்தம் தந்தவளின்
பிரமிப்பு... இவள் அவளல்லள்.
அவளது கருவிழிக்குள் தாட்ட
புன்னகையை நான்
இவளுக்குக்குள் காண முடியுமா?
வாளிக்கு என்ன நடந்தது?
அதனை எடுத்துக் கொடுத்தேன்.
வந்துவிட்டேன். கிணற்றின்
கட்டில் எனக்காக அவள்
இப்போதும் சந்தனமரைத்துத்
தனது முகம், உடல் முழுவதும்
பூசுவாளா? செத்து விட்டாளா?
அல்லது செத்துக்
கொண்டுள்ளாளா? கண்ணீர்
கரைகின்றது. கரையும் கண்ணீர்
நனைத்த எனது தாளில்
அவளுக்காக நான்
எழுதுகின்றேன்... தயவு செய்து
என்னைக் கவிஞன் என்று
சொல்லுங்கள்.... கண்ணீர்தான்
கவிதை... அந்தக்
கிணற்றுக்கட்டிற்கு
எப்போதாவது ஒரு நாள் நான்
வருவேன், எனக்குள் தன்னை
பிணைப்பேன் என, ஒருவேளை
தவித்துக் கொண்டிருக்கும்
அவளுக்காக நான் எனது
புகலிடச் சிறையிலிருந்து
எழுதியவை.....

நட....
உனது கூந்தலின் வாசத்தை
எனக்கு முன்னே ஓடவிட்டு
நட....
உனது விழிகளில் கசியும்
பன்னீர்...
எனது உடலை நனைக்கட்டும்...
ஊமைக் கடலினருகே
கருக்கட்டிய கனவே!
எனது இராக்களைத் தாலாட்டு...
உனது விழிகளின் போதையை
உருண்டைகளாக்கி எறிந்து
இந்த உலகைக் குருடாக்கு...
உனது வட்ட விழிக்குள்
தஞ்சம் கேட்டு
அடைக்கலம் புகுந்த எனது
உயிரை
வெளியேற்றி விடாதே

இவளின் நினைவுகளைத்
துணைக்கழைத்து உலகின் மிகப்
பெரும் காதல் இலக்கியத்தை
நான் எழுதிக் கொண்டுள்ளேன்.
அவளோ எழுதத் தெரியாதவள்...
.. அவளைப் பிரியுமுன்னர் நான்
கவிதைகளை எழுதியவனல்லன்.
அவளே கவிதையாக இருந்தாள்.
நான் அவளையே வாசித்தேன்.
அவள் ஓர் முற்றுப் பெறாத
கவிதை அவளை நான்
எப்போதும் வாசித்துக்
கொண்டிருப்பேன்....
சிவப்பு முத்தம் தந்தவளுக்கும்
ஒரு கவிதையை வாசித்துக்
காட்டினேன்.
உனது மொழிகளை எறிந்து
அழுகின்ற இந்த இதயத்தை
தாலாட்டு
கூந்தல் வழியாக வடியும்
சந்தனநீர்த் துளிகளால்
எனது உடலைக் குளிப்பாட்டு
உனது உதட்டின் வாசத்தை
எனது உடல் முழுவதும்
பரவவிடு
எனது அனைத்து நிழல்களிலும்
உனது உருவத்தையே தவளவிடு.

தூரத்திலிருந்து நீ படிக்கும்
முகாரி ராகங்களே
எனது மோகனராகங்களாக...
உனது முகத்துள்
எனது முகத்தைத் தொலைக்கும்
அந்தக் காலத்தினை...
யந்திர நிலத்தில்
இடை விடாமல் தேடும்
உன்னவன்....
கனவுகளும் யதார்த்தங்களும்.
இன்பமெல்லாம் மறந்து போய்
துன்பத்தையே சுவாசிக்கும் இந்த
யந்திர பூமியிலே நீ கூட ஒரு
கானல் கனவாகிவிடக்
கூடாதென்ற ஓர்மம் எனக்குள்
தலை நீட்டினாலும் நான் நாளை
இழந்து.....
காற்று உன்னைத் தள்ளட்டும்
நீ இக்கரைமட்டும் வந்து
எனது சந்நிதானத்தில்
வீழ்வதற்கு...

எனது சந்நிதானத்தின்
கர்ப்பக் கிரகத்தில் வெறுமை
நீயே அதற்குள் வந்து
குடி புகு....

நீ என் கனவு.
நீ என் தெய்வம்....
உனது பக்தனுக...
எனது ஆலயத்துக்குள்
என்னை வாழ விடு.....
தேவ கன்னி இவள்தான். நான்
இவளின் அடிமை தேசத்தைப்
பிரியும் அந்தக் கடைசித்
தினத்தில் ...அந்த நேரத்தில் ....
அவளும் அவனும் உள்ளே..
ஒரேயொரு முத்தம்.. கடைசி
முத்தம் .... அந்த முத்தத்தின்
ஈரத்தை விழுங்கும் வாய்ப்பாவது
.... அதுவும் அந்தக் கடைசி
நேரத்தில் .... விழிகள் அவளைத்
தேடிப் பரபரத்தன... அவள் ...
அந்த வேலியின்
நீக்கலுக்குள்ளாவது அவளைத்
தேடும் இவன்... சோமர்செற்
காருக்குள் ஏறுகின்றேன்... கதவு
மூடப்படுகின்றது...
கண்ணாடியைத் திறக்கின்றேன்...
கார் புறப்படுமுன்னர் ...விழிகளை
மீண்டும் வேலி நீக்கலை நோக்கி
எறிகின்றேன்... விழிகள்! அவளது
விழிகள்!......

அழு! அழு! இந்த உலகு
அமிழ்ந்து மூச்சுத்திணறிச்
செத்துப் போகும்வரை அழு.!
புகலிடக் கரையில் கண்ணீர்களை
மட்டுமே சுமந்தபடி
இறங்கியவன் இவன்...
அவள்தான் கவிதை... நான்
கவிதையா? இல்லை.. கவிதை
எழுதுபவன் மட்டுமே....
அவளது கூந்தல் நரைக்கலாம்...
அவளை மீளவும் நான் சந்திக்காது
விடலாம்... அந்தக் கிணற்றுக்
கட்டில் கலைந்த கூந்தலோடு
குளிக்காதிருக்கும் அவளது
நினைவுகளில்தான் எனது உயிர்
குளித்துக் கொண்டிருக்கும்....
கிணறு...இது ஓர் வற்றாத கிணறு .
..வாளி தாண்டுவிட்டத எடுத்துக்
கொடுப்பவன் ....யந்திர நிலத்தில்
குழாய் நீரைக் குடித்தபடி......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஷ்தான்:

# இல்லாத ஒரு தேசத்தின் இருக்கின்ற துயரங்கள்!

சமீப நாட்களில் மேற்கு ஐரோப்பிய தலைநகரங்களிலுள்ள துருக்கிய தூதரகங்களை குர்திஸ்தான் மக்களின் விடுதலை அமைப்பான PKK என்றழைக்கப்படும் குர்திஸ்தான் உழைப்பாளர் கட்சியினர் கைப்பற்றி சில மணிநேரங்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். பல இடங்களில் விசேட அதிரடிப்படையினர் தலையிட்டு பலாத்காரம் பிரயோகித்தே இந்த முற்றுகைகள் முடிவு,க்கு கொண்டுவரப்பட்டன.

இதனைத் தொடர்ந்து PKK இன் கொரில்லா போராளிகள் துருக்கிய இராணுவத்தினர் மீது நடத்திய தாக்குதலில் 25க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பின்னர் துருக்கிக்கு சுற்றுலா சென்ற பிரித்தானிய, பிரெஞ்சுப் பிரஜைகள் சிலர் பி.கே.கே யினால் கடத்தப்பட்டனர். அடுக்கடுக்கான இந்த பி.கே.கே.யின் அதிரடி நடவடிக்கைகள் செய்தித் தொடர்பு சாதனங்களை சமீபநாட்களில் மறக்கடிக்கப்பட்ட குர்தீஷ் மக்களின் பிரச்சனைகளின் மீது திரும்பியது. அது மட்டுமல்ல பல இலட்சம் உல்லாசப் பிரயாணிகள் துருக்கிக்கு விஜயம் செய்யும் தற்போதைய விடுமுறைக் காலப் பகுதியில் உல்லாசப் பயணிகளை பி.கே.கே. கடத்தியது பெரும் பயத்தை பயணிகளிடையே ஏற்படுத்தியது. அதனால் பல நாடுகளிலிருந்தும் துருக்கிக்கு செல்ல இருந்த பல ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் தமது பயணத்தை இரத்துச் செய்து வருகின்றனர். விளைவு குர்திஷ் மக்கள் மீது மிக மோசமான ஒடுக்குமுறைகளை பிரயோகித்து வரும் துருக்கிய அரசு பெருமளவு வருவாயை இழக்க வேண்டி வந்துள்ளது.

காலா காலமாக மிக மோசமான ஒடுக்குமுறைகளுக்குள்ளாகி வருவது குர்தீஷ் இனம். மிக அதிகமான எண்ணிக்கையுள்ள மக்கள் தொகையையும், தொன்மையான வரலாற்றையும் கொண்ட இந்த இன மக்களுக்கு சொந்தமான நாடு கிடையாது. ஆனால் குர்தீஸ் மக்கள் இன்று பல தேசங்களிலும் வாழ்கிறார்கள். 20 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இந்த இனத்துக்கென்று சொந்தமாக ஒரு தேசம் இல்லாதது இந்த உலகின் துயரங்களில் ஒன்று. குர்தீஷ் இன மக்களில் ஏறத்தாழ 10 மில்லியன் பேர் துருக்கியில் வாழ்கிறார்கள். 4 மில்லியன் குர்தீஷ் மக்கள் ஈராக்கிலும் 5 மில்லியன் பேர் ஈரானிலும் 1 மில்லியன் பேர் சிரியாவிலும் மேலும் 1 மில்லியன் பேர் உடைந்து போன சோவியத் யூனியனின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். ஜேர்மனியில் தொழில் செய்யும் வெளிநாட்டுத் தொழிலாளர்களான 1.8 மில்லியன் துருக்கியத் தொழிலாளர்களில் 4 இலட்சம் பேர் குர்தீஷ் இன வழிவந்தவர்கள். இங்கிலாந்திலும் பிரான்சிலும் கூட கணிசமான எண்ணிக்கைய,டையவர்கள் வாழ்கிறார்கள்

காலா காலமாக இவர்களுக்கென்று ஒரு நாட்டை அமைத்துத் தருவோமென்று உலக அரங்கில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனால் எதுவ, மே நிறைவேற்றப்படவில்லை. 1918 ம் ஆண்டளவில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வூட்ரோ வில்சன் குர்தீஷ் மக்களுக்கு தனிநாடு அமைக்க உதவுகிறேன் என்று கூறிய போதும் பிரித்தானிய, பிரெஞ்சு துருக்கிய அரசுகளின் நெருக்குவாரங்களினால் அவரும் பின்வாங்கிவிட்டார்.

இன்று கூட ஈராக்கின் ஒரு பகுதியில் குர்திஷ் மக்கள் ஒரு சமஷ்டி அரசாக வாழ்கிறார்கள். 3.5 மில்லியன் குர்தீஷ் மக்கள் வாழும் இந்த சமஷ்டி அரசில் பிரதமர் உண்டு........... அரசாங்கம் உண்டு..... வெளிநாட்டு தூதரகங்கள் உண்டு.... சிறிய இராணுவம் உண்டு.... எல்லைகள் உண்டு... பாஸ்போட்டுகளும் உண்டு. ... ஏன் முத்திரைகள் கூட உண்டு. ஆனால் அவர்களுக்கு சொந்தமாக நாணயம் இல்லை. சொந்தமாகக் கொடியோ அல்லது சர்வதேச அங்கீகாரமோ இல்லை.

புவியியல் ரீதியாக பல தேசங்களுக்குள் சிக்குண்ட சூழ்நிலையும் கடந்த காலத்தில் ஈரான் அனத்தோலியா ஆகிய தேசங்களை ஆண்ட சர்வாதிகாரிகளால் அமுக்குண்ட நிலையும் இனத்துக்குள்ளேயிருந்த ஒற்றுமையின்மையும், இந்த மக்களை ஆண்டவர்கள் மக்களுக்காக ஒரு நாட்டை அடைய எடுத்த முயற்சிகளை விட தங்களை பாக்தாதும் தெகரானும், அங்காராவும் அங்கீகரிக்கவேண்டும் அதிகாரம் தரவேண்டும் என்பதில் காட்டிய அவசரமும் இந்த மக்கள் தமக்கென்று ஒரு நாட்டை அடைவதை தடுத்தது. மேற்குலக சக்திகளால் வெகு திட்டமிட்ட முறையிலேயே இந்த மக்கள் பிரித்தாளப்படுகிறார்கள். உழைக்கும் மற்றும் ஏழை குர்தீஷ் மக்கள் பி.கே.கே. என்றழைக்கப்படும் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சிக்கு ஆதரவளிக்கிறார்கள். இந்தக்கட்சி மார்க்சியத்தைக் கொள்கையாகக் கொண்டதுடன் குர்தீஷ் மக்களுக்கு துருக்கியில் ஒரு தன்னுரிமையுள்ள நாடு அடையவேண்டுமென போராடுகிறார்கள்.

அதேசமயம் மேற்குலகால் ஆதரவளிக்கப்படும் ஈராக்கிய குர்திஷ்டுகள் வளமுடையவர்கள், படித்தவர்கள் அத்துடன் நாகரீகமான மொழியறியுடையவர்கள். கொரில்லா இயக்கங்களுக்கு ஆதரவளித்தாலும், தனியான குர்திஷ்தான் அமைவது விருப்பமாக இருந்த போதும் எண்ணெய் வளங்களை சதாம் ஹூசெய்னோ அல்லது அவர் பதவியிறக்கப்பட்டால் வரப்போகும் அரசோ பாவிக்கும் தகைமையை வழங்கினால் ஒரு சமஷ்டி அரசுக்கோ அல்லது ஈராக்கின் கீழ்வாழும் எந்த

## சுழலும் உலகம்



**தி.உமாகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்ப, முறைக்கும் சம்மதமானவர்கள்.

குர்திஷ் மக்களின் ஆரம்பகால அரசியல் கட்சி குர்திஷ்தான் ஜனநாயக கட்சியாகும். முஸ்தபா பர்ஸானியால் ஈரானிலும் ஈராக்கிலும் ஆரம்பிக்கப்பட்ட இது ஒரு மிதவாதக் கட்சியாகும். ஆனுல் இன்று குர்திஷ் மக்களிடையே ஏராளமான கட்சிகளுள்ளன. அனைத்துமே வேறுபட்ட கொரில்லா அமைப்புக்களால் ஆளுமை செய்யப்படுகின்றன. இவற்றுக்கிடையிலான பிளவுகள் சித்தாந்தத்தால் மாத்திரம் ஏற்பட்டவை அல்ல. பிரதேசவாதம் மற்றும் இவர்களை ஆளுமை செய்பவர்களின் சதிகள் அனைத்துமே பிளவுகளை அதிகரிக்கின்றன.

அனைத்து அமைப்புகளுக்குள்ளும் முழுமையான பிரிவினையை வலியுறுத்துவது பி.கே.கே. மட்டுமே. பி.கே.கே. என்பதன் அர்த்தம் PARTY KARKARAN E 'KURDISTAN (குர்திஷ்தான் உழைப்பாளர் கட்சி) அங்காரா பல்கலைக்கழகத்தில் தனது அரசியல் விஞ்ஞான படிப்பை பூர்த்தி செய்ய முடியாத மாணவனுன அப்துல்லா ஒக்காலனுல் 1978இல் பி.கே.கே. ஆரம்பிக்கப்பட்டது. அப்துல்லாவுக்கு இப்போது வயது நாற்பதுகளின் நடுப்பகுதி. துருக்கியில் குர்திஷ் மக்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில் இவர் தலைவனுக கருதப்படுகிறுர். குர்திஷ் மக்களுக்கெதிரான துருக்கிய இராணுவத்தின் முடிவில்லா ஒடுக்குமுறைகளை எதிர்த்து நிற்கும் ஓரே சக்தியாக பல இடங்களில் பி.கே.கே.திகழ்கிறது. பி.கே.கே.க்கு எதிராகப் பேச அனைவரும் பயப்படுகிறுர்கள். அதேசமயம் இளைஞர்கள் பி.கே.கே. யின் கொரில்லா அணியில் சேர்வதில் பெரும் ஆர்வம் காட்டுகிறுர்கள் பி.கே.கே.யின் இராணுவப்பிரிவில் 4 ஆயிரம் பேர் இருப்பதாக துருக்கிய அரசு கூறுகையில் தனது இராணுவப்பிரிவில் 10 ஆயிரம் பேர் இருப்பதாக பி.கே.கே. கூறுகிறது.

சிரியாவை தளமாகக் கொண்டு இயங்கிவரும் பி.கே.கே. 1984ல் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. துருக்கிய இராணுவ ஒடுக்குமுறைகளை பழிதீர்க்கும் வகையில் சில மோசமான கொடுமை சம்பவங்களுடன் பி.கே.கே. சம்பந்தப்பட்டிருக்கிறது. தமது கைப்பொம்மையான துருக்கிய அரசைத் திருப்திப்படுத்தும் வகையில் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய அரசுகள் பி.கே.கே.யினை பயங்கரவாதக் குழுவாகப் பிரகடனம் செய்ததுடன் பி.கே.கே. யை ஒடுக்க துருக்கிய அரசுக்கு உதவியும் வருகின்றனர். இதனுலேயே ஐரோப்பாவில் பி.கே.கே. தனது சுய பேரில் செயல்படுவதில்லை. ஐரோப்பாவில் வாழும் குர்திஷ் மக்களாலேயே பி.கே.கே. க்கான நிதியின் பெரும்பகுதி வழங்கப்படுகிறது. பி.கே.கே.க்கும் புகலிடத்தில் வாழும் குர்திஷ் மக்களுக்கிடையிலான நெருக்கத்தை சமீபத்தில் ஐரோப்பாவிலுள்ள துருக்கிய தூதரகங்கள் மீது பி.கே.கே மேற்கொண்ட முற்றுகையில் அவர்கள் பங்கு கொண்டதன் மூலம் அறியமுடியும்.

ஐரோப்பாவிலும் இதர இடங்களிலும் பி.கே.கே முன்னரும் சில தாக்குதல்களை செய்திருந்த போதிலும் இந்த முறை பாரிய அளவில் வெகு சிறப்பாக தொடர்புபடுத்தப்பட்டு ஐரோப்பாவிலுள்ள துருக்கிய தூதரகங்கள். மற்றும் ஸ்தாபனங்கள் மீது பி.கே.கே. தாக்குதலை நடத்தியிருக்கிறது. பி.கே.கே. யின் இத்தாக்குலுக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று துருக்கி எதிரான குர்திஷ் மக்களின் போராட்டத்தின் பால் ஐரோப்பிய சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பது. அடுத்தது பி.கே.கே யை முறியடித்துவிட்டோம் என்ற துருக்கியின் கனவுக்கு முற்றுப்புள்ளி வைப்பது. இதைத் தவிர இன்னுமொரு காரணமும் பி.கே.கே. யின் தளங்கள் மீது துருக்கிய இராணுவம் பாரிய தாக்குதல்களை நடத்த இருக்கிறது. அதனுல் இந்த இராணுவ அக்கிரமங்கள் மூடி மறைக்கப்படாமல் இருக்க பி.கே.கே. இப்போதே மேற்குலக செய்தித் தொடர்பு நிறுவனங்களின் கவனத்தை ஈர்க்க முயன்றிருக்கிறது.

சில தலைவர்களும், மேலதட்டு வர்க்க குர்திஷ் மக்களும் பி.கே.கே. யின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஈரானிலும், ஈராக்கிலும் துருக்கியிலும் வாழும் குர்திஷ் மக்களுக்கு பி.கே.கே.யே நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கிறது. இதற்கான காரணம் தொடர்ச்சியாக அவர்கள் பல்வேறுபட்ட அரசுகளால் ஒடுக்கப்பட்டு வருவதுதான். இந்த இனம் சந்தித்த சோகங்கள் எல்லையற்றது. இழப்புக்கள் எண்ணுக்கணக்கற்றவை 1920 ம் ஆண்டிலிருந்து துருக்கிய அரசு கொஞ்சம் கொஞ்சமாக இராணுவ ஒடுக்குமுறைகள் மூலம் இந்த இனத்தை அழித்து வருகிறது. இதிலே 1925 ம் ஆண்டும் 1930இன் இறுதியிலும் நடந்த ஒடுக்குமுறைகள் மோசமானவை, ஈராக்கிலோ சதாம் ஹூசெய்ன், சித்திரவதைகள், பாரிய அளவில் நாட்டை விட்டு வெளியேற்றுதல், இரசாயனக்குண்டுகள் கொண்டழித்தல் ஆகிய முறைகள் மூலம் குர்தீஷ் இனத்துக்கெதிரான தமது அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த பத்துவருடங்களில் ஈராக் அரசு ஒரு இலட்சத்து எண்பதாயிரம் குர்தீஷ் மக்களை படுகொலை செய்துள்ளது. தனிப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையின் போது 4 ஆயிரம் குடியிருப்புகளை அழித்ததுடன் ஒரு முழு நகரத்தையே தரைமட்டமாக்கியது.

கலை கலாச்சாரம் இலக்கியம், இசை போன்றவற்றில் மிகத்தொன்மையான வரலாற்றை மாத்திரமல்ல அற்புதமான வல்லுனர்களையும் கொண்டிருக்கும் இந்த இனம் இன்று நித்தமும் சுமப்பது இழப்புக்களைத்தான். இளைஞர்களது மரணச் சடங்குகளில் ஒரு பாடலை குர்திஷ் மக்கள் படிப்பார்கள்.

"சிலவேளைகளில் நீ அழுவாய்
சிலவேளைகளில் நீ கவலைப்படுவாய்
உன்னுடைய பிரச்சனை என்ன?....
அதை நீ உனக்குள்ளேயே
மறைத்துக்கொள்"

இந்தப் பாடலைப்போல குர்தீஷ் மக்களின் துயரங்கள் தீருமா? இறைமையுள்ள மக்களாய் வாழ்வார்களா... இல்லையா என்பதை இன்று தீர்மானிக்கும் சக்தி உலக அரசியல்தான்.


உங்கள் குடிவரவு விசாரணைக்கான

சேவைக்கு..

609 8116

மார்க்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் தந்த பொதுமகள்

## ஜெயந்தீஸன்

(விபசாரம் கொடுமையானது. முதலாளித்துவ சமூகங்களிலே பெண்கள் பண்டங்களாக்கப்பட்டு வரும் கொடுமை ஒழிக்கப்படவேண்டும் என்ற ஆவேசத்தில் எழுதப்பட்டது)

வருவழி தனிலே
எனைமறித் தேயவள்
மலர்தந் தாளே! மலர்
தந்தாளே!

பொதுமக ளிவளெனக்
கேன்மலர் தந்தாள்?
இவளிடை தனிற்கு
இன்னொரு தினத்தில்
விலைபே சினளோ?

இவள்படு பாட்டைப்
பலதரம் கண்டனன்
ஹஸ்டலில் வந்து
கதவுகள் தட்டி
உயிர்வாழு தற்கு
உடலை விற்பவள்

காலையில் வந்து
மாலையில் போவாள்
பயமெது மின்றிப்
பல உடல் கூடி....

பிராங்குகள் பொறுக்கி
நோவுடல் சுமந்து
ரயிலில் ஏறிய
ஓர்தின மதிலே
உரைசெய் தற்கு
ஓர்வாய்ப் பமைந்ததாம்

கண்மை தன்னை
அழிக்க வெளிக்கிட
ஏனழிக் கின்றாய்
எனநான் கேட்டேன்

"நான்தொழில் செய்வதை
நாயக னறியான்"
எனப்பதி லிறுத்தாள்

"நாயகன் தொழிலெதும்
செய்வ திலையோ?"
எனநான் கேட்டேன்

"செய்வார் சிலபோது
செய்யாது மிருப்பார்
என்னிலை யறியார்
என்னிட மேநிதி
அடிக்கடி கேட்பார்
என்ன செய்குவன்!
என்ன செய்குவன்
என்னிலை உமக்குப்
புரியுது தானே?"

"புரியுது ஆனல்
உடல் சிதை தொழிலைத்
தவிர்த்து வேறொரு
தொழில்தே டுதலில்
இடரெது முண்டோ?"

"தொழில்பல வுண்டு
சம்பளம் குறைவு...
சிறுதொழில் செய்து
வீட்டுவா டகையைச்
செலுத்துதல் எளிதோ?"

"வாடகைக் கொடுமை
விளங்குது எனக்கு
உடல்தனை விற்றல்
பெருந்தொழி லாமோ?"

"பணம்தரு தொழிலென்
றியம்புவன் இதனை"

"மனவிருப் புடனே
இதற்குள் இறங்கினீர்?"

"பணநெருக் கடிமுன்
மனவிருப் புண்டோ?
விரும்பின மாதிரி
வாழுதற் குகந்த
விதியெனக் குண்டோ?"

"விளங்குது, விளங்குது
விஷயம் விளங்குது
ஆயினு மிந்தத்
தொழிலோ கொடியது...
விரும்பா உடல்களை
வருத்தி யழைத்துக்
கட்டிலி லேற்றி
முட்டுதல் துன்பம்
போதாக் குறைக்கு
நோய்நொடி கடித்து
மாள்தலும் கூடுமாம்"

"மனவிருப் பிழந்தே
மாள்தலை யேற்றேன்"

"மாள்தற் குடலை
விற்பது சரியோ?
ஆழ்கடல் தனிலே
வீழுதல் தகுமே"

"ஆசை கொடியது!
ஆசை கொடியது!
அதனது முன்னே
எம்விழி குருடாம்.."

"உன்மொழி சரியாம்
உலகிது தீதாம்
உன்நிலைக் கிரங்கும்
என்னால் உனக்கோ
உதவுதற் கெந்த
மார்க்கமு மிலையாம்"

இரங்குதல் சாலும்
இதுதீர் வாகா..."
எனநான் சொல்ல...

"இரக்கமும் ஒரு வகைத்
தீர்வு உடைத்தே....
உன்னோ டியம்பின
உளத்துயர் ஜடதம்..
என்பெயர் பாத்திமா
உன் பெயர் எதுவோ?"
என அவள் கேட்டாள்

என்பெயர் சொல்ல
வதிவிடம் கேட்டாள்.

"நீதொழில் செய்யும்
ஹொஸ்டலி லன்றோ
நான்வசிக் கின்றேன்."

"பலவரு டங்கள்
அங்குநான் வருகிறேன்
ஒருநாள் தனிலும்
உனைநான் கண்டிலன்"

"உனைநான் கண்டனன்
எனை நீ கண்டிலாய்....
நானொரு போக்கு"

"உன்மொழி யெனது
மனதுக் கொத்தடம்
உன்னன் பென்னை
உருக்குது இனி ஞ,
உன்வய தெதுவோ?"

"என்வய திப்போ
திருபத் தைந்து..."

"உன்னிளங் கோலம்
ரசிப்பது வெவளோ?
அவளோர் அழகி
என நினைக் கின்றேன்.."

"உன்மதிப் பீட்டில்
ஒரு மறு வும்மில
என்னவள் மீது
நான்படு மோகம்
ஆயினும் காதலில்
கழியுது காலம்...
"அவளை யடிக்கடி
சந்திப்ப துண்டோ?"

"இடைக்கிடை யென்றே
தொடர்புகள் உண்டு
நித்தமும் பேசினல்
முத்தமும் சலிக்குமாம்"

"உன்னிட முளதோ
அவளது போட்டோ?"

போட்டோ காட்டினன்
பார்த்தனள் பின்னர்

"இவ்விளம் பெண்ணொடு
இன்பமாய் வாழ்" என
வாழ்த்தும் சொல்லினள்....

"அக்கா, வாழி!
உன்துய ரழிக!"
எனநான் மொழிந்து
அவள்தனைப் பிரிந்தேன்....

மாதங் கள்சில
கழிந்தபிற் பாடே
வழியிலே மலரொடு
என்முகப் பட்டாள்

"மலர்தரு மணமிது....
எங்கே யாதனை
வாங்கின சொல்க!"

"வாங்கின அல்ல
ஆய்ந்தன னிவைகளை..
வருவழி தனிலே
பூத்துக் கிடந்தன..."

"ஆகா! நறுமணம்!
இதுநல் மலரே!"

"என்கை தனிலே
பலமல ருண்டு
உன்கை தனிற்கும்
ஒருசில தருவேன்
நின்கா தலிதலை
சூடி மகிழ்க!"

வருவழி தனிலே
எனைமறித் தேயவள் மலர்
தந்தாளே
மலர் தந்தாளே!

மலர் போல் மாதிவள்
ஹாஸ்டலில் வந்து
உடல்களுக் கிடையில்
கசங்குதல் சரியோ?

உலகினை மீளவும்
திருத்தி எழுதிட
விதியினை அழித்தொரு
விதி செய் திடுவோம்

**புதுக்கவிதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம்ஸ் ஸ்டூடியோ

ஆறு வருட கனடா அனுபவம்
தலைசிறந்த படப்பிடிப்பாளர்கள்
நவீன தொழில் நுட்பம்
அனைத்தையும் ஒருங்கே கொண்டது
ஞானம்ஸ்

★ திருமணம்
★அரங்கேற்றம் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் எம்மை முதலில் அழையுங்கள்

**750 8118**

**GNANAMS STUDIOS**

**2387 Eglinton Ave E #1**
**(At Kennedy, Top of Beckers)**

★ மனதை விட்டகலா படங்களை மீண்டும் படம் பிடித்து தரம் குறையாது பெரிதாக்கி மகிழ்ந்திட

★ வண்ண வண்ண வடிவங்களில் உங்கள் குடும்ப, குழந்தைகளின் படங்களை பார்த்து மகிழ்ந்திட

★ Film roll developing and printing நவீன கொம்பியூட்டர் தொழில் நுட்பத்துடன் color density, skintone correction செய்து நிறம் மாறாத படங்களாகப் பார்த்திட

High Quality albums, frames

பாஸ்போட் படங்கள் பத்து டொலர்கள் மட்டுமே



சகல விதமான அச்சுவேலைகளுக்கும்.....

**9 2 0 7 7 4 1**


**QUIK GRAFIX**

OUR NAME TELLS EVERYTHING



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ELECTRON AUTO SERVICE



எந்த வித வாகனங்களுக்கும்
எந்த வித திருத்த வேலைகளுக்கும்
திறமையாகவும் நுணுக்கமாகவும்
உத்தரவாதத்துடன் திருத்திக்
கொள்ளவும்
Engine Rebuilt செய்யவும்
பாவித்த தரமான இயந்திரங்களை
உங்கள் வாகனங்களுக்கு
பொருத்தவும்
பாவித்த தரமான உதிரிப்பாகங்களை
வாங்கவும்
தொடர்பு கொள்ளுங்கள்

**25 Heritage Rd, #14,**
**McGowan/Highway 7**
**(On McGowan)**

**TEL:472 8343/ 921 8005(Erai)**
**Mobile Tel:399 1830**

24 hrs Road Emergency Service
available
Transmission Repair
Engine Tune up. Breaks
Exhaust system
Electrical and Electronic problems

குறைந்த செலவு நிறைந்த திருப்தி

---

# GAMINI WANIGASEGARA

**BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC**
**BARRISTER-AT-LAW (ENGLAND)**
**ATTORNEY-AT-LAW (SRI LANKA)**

**30 YEARS EXPERIENCE IN ENGLAND, SRI LANKA & TORONTO, CANADA**

(416) 449 4294

Suite 600, Don way West
Don Mills, Ontario
Fax:(416) 449 4369

REAL ESTATE
BUSINESS
CRIMINAL LAW
FAMILY LAW
ESTATES

- BUYING, SELLING, MORTGAGING
- PURCHASE OF BUSINESSES & CORPORATIONS
- INCORPORATIONS
- ALCOHOL RELATED OFFENCES
- SEPARATION AGREEMENTS, DIVORCE
- LAST WILLS

காணி நிலம்:வாங்க, விற்க
வியாபாரம்: வாங்க, இணைத்தல்
குற்றச்சட்டம்: மது சம்பந்தமான குற்றம்
குடும்பச்சட்டம்: பிரிவு, விவாகரத்து
சொத்து:கடைசி உயில்

தமிழிலும் உரையாடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாவது ஆண்டில் ஐரோப்பிய இலக்கியச்சந்திப்பு

## கு. பரராஜசிங்கம்

உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமிழ். ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பத்திரிகைகளையும் நூல்களையும் வெளியிட்டு மொழிக்கும் இலக்கியத்திற்கும் வளம் சேர்க்கத் தவறவில்லை. இந்தப் பாதையிலே 80 களில் ஐரோப்பாவிற்குப் புலம் பெயர்ந்த தமிழர்களும் தமது இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்தார்கள். இந்த முயற்சிகளின் விளைவாக பல சிறு தமிழ் சஞ்சிகைகள் அரசியல், இலக்கியம் தொடர்பான விடயங்களைத் தாக்கி ஐரோப்பாவில் வெளிவர ஆரம்பித்தன. இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்க்கை யதார்த்தங்கள் தவிர்க்க முடியாதபடி இந்தச் சஞ்சிகைகளில் வெளியாகிய இலக்கிய ஆக்கங்களில் பிரதிபலித்தன. அந்நிய நாடுகளில் அகதி நிலமைகளில் இருந்து கொண்டு வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் கையெழுத்திலும் வெகு சிரமப்பட்டு பெற்றுக் கொண்ட தமிழ் தட்டச்சு இயந்திரங்களிலும் தயாரிக்கப்பட்டு போட்டோக் கொப்பி, ஒவ்செட் இயந்திரங்கள் மூலம் அச்சாகின. இப்பத்திரிகைகளை வெளிக் கொண்டுவந்த பலர் முன் அனுபவங்கள் எதுவும் இல்லாத போதும், பரிச்சயமான எழுத்துத் கோர்த்து அச்சாகும் முறையிலிருந்து ஒவ்செட் அச்சு இயந்திரங்களுக்கு மூலப்பிரதிகளை உருவாக்கும் கலைக்கு தம்மை வெகு சமார்த்தியமாகப் பழக்கிக் கொண்டனர். இந்த முறைகளில் ஐரோப்பியச் சஞ்சிகைகளின் முன்னோடிகளாக ஜேர்மனியில் ஸ்ருட்காட் நகரிலிருந்து வெளி வந்த "எண்ணம்" பிரான்சில் பாரீசிலிருந்து வெளிவந்த "தமிழ் முரசு" ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். இவற்றைத் தொடர்ந்து பல சஞ்சிகைகள் ஜேர்மனியில் வெளிவந்தன.

ஜேர்மனியில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் சஞ்கைகளைக் வெளிக் கொண்டு வந்தவர்களிடையேயும் அவற்றில் எழுதிய ஆக்கதாரர்களிடையேயும் எந்தவிதமான நெருக்கமோ அல்லது உறவுகளோ இல்லாதிருந்தது. இச்சஞ்சிகை ஆசிரியர்களும் ஆக்கதாரர்களும் வாசகர்களும் சந்திக்கவும் விமர்சிக்கவும் கலந்துரையாடவும் கூடிய ஒரு சந்திப்பை உருவாக்க சிலர் செய்த முயற்சிகளே "இலக்கியச் சந்திப்பு" ஆகப் பரிணமித்தது இந்த ஆரம்ப முயற்சிகளில் ஈடுபட்டவர்களில் ஜேர்மனியில் கோர்ண நகரிலுள்ள மூன்றாமுலக தகவல் நிலையத்தைச் சேர்ந்த திரு.பீட்டர் ஜெயரத்தினம். பார்த்திபன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

1988ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி கோர்ண நகரில் முதலாவது இலக்கியச்சந்திப்பு நடைபெற்றது. கலைவிளக்கு, சிந்தனை, தூண்டில், வெகுஜனம், புதுமை ,பெண்கள் வட்டம் ,ஏலையா அறுவை, நம்நாடு, யாத்திரை, வண்ணாத்துப்பூச்சி ஆகிய சஞ்சிகைகளும் நூல்களும் சந்திப்பு மண்டபத்தில காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன. ஜேர்மன் தமிழ் பத்திரிகைகளில் எழுத்துக்களால் மட்டும் அறிமுகமாயிருந்த பத்திரிகை ஆசிரியர்களும் ஆக்கதாரர்களும் வாசகர்களும் நேரில் சந்தித்து பேசிப் பழகுவது ஒரு புதிய அனுபவமாகவே இருந்தது. பத்திரிகைகளை எழுதுவதிலும் அச்சேற்றுவதிலும் உள்ள கஷ்டங்கள், சஞ்சிகைகளில் வெளிவரும் ஆக்கங்கள் பற்றிய விமர்சனங்கள் திறந்த மனதுடன் கலந்துரையாடப்பட்டன. வாசகர் விமர்சனம் என்பது இலக்கியச் சந்திப்பின் நிகழ்ச்சிநிரலில் ஒரு நிரந்த இடத்தை பிடித்துள்ளது.

பாரீஸ். இலண்டன் ஆகிய நகரங்களில் வாழ்ந்த புலம்பெயர்ந்த இலக்கியவாதிகளுக்கு இல்லாத கஷ்டமான சூழல் ஜேர்மனியில் இலக்கியவாதிகளுக்கு இருந்தது. ஒரு நாட்டின் தலைநகரத்தில் மட்டும் வாழாது பல நூற்றுக்கணக்கான கிலோமீற்றர்கள் தூரமுள்ள ஜேர்மன் மாநில நகரங்கள் எங்கும் இவர்கள் சிதறி வாழ்ந்தார்கள். அத்துடன் அரசியல் தஞ்சம் கோரியோர் ஒரு நகரத்திலிருந்து வேறு நகரத்திற்குச் செல்வதும் அரசாங்கத்திஞல் தடை செய்யப்பட்டிருந்தது. சந்திப்பில் கலந்து கொண்ட பலர் சட்ட விரோதமாகப் பிரயாணம் செய்தே இச்சந்திப்புக்கு வந்திருந்தனர். இத்தகைய கஷ்டங்களுக்கு மத்தியிலும் இலக்கியச் சந்திப்பு பல வேறு கருத்துக்கள் கொண்டவர்கள் ஒன்று கூடிப் பேசி, விமர்சித்து நாகரிகமாகக் கருத்துப் பரிமாறல்களைச் செய்யக் கூடிய களமாக அமையப் போகிறது என்பதை முதலாவது சந்திப்பிலிருந்தே உணரக் கூடியதாக இருந்தது.

இலக்கியச் சந்திப்புக்கும் ஜேர்மனியில் நடைபெறும் சில "தமிழ் விழாக்கள்" வெளியிடப்படும் வீடியோ கசட்டுகளுக்கும் அவற்றின் நேயர்களுக்குமிடையிலான வித்தியாசங்கள் முக்கியமானவை. திரை இசை நடனங்களும் பெண்களைத் தரக்குறைவாகப் பேசும் நாடகங்களும் கலைகள் என விழாக்களில் அரங்கேறுகின்றன. வீடியோ கசட்டுகளில் தென் இந்திய மசாலாப்படங்கள் போன்ற "டுயட்" பாடல்களும் லூஸ்தனமான தரக்குறைவான பகிடிகளும் கலை வெளியீடுகளாக வெளியிடப்படுகின்றன. இந்த விதமான சூழ்நிலைமைகளிலேயே டியுஸ்பேர்க் நகரில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் நடைபெற்ற ஒரு நிகழ்சியைக் குறிப்பிடுகின்றேன். இலக்கியச் சந்திப்பின் இறுதி நிகழ்சியாக ஒரு நாடகம் இடம் பெற்றது. நாடகத்தின் பெயர் "எருமை வாத்தியாரும் அருமை வேலைக்காரனும்" பெண்களை இழிவுபடுத்தும் வார்த்தைப் பிரயோகங்களும் தரக்குறைவான பகிடிகளும் அடங்கிய நாடகம் அது இந்த நாடகம் பல இடங்களில் நடத்தப்பட்டிருந்தாலும் இலக்கியச் சந்திப்பில் நடிகர்கள் சற்றும் எதிர்பாராத எதிர்ப்பையும் விமர்சனத்தையும் பெண்களிம் இருந்து பெற்றனர். இலக்கியச்சந்திப்பில் பங்குகொண்டவர்களிடம் குழு சார்பாக மன்னிப்பு கோரப்பட்டது. ஆஞல் இந்த நாடகத்திலும் பார்க்க கேவலமான நாடகங்களை சில "வாணி விழாக்களில்" பெண்கள் மௌனமாக ரசிப்பதையும் ஆண்கள் கைதட்டி ஆரவாரிப்பதையும் நாம் கண்டிருக்கின்ஞேம். இதுவே இலக்கியச் சந்திப்பபையும் மற்றைய விழாக்களையும் வேறுபடுத்தும் ஒரு அளவுகோல்.

பல்வேறு விடயங்களைப் பற்றி கலந்துரையாடும் களமாக- நான் பாரீஸில் இலக்கியச்சந்திப்பில் கூறியவாறு சொந்த மண்ணில் எமக்கு இன்று இல்லாது பேச்சுச் சுதந்திரத்தை பூரணமாக அனுபவிக்கக் கிடைத்திருக்கும் களமாக

**25ம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் ஒரு தொடர்கதை

75

சின்னத்தம்பி. வேலாயுதம்

1983 ஆடிக்கலவரத்தில் வடக்கு கிழக்கு அல்லாத ஸ்ரீலங்காவின் தென் பகுதிகளில் குறிப்பாக அழிக்கப்பட்ட தமிழர் உடமைகளைக் கணக்கிலெடுத்துப் பார்த்தால் இது சிங்கள தமிழ் விகிதாசாரத்துக்கு ஏற்ற முறையில் அமையவில்லை. அதாவது சிறுபான்மை இனம் தலைநகரிலும் சிங்களப் பகுதிகளிலும் பொருளாதாரத்தின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்தி வந்திருக்கிறது. இது தவிர இலங்கையரல்லாத இந்தியரின் சொத்துக்களும் குறிப்பிடத் தக்கவை. எனவே இது குறித்துச் சிங்கள மக்கள் தமிழர் மீது விரோத எண்ணங்களைக் கொண்டிருக்கத் தொடர்பு சாதனங்களும், இனவாதிகளும் நிறையவே கடமையாற்றியிருக்கக் கூடும்.

இலங்கை அமெரிக்கா போன்று முதலாம் உலக நாடல்ல, அமெரிக்கா திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. ஆனால் மூன்றும் உலக நாடான இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் அத்தகைய நிலை ஏற்படவில்லை. பொருளாதார வளர்ச்சியின்மை காரணமாக இனங்களுக்கிடையே ஒப்பீடு செய்து ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் நிலை பரவலாக எல்லா நாடுகளிலும் உள்ளன. ஆகவே ஈழத்தமிழர்கள் இதுபற்றிய தமது எண்ணங்களில் தெளிவான போக்கைக் கடைப்பிடித்திருந்தால் ஈழக் கோரிக்கை மிதவாதத் தன்மையுடையதாக நீண்ட காலத்துக்கு நகர்த்தப்பட்டிருக்கும். அது சரியான பிழையா என்று பாகம் இரண்டில் விளக்குவோம்.

1983 கலவரம் முடிந்த பின் "இனிமேல் சிங்களவருடன் வாழ முடியாது எனப் பலதரப்பட்ட தமிழர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன். பல தொழிலதிபர்கள், அரச பணியாளர்கள், வீடு, சொத்து உடமையாளர்கள் எனப் பலர் அடங்குவர் ஆனால் இந்தக் கூற்று எவ்வளவு தூரம் கனமானது, எவ்வளவு காலத்துக்கு நீடித்தது என்பதே எனது கேள்வி.

இன்று கொழும்பில் வெள்ளவத்தைப் பகுதியடங்கிய காலி வீதி 1983ல் இருந்த தமிழரை விடவும் அதிகமாகத் தமிழர் வாழும் பகுதியாக மாறி விட்டிருக்கிறது. மகாராஜா நிறுவனம் தொடக்கம் பல பெரிய தமிழர் தொழில் நிறுவனங்கள் பணத்தை குவிக்கின்றன. கொழும்பின் உதவி மாநகர பிதா ஒரு பருத்தித்துறைத் தமிழர். கொழும்பு மட்டுமன்றி முழுச் சிங்களப் பகுதிகளிலும் மீண்டும் தமிழர் தொழில் துறை நிலையங்கள் வந்து விட்டன. இதன் அர்த்தம் என்ன?

சிலவேளைகளில் ஜே.ஆர், சிறில் மத்தியு, காமினி போன்றோரின் வேலை தான் 83 கலவரம் அவர்கள் தற்போது பதவியில் இல்லை அதனால் மீண்டும் தமிழ் சிங்கள உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றனவா? அல்லது வடக்கு கிழக்குப் பகுதிகள் யுத்தப் பிராந்தியமாக இருப்பதனால் தெற்கிற்கு வந்து குடியேறுகிறார்களா? அல்லது அரசின் பொருளாதாரத் தடையை எதிர் கொள்ள முடியாமல் தெற்கே வருகிறார்களா? அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குப் பயந்து சிங்களவர் தெற்கில் வாழும் தமிழருடன் பயப் பிராந்தியத்தில் அனுசரித்துப் போகின்றனரா? அல்லது கொழும்பில் தற்போது ஏராளமாக வதியும் தமிழர்கள் தமது குடும்பங்களுடன் வெளிநாடுகளில் இணைந்து கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்காக உள்ளனரா? எது எப்படியிருப்பினும் 1983 கலவரத்தில் திட்டித் தீர்த்தவர்கள் சிங்களவருடன் பத்து வருடங்களுக்குள் மீண்டும் பழைய உறவுகளைப் புதுப்பித்து மனிதராக வாழக் கற்றுக் கொண்டுள்ளார்கள். மனிதர்களை மனிதர்களாகப் புரிந்து வாழ இரு இனத்திலும் நிரம்பவே மக்கள் இருக்கிறார்கள்.

1993 மே 1ம் திகதி இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை 1983 ஆடிக்கலவரத்தை விட மோசமான கலவரத்தை கொண்டு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தன ஆனால் அத்தகைய கலவரத்தை தூண்டக்கூடிய அரசியல்வாதிகள் அரசு, படைகள், காடையர்கள் யாரும் தயார் நிலையில் இருக்கவில்லை, அதனால் எல்லாமே ஸ்தம்பித்திருக்க வேண்டும், அல்லது இன்று சிங்கள மக்களிடம் புதிய அரசியற் போக்கு ஒன்று உருவாகி வருகிறது எனலாம்.

மேலும் இன்று கொழும்பில் வாழும் தமிழர்களில் பெரும்பான்மையானோர் வெளிநாட்டுக் காசோலைகளை மாற்றி சிங்களவர்களிடம் தான் வீட்டு வாடகைப் பணம் செலுத்துகிறார்கள். வெளிநாடு செல்லும் தமிழரால் சிங்களவருக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. முக்கியமான விடயம் நாட்டை விட்டு ஒரு தமிழ் குடும்பம் அந்நிய நாடொன்றில் சங்கமிக்கச் செல்கிறது என்றால் அது சிங்கள மக்களைப் பொறுத்தவரை பிரச்சனை குறையும் விடயமே. பெரும்பாலும் வாடகை வீடு, ஹோட்டல் சத்திரம், லொட்ஜ் எல்லாம் தமிழர் நிரம்பி வழிகிறார்கள். வெளி நாட்டுக் காசோலைகள் செல்கின்றன. சிங்களவர் உழைக்கிறார்கள். இத்தகைய சூழலில் கொழும்பில் கலவரத்தை தொடங்குவது சிங்களவருக்கு எந்த வகையிலும் லாபமில்லை. அதனால் உழைக்கும் வரை உழைத்து விட்டு பின் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கிறார்கள் ஆகவே 1983 போன்று ஒரு கலவரம் மீண்டும் வெடிப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும் வடபகுதியில் கொல்லப்படும் இராணுவ உயர் அதிகாரிகளுக்காகவோ அரச படைகளுக்காகவோ திடீர் உணர்விழந்து கலவரத்தில் இறங்கும் மனோ நிலையில் இன்று சிங்கள மக்கள் இல்லை. அவர்கள் அத்தகைய கொலைகளை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக எடுக்கப் பழகி விட்டார்கள்.

அடுத்து வடகிழக்குப் பகுதியின் நெருக்கடிகள் அவை பல்வேறு உருவில் வந்தாலும் மக்கள் தெற்கு நோக்கி வருவதை முன்னையை விட இப்போது சிங்கள மக்கள் புரிந்து வருகிறார்கள். இது போன்று பல காரணங்கள் 1983 ஆடிக் கலவரம் போன்று மீண்டும் ஒரு தடவை நடைபெறும் வாய்ப்புகளைக் குறைக்கின்றன.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை;

20-9-91ல் தொடங்கி 20-8-93 ல் முடிகின்ற இத் தொடரில் இதுவரை வந்த விடயங்கள் பாகம் ஒன்று என வருகிறது. 1956-83 ஆண்டுகால இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு சுருக்கமாக விமர்சனப் பார்வையுடன் முன்வைக்கப் பட்டுள்ளது. பண்டாரநாயக்கா, திருமதி பண்டாரநாயக்கா, தேசிய அரசாங்கம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம், ஐக்கிய முன்னணி அரசாங்கம், சேகுவோராப் புரட்சி, ஐ.தே.கட்சி அரசு, 1983 ஆடிக் கலவரம் ஆகிய அத்தியாங்கள் உள்ளடக்கப பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் முஸ்லீம்கள், இந்திய வம்சாவளித் தமிழர், இலங்கையின் இடது சாரிகள் ஆகிய முன்று அத்தியாயங்கள் இத் தொடரில் சேர்க்க உத்தேசித்திருந்த போதும் இயலவில்லை. அவை காலாகாலத்தில் கட்டுரை வடிவம் பெற்று வரும்.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு எனும் போது 1930 களில் தொடங்கி இன்றுவரையான காலம் வரை எழுதப்பட்டாலே அது முழுமையானது. ஆனால் 1956 லிருந்து இன்றுவரையான அரசியலை அறிந்தால் எமது அரசியல் மேலாதிக்க சக்திகளின் பொதுவான போக்கை அறிந்து கொள்ள முடியும்.

1930 களில் தேசியத் தலைவர்களாகக் கணிக்கப்பட்ட ஆனந்தக் குமாரசுவாமி, அவரின் மைத்துனர் பொன்னம்பலத்தின் பிள்ளைகளான பொன் அருணாசலம், பொன் இராமநாதன் போன்றோர் படித்த இலங்கையருக்கான பிரதிநிதிகளாக சிங்கள மக்களாலும் தெரிவு செய்யப் பட்டனர். 1930-1947 ஆண்டுகள் அந்நிய ஏகாதிபத்திய அடிவருடிகளாக செய்யப்பட்ட சிங்களத் தலைமைகளும், தமிழ் தலைமைகளும் போட்டி போட்டுக் கொண்டு ஐக்கியமாகச் செயற்பட்ட காலம். யாழ்ப்பாணத்தில் மட்டும் இளைஞர் காங்கிரஸ் காந்தியப் போராட்டத்தை முன்னெடுத்தது. இதற்கு பண்டாரநாயக்காவும் ஆதரவாகவும் இருந்தார்.

ஆனால் 1947 சோல்பரி கமிஷன் காலத்திலிருந்து 1956 வரை ஐ.தே. கட்சி ஆட்சியும் தமிழர் தலைமை ஜி.ஜி. பொன்னம்பல த்திடமுமிருந்தது. தமிழ் என்ற சொல்லை அடைமொழியாகக் கொண்ட தமிழ் காங்கிரஸை ஜி.ஜி. ஸ்தாபித்து இன உணர்வுகளைத் தனது சுயலாபங்களுக்கு பயன்படுத்தி வடக்கு கிழக்கை தனது கைக்குள் போட்டுக் கொண்டார். கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஐக்கியமாயிருந்ததுடன் அறப்போர், சத்தியாக்கிரகங்களில் ஈடுபட்டு இன உணர்வை சிக்கலாக்கவில்லை.

1956 ம் ஆண்டு தான் சுதந்திர இலங்கையின் திருப்பு முனையாகும். அந்நிய முதலாளித்துவத்துக்கு எதிரானதும் தேசிய முதலாளித்துவத்தின் தோற்றத்துக்கான நடவடிக்கைகள் பண்டாரநாயக்காவினால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. 450 வருடங்கள் அந்நிய ஆட்சியில் அடங்கி ஒடுங்கி அடிமை வாழ்க்கைக்கு பயிற்றப்பட்ட ஒரு நாட்டில் தேசிய எழுச்சியைத் தூண்டும் போது அங்குள்ள உள்ளார்ந்த முரண்பாடுகள் கூர்மையடைவது வழமையானதே. அத்தகைய நிலையில் தான் இலங்கையில் பண்டாரநாயக்கா காலத்தில் இன உணர்வு தேசியப் பிரச்சனையாக உருவெடுத்தது. அதனாலேதான் பண்டாரநாயக்க காலத்தில் இன உணர்வு தேசியப் பிரச்சனையாக உருவெடுத்தது. அதனாலே தான் பண்டார நாயக்க காலத்திலிருந்து இத்தொடரை எழுதினேன்.

1956 ல் பண்டாரநாயக்க இடது சாரிகளுடனை கூட்டை ஆரம்பித்தார். தமிழர் பிரச்சனையைத் தீர்க்க முயற்சித்தார் ஆனால் தமிழ் மக்கள் தலைவர்களின் மேலாதிக்க குல வெறி இடதுசாரிகளுடனும், பண்டார நாயக்கவுடனும் கூட்டுச் சேர விடவில்லை. அவைகள் முழுமையாகக் சொல்லப் பட்டுள்ளதுடன் தமிழருக்குள் எத்தகைய சாதி வெறி இருந்ததென்பதையும் இது தமிழர் அரசியலின் புற்று நோய் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளேன். இவைகள் கருத்து, நடைமுறை ரீதியாக களையப்படல் வேண்டும்.

இறுதியாக, என்னை ஒரு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளனாக இனங் காண யாராவது முயற்சி எடுத்திருந்தால் அதை மறந்து விடுங்கள் யப்பானுக்கு எதிரான யுத்தத்தில் மாவோ சியாங்கே சேக்குடன் ஐக்கிய முன்னணி அமைத்துப் போராடியுள்ளார் இந்த ஐக்கிய முன்னணிக் கோட்பாடு ஒரு தந்திரோபாயம் மட்டுமே. இது பற்றி பாகம் இரண்டில் பார்ப்போம். ஒரு அந்நிய ஏகாதிபத்தியத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டு தேசத்தை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டு செல்வதுடன் உள்நாட்டில் விடுதலையை நேசிக்கும் சகல சக்திகளையும் வெளிநாட்டு உதவிகளுடன் அடக்கக் கூடிய ஐ.தே. கட்சிக்கெதிராக இருக்கக் கூடிய ஒரு பலமான சக்தியான சுதந்திரக் கட்சியுடன் சில போராட்டங்களுக்கு மட்டும் இணைவதனால் மட்டும் அவர் ஒரு அக்கட்சி ஆதரவாளனாகி விடமுடியாது.

இறுதியாக, வாசகர்களின் வேண்டுகோளை நிறைவேற்றும் நிமித்தம் கழிப்பன கழித்து புகுத்துவன புகுத்தி நல்லதோர் வடிவமைப்பில் புத்தகமாக தொடரை வெளியிட விளைகின்றோம். ஆசிரியர் ஜோர்ஜ், தங்கை மொனிக்கா மற்றும் ஆசிரியர் குழுவினர், பயனுள்ள தகவல்களை தந்த நண்பர்கள் வாசகர்கள் அனைவருக்கும் என் நன்றிகள். பாகம் இரண்டில் சந்திப்போம்.

## ஒரு சிறு கதை

ஆனந்தக் குமாரசாமி, பொன் அருணாசலம், பொன் இராமநாதன், ஜி.ஜி.பொன்னம்பலம் எஸ்.ஜே.வீ. செல்வநாயகம், அமிர்தலிங்கம், வரதராஜப் பெருமாள் ஆகியோர் இதுவரை அஞ்சல் ஓட்டப் போட்டியில் ஓடியவர்கள் இந்திய இராணுவ கலவரத்தில் வரதர் அஞ்சல் பொல்லை தொலைத்துவிட்டார். யாராவது கண்டெடுத்தால் அதை பிரபாகரனிடம் கொடுத்து தொடர்ந்து ஓடி மற்றவர்களிடம கையளிக்கும்படி கூறி வைக்கவும். கையில் பொல்லு இல்லாமல் ஓடுபவர் போட்டியிலிருந்து விலக்கப்படுவார் என்பதையும் கண்டிப்பாக கூறிவிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

அன்று தொடங்கிய சுமணதாஸ் பாசுடனான நட்பு நாங்கள் வவுனியாவை விட்டு மாற்றலாகி மீண்டும் யாழ்ப்பாணம் செல்லும் வரையில் பத்து வருடங்களாக நீடித்தது. சுமணதாஸ் பாஸ் 1953 லிருந்தே அப்பகுதியில் வசித்து வருவதால் நன்றாகத் தமிழ் பேசுவார். இருந்தாலும் எம்.எஸ். பெர்னாண்டோவின் குரலின் ஓரத்தில் இடையிடையே ஒலிக்கும் அந்த மழலைத் தமிழ் சுமணதாஸ் பாஸின் குரலிலும் ஒலிக்கத் தான் செய்தது.

அந்தக் காலகட்டத்திலேயே சுமணதாஸ் பாஸ் ஒரு முற்போக்கு வாதியாகத்தான் காட்சியளித்தார். அவரது மனைவி நந்தாவதிக்கு ஏற்கனவே முறை தவறிய தொடர்பொன்றினால் உருவான பெண் குழந்தையொன்று இருந்தது. சுமணதாஸ பாஸ் அந்த பெண்குழந்தைக்கு எந்த விதக் குறையும் தெரியாமல் தான் பார்த்து வந்தார். அந்தக் குழந்தை மல்லிகாவிற்கு எங்கள் வயது தான். மனைவி நந்தாவதி கூட ஒரு நிரந்தரத் தொய்வு நோயாளிதான். சுமணதாஸ் பாஸ் மனைவி நந்தாவதியின் மேலும் குழந்தை மல்லிகா மேலும் அளவு கடந்த அன்பையே வைத்திருந்தார்.

இவர்கள் தவிர ரஞ்சித் என்ற ஒரு இளைஞனும் சுமணதாஸ் பாசுடன் சேர்ந்து வேலை செய்து வந்தான். அவன் வசித்தது அவர்களுடன் தான். சுமணதாஸ் பாஸ் வீட்டிலேயே மரவேலை செய்வதற்கான சகல வீட்டிலேயே மரவேலை செய்வதற்கான சகல வசதிகளையும் வைத்திருந்தார். அப்பகுதியில் இருந்தவர்களிற்கு மலிவான விலையில் தேவையான மரத் தளபாடங்களையெல்லாம் சுமணதாஸ் பாஸ் தான் செய்து கொடுத்து வந்தார். ஒய்வான நேரங்களிலெல்லாம் சுமணதாஸ் பாஸ் எங்களுடன் குழந்தைகளைப் போல் ஆடிப் பாடி விளையாடவும் தயங்குவதில்லை. இன்னமும் என் காதுகளில் அவர் ஒரு முறை சொல்லித் தந்த பாடலொன்றின் வரிகள் ஒலிக்கின்றன.

"தவளைக்குஞ்சுகள் என்ன விநோதம் ஆடிப்பாடி ஓடி என்ன விநோதம் இப்படியொரு தமிழ் பாட்டு ஏற்கனவேயிருந்தா எனக்குத் தெரியாது. ஆனால் சுமணதாஸ பாஸ் இந்தப் பாட்டை ஒரு வித மழலைத் தமிழில் பாடிச் சொல்லித் தரும்போது கேட்பதற்கே ஆசையாகயிருக்கும். இனிமையாகயிருக்கும் .

ட்ரெயிலரொன்றை இழுத்துக்கொண்டு ட்ரக்கொன்று வரவும் சிந்தனை சிறிதே கலைகிறது. இன்வொயிஸ்சை சரி பார்த்து, சீல் முறையாக இடப்பட்டிருக்கிறதா, சீல் நம்பரும் இன்வொயிசிலுள்ள நம்பரும் ஒன்று தானா என்பதைப் பார்த்து விட்டு உள்ளே அனுப்புகின்றேன். கொண்டு வந்த ட்ரெயிலரை விட்டு விட்டு, பொருட்களுடன் தயாராகியிருந்த இன்னுமொரு ட்ரெயிலரை இழுத்துக் கொண்டு வந்த ட்ரக் சென்று விடவும் பழையபடி தனிமையில் மூழ்கிப் போய் விடுகின்றேன். எந்த வித ஆரவாரங்களுமற்று ஒரு வித ஆழ்ந்த அமைதியில் நகரம் மூழ்கிக் கிடக்கின்றது. வெகு தொலைவில் எங்கோ விண்ணைக் கிழித்துக் கொண்டு ஜெட்டொன்று விரைவது இலேசாகக் கேட்கின்றது.

வந்த ட்ரக் டிரைவரின் தோற்றம் திடீரென ஞாபகத்திற்கு வருகின்றது. ஆஜானுபாகுவான என் பார்களே! அப்படியொரு வளர்த்தி! அகன்ற கைகளில் பச்சை குத்தி, மொட்டைத் தலையுடன் காட்சியளித்த அவனது தோற்றம் தோற் தலையர்களில் ஒருவனாகயிருப்பானோ, அண்மைக் காலமாகவே அதிகரித்தது வரும் தோற் தலையர்களின் அப்பாவி வந்தேறு குடிகள் மீதான வன்முறைகள் பார்க்கப் போனால் உலகம் முழுவதையுமே, சிறுபான்மை வெள்ளையினத்தவர்கள் குறிப்பாக ஆங்கிலேயர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார்கள். மொழியை, மதத்தைப் பரப்புவதில் வெற்றியும் கண்டிருக்கின்றார்கள் இந் நிலையில் வெள்ளையினத்திற்கே ஆபத்து என்று சொல்லி இப்படியொரு கூட்டம்.

பிரதேசத்தின் அமைதியை மீண்டும், ஒரு நீண்ட புகையிரதத் தொடர் கிழித்துச் செல்கிறது. நினைவுகள் மீண்டும் பின்னோக்கிப் பாய்கின்றன.

நாங்கள் முதன் முதல் சென்ற பொழுது குருமண்காடு அபிவிருத்தி குன்றியதொரு பிரதேசமாக புளியங்குளம் என்று ஒரு குளம். மாரியில் தாமரைகள் பூத்துக் குலுங்கி அழகாகத் தெரியும். குளக்கட்டில் பாலைகள், வீரைகள் சில நிழல் தந்து கொண்டிருந்தன. குளத்தின் மறு புறத்தே வயல் வெளி விரிந்து கிடந்தது. நீர்க்காகங்கள், மீன்கொத்திகள், ஆலாக்களென்று எந்த நேரமும் பல்வேறு வகையான பறவைகளின் வாசஸ்தலமாக அக்குளப் பகுதி காட்சியளித்தது. குளத்தின் இரு பகுதிகளில் படிக்கட்டுக்கள் கட்டி வைத்திருந்தார்கள் மாரியில் குளம் பொங்கினால் வழிவதற்கேற்ற வகையிலான அணைமாதிரிக் கட்டி வைத்திருந்தார்கள். ஜப்பான் மீன், விரால்மீன் என்று பல்வேறு வகையான மீன்களோடு, தண்ணீர்ப் பாம்புகளும் அடிக்கடி காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்திற்கு முன்பக்கம் குருமண் காட்டிற்குச் செல்லும் பாதையை அண்டியதாக ஒரு மயானம். முஸ்லீம்களிற்குச் சொந்தமானதொரு மயானம். அந்த மயானததைச் சுற்றியும் காடு பரந்து கிடந்தது.

முதன் முதலாக அப்பகுதிக்கு வந்போது அம்மாவிற்கு மனது சிறிது சரியில்லாததாக யிருந்ததை உணர்ந்தேன். போதாதற்கு இந்த மயானம் வேறு அவவின் கலக்கத்தை அதிகப்படுத்தி விட்டது. அதுவும் பௌர்ணமி நாட்களில் இந்தச் சுடலையிலிருந்து நரிகள் ஊளையிடும்போது, நள்ளிரவில் படுக்கையில் புரளும் போது கூட ஓரளவு நெஞ்சு கலங்கத்தான் செய்யும்.

எனக்கோ முதற் பார்வையிலேயே அப்பகுதி பிடித்துப் போய்விட்டது. மரங்களிலிருந்து ஆங்காங்கே 'தாட்டன் குரங்குகள்', என்று அப்பகுதி மக்களால் வர்ணிக்கப்படும் கருமுஞ்சிக் குரங்குகளை தெரிந்தன. அவை அடிக்கடி கொப்புகளில் தாவிக் கொண்டன அவற்றை ஆர்வத்துடன் பார்த்தேன்.

பிரமாண்டமாக வளர்ந்திருந்த கருங்காலிம ரங்கள், பாலை மரங்கள், முதிரை மரங்கள் எனக்குப் பிரமிப்பைத் தந்தன. ஆரம்பத்தில் கலக்கத்தைத் தந்தாலும் போகப்போக அம்மாவிற்கும் அப்பகுதி பிடித்துப் போனது.

முதன் முதலாக சுமணதாஸ பாஸ் வழிகாட்ட நாங்கள் வாடகைக்கு அமர்த்தியிருந்த வீட்டை அடைந்த போது நான் அடைந்த அனுபவங்கள் இன்னமும் என் நெஞ்சின் ஆழத்தே பசுமையாகப் பதிந்து போய்க் கிடக்கின்றன. மன்னார் ரோட்டிலிருந்து காட்டினூடு சென்ற மண் பாதை முடியும் இடத்தில் நான்கு வீடுகள் மட்டுமேயிருந்தன. அதில் நாங்கள் பார்த்திருந்தது முதலாவது வீடு. பெரிய வளவின் நடுவில் அமைந்திருந்த ஓடு வேய்ந்த வீடு. வளவில் கோவைப் பழமரமொன்றும், முருங்கைகள் சிலவும், முள் முருக்கையொன்றும் காணப்பட்டன. அதைத்தவிர 'தகரை' என அழைக்கப்படுகின்ற ஒருவிதமான பற்றையாக வளரும் செடி, முழு வளவையும் மூடிப் படர்ந்து கிடந்தது. வீட்டிற்கு முன்பாக, அடர்ந்த காடு படர்ந்து கிடந்தது. புதியவர்களான எங்களைக் குரங்குகள் சில ஆவலுடன் பார்த்துவிட்டு கொப்புகளில் குதித்துக் கொண்டன்ன. மர அணிலொன்று துள்ளிப் பாய்ந்தது.

மாமா தான் முதன் முதலில் வீட்டிற்குள் நுழையச் சென்றார். சென்றவர் "அக்கா இங்கை பாரணை" என்றபடி துள்ளிக் குதித்தப்படி ஓடி வந்தார். எல்லோரும் ஏதோ என்று பதறி விட்டோம். வேறு ஒன்றுமில்லை புடையனொன்று உண்ட மயக்கத்தில் கதவருகில் மயங்கிக் கிடந்திருந்தது. சுமணதாஸ் பாஸிற்குச் சிரிப்பாக விருந்தது. அருகிலிருந்த மரக்கட்டையொன்றை எடுத்து அடித்துப் போட்டு, ஒரு புறத்தில் போட்டுக் கொளுத்தினார். வன்னி மண்ணில் இந்தப் பாம்புகளிற்கு மட்டும் குறைவேயில்லை, இந்தப்புடையன், கண்ணாடிப் புடையன், நாகம், பச்சைப் பாம்பு, தண்ணீர்ப்பாம்பு, வெங்கணாந்தி, மலைப்பாம்பு என்று பல்வேறு வகையான பாம்புகள்! பறநாகம் பற்றிக் கூட அவ்வூர்மக்கள் அடிக்கடி கதைத்துக் கொள்வார்கள்.

தொடரும்.

## இலக்கியச் சந்திப்பு...

அமைந்திருக்கும் இலக்கியச்சந்திப்பு, தன் வளர்ச்சிப் போக்கில் தனக்கெனச் சில நடைமுறைகளை உருவாக்கியுள்ளது. தனக்கென ஒரு நிரந்தரமான ஒரு ஆதரவாளர்கள் கூட்டத்தை உருவாக்கியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களிலும் ஏற்பட்ட வளர்ச்சிகள் பின்னடைவுகள் தவறுகள் இவற்றுடன் ஐந்து வருடங்களாகத் தொடருபவர்கள் இணைந்தவர்கள் பிரிந்தவர்கள். .. இப்படியானவர்களுடன் இலக்கியச் சந்திப்பு என்ற அமைப்பு விவாதங்கள், விமர்சனங்கள், சுயவிமர்சனங்கள் ஆகியவற்றினூடாக வளர்ச்சி பெற்றுக் கொண்டு செல்கின்றது.

சுயநலமிகளினதும் பிற்போக்குவாதிகளினாலும் ஏற்பட்ட பாதிப்புகளைப் போலவே தம்மை அதிதீவிரவாதிகள் தூய்மையானவர்கள் என்று எண்ணிக் கொள்பவர்களினாலும் இலக்கியச் சந்திப்பு பாதிக்கப்பட்டதுண்டு. ஆனால் எந்தவித பாதிப்புகளையும் ஜனநாயகரீதியாக அணுகும் நடைமுறை இலக்கியச்சந்திப்பைப் பாதுகாத்துள்ளது. இப்படியான ஒரு வெகுஜன அமைப்பில் நம்பிக்கையற்றவர்கள் திரும்பிப் பார்க்காமலே போய்விட்டார்கள். இழப்பு அவர்களுக்குத்தான்.

இலக்கியச்சந்திப்பு புலம் பெயர்ந்த புதிய இளம் எழுத்தாளர்களை கவிஞர் கவிஞைகளை விமர்சகர்களை. கலைஞர்களை உருவாக்க, அறிமுகப்படுத்த உதவியுள்ளது அராஜகம், இனவாதம், பெண் ஒடுக்குமுறை ஆகியவற்றிற்கு எதிரகக் துணிவுடன் குரல் கொடுக்கக் கூடியவர்களை உருவாக்கியுள்ளது.

கையெழுத்து, தட்டச்சு இயந்திரங்கள் மூலமாக உருவாகிய சஞ்சிகைகள், கம்பியூட்டர் மூலமாக எழுதப்பட்டு, வடிவமைக்கப்பட்டு வெளிவர ஆரம்பித்துள்ளன. இலக்கியச்சந்திப்பில் வெளியிடப்பட்ட பல நூல்கள் இலக்கியச்சந்திப்பில் கலந்து கொள்பவர்களின் உழைப்பினாலேயே வெளிக் கொணரப்பட்டன. தற்போது தேனீ, அஆஇ, மனிதம், ஊதா, சக்தி ஆகிய சஞ்சிகைகளும் இலக்கியச் சந்திப்பில் இணைந்துகொண்டன.

இதுவரை நாம் கற்றுக் கொண்டவை பல.. செய்தவை சில, செய்யாதிருப்பவை பல. செய்ய வேண்டியவை மிக மிக.... கடந்த கால அனுபவங்களிலிருந்து இச்சந்திப்பை இன்னும் பிரயோசனமான ஒரு ஐரோப்பியச் சந்திப்பாக்க வேண்டிய தேவை இன்றுள்ளது. இந் சந்திப்பில் எடுக்கப்படும் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் மேலும் அர்த்தமுள்ளவை யாக்கப்பட வேண்டும். இலக்கியச்சந்திப்பு வெறும் இலக்கிய மேடையல்ல என்பதைக் கடந்த கால அனுபவங்கள் காட்டியுள்ளன இன்றைய அரசியல் நிலமைகள், மனித உரிமை மீறல்கள் . ........ இவை பற்றியெல்லாம் ஐரோப்பா வாழ் தமிழர்களின் குரலாக இச்சந்திப்பு ஒலிக்க வகை செய்யப்பட வேண்டும். இதற்கான கருத்துக்கள் நடவடிக்கைகள் எல்லாம் வருங்கால இலக்கியச்சந்திப்புக்களில் விவாதிக்கப்பட வேண்டியவை, நடைமுறைப் படுத்தப்பட வேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்த எழுத்தாளர்களே! உங்கள் எழுத்துக்கள் யாருக்கு?

## இலங்கையன்

எழுத்தாளர் சங்க அங்குரார்ப் பணக் கூட்டம் ஒன்றிற்குப் போயிருந்தேன். ஏறக்குறைய ஐம்பது பேர் வரையில் சமூகமளித்திருந்தார்கள் என்னைப்போல ஐம்பது வயதுக்கு மேற்பட்டோர் என்னைவிட ஐந்து பேர்தான் இருந்தார்கள். அவர்கள் எழுத்துலகத்தில் சஞ்சரித்த வயதாளிகள் என்ற முறையில் அவர்களது கருத்துரைகளையும் வாழ்த்துரைகளையும் பகரும் பொருட்டு கூட்ட அமைப்பாளர்களால் அழைக்கப்பட்டவர்கள் போல எனக்குப்பட்டது. கவிஞர் கந்தவனம், ஈழத்துப் பூராடனார், மகாஜன கல்லூரி பழைய அதிபர், நாவற்குழியூரான் ஆகியோர் தங்களது கருத்துரைகளை வளங்குமாறு அழைக்கப்பட்டனர்.

புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் கவனத்திற்கு கொண்டு வர நான் எண்ணியிருந்த "புலம்பெயர்ந்த எழுத்தாளர்களே! உங்கள் எழுத்துக்கள் யாருக்கு" என்ற கேள்வியை எழுப்பி அதற்கான காரணகாரியங்களை விளக்குவதற்கான சந்தர்ப்பம் இல்லாமற் போய்விட்டது. தாயகத்தில் இக்கேள்விக்கு இடமில்லை என்பதை எவரும் ஏற்றுக்கொள்வார்கள். அங்கே தாய்மொழியில் கல்வி கற்கும் சூழல் நிரந்தரமாக அமைந்துள்ளது. இங்கே அவ்வகைச்சூழல் இல்லை. தாயகத்தில் தமிழைக் கற்றவர்களும் தமிழில் கற்றவர்களுந்தான் இங்கே முத்தமிழ்ப் பணிகளில் ஈடுபடுகின்றார்கள். இங்கே தற்பொழுது வாழும் தாயகத்துக் கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்கள் போட்டி போட்டுக்கொண்டு முத்தமிழ் விழாக்களை நடத்தி வருவதையும், அத்துடன் இங்கேயுள்ள கல்லூரி மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் தங்கள் தங்கள் கல்லூரிகளினதும் பல்கலைக் கழகங்களினதும் பெயரில் முத்தமிழ் விழாக்களை நடாத்தி வருவதாயும் நாம் அறிவோம். இவை எல்லாம் எமது மொழி கலை கலாச்சாரங்களை பேணும் நோக்குடன்தான் நடாத்தப்படுகின்றன. இவற்றை நடாத்தும் மாணவர்கள் தாயகத்தில் கல்வியை தமிழில் கற்றதனால் ஏற்பட்ட மொழிப் பற்றினாற்தான் இவற்றை நடாத்தத் தூண்டப்படுகிறார்கள்.

இங்கே இப்பொழுது இடைநிலைப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் தமிழ்மொழி அறிவு, எழுத்தாளர்களின் ஆக்கங்களை வாசித்து விளக்க கூடியளவுக்கில்லை என்றுதான் கூற வேண்டும். ஆரம்ப பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களின் தமிழ் மொழியறிவோ மிகக் கவலைக்கிடமானது. இதைப்பற்றி பெற்றோர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

கனடாவில் பாரம்பரிய பல்கலாச்சாரத்திட்டங்களின் கீழ், ஆரம்பக் கல்வி நிலையிலும் இடைநிலைப்பள்ளி நிலையிலும் மாணவர்கள் தங்கள் தாய்மொழியைக் கற்பதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் மாகாண அரசுகளால் அளிக்கப்பட்டுள்ளன. ஒன்ராரியோ மாகாணத்தைப் பொறுத்த வரையில் எமது மக்கள் அதிகமாக வாழும் ரொரொன்ரோ பெருநகரிலும் அதையண்டிய பிரதேசங்களிலும் கல்விச் சபைகளினால் எமது தாய் மொழியை தரம் ஒன்றிலிருந்து தரம் பதின்மூன்று வரையும் கற்பதற்கான வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டிருப்பதை நாம் எல்லோரும் அறியோம். தரம் ஒன்றிலிருந்து தரம் எட்டு வரை ஆரம்பக்கல்வி பெறும் மாணவர்களுக்கென பாரம்பரிய மொழித்திட்டத்தின் கீழும், இடைநிலைக்கல்வி பெறும் மாணவர்களுக்கென 10,11,13, ஆந் தரங்களில் பல்தேசிய மொழி திறமைச்சித்திப் பாடத்திட்டத்தின் கீழும் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. இவ்வகுப்புக்கள் வாரநாட்களிலும், வார முடிவு நாட்களிலும் நடைபெறுகின்றன. பாரம்பரிய பாடத்திட்டத்தின் கீழ் தரம் 8 ஐ முடித்தவர்கள் இடைநிலைக் கல்வியை ஆரம்பிக்கும் பொழுது, தாய்மொழிக்கான திறமைச்சித்திப் பாடத்திட்டத்தின் கீழ் தரம் 10 இல் சேர்ந்து படிக்கலாம், பின்னர் 11 இலும் அதன் பின்னர் 13 இலும் சேர்ந்து படித்து மூன்று திறமைச் சித்திகளைப் பெற வாய்ப்புண்டு. இம் மூன்று திறமைச்சித்திகளில் 10,11 ஆந் தரங்களுக்கான திறமைச்சித்திகள் ஒன்ராரியோ இடை நிலைப்பள்ளி டிப்புளோமாவுக்குத் தேவையான இரண்டு திறமைச் சித்திகளாகவும் தரம் 13 க்கான திறமைச்சித்தி ஒன்ராரியோ கல்விசார் தராதரப் பத்திரத் திற்குத் தேவையான ஒரு திறமை சித்தியாகவும் கருதப்படும் என்பதை அதிகமான மாணவர்களும் பெற்றோர்களும் அறியாத நிலையிலேயே உள்ளார்கள்.

சென்ற பாடசாலை வருடத்தில் இப்பாடத்திட்டங்களுக்கான வகுப்புகளில் சேர்ந்து படித்த மாணவர்களின் எண்ணிக்கைகளைக் கருதுமிடத்து, மொழி கலை கலாசாரங்களைப்பற்றி பெருமைப் படும் நாம் வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான். இந்தக்காலத்தில் ரொறன்ரோ பெருநகரிலும் அதையண்டிய பகுதிகளிலும் ஏறக்குறைய 12 000 மாணவர்கள் ஆரம்பக்கல்வியையும், 8000 மாணவர்கள் இடைநிலைக்கல்வியையும் பெற்றார்களென அறியக் கிடக்கின்றது. இவர்களில் ஏறக்குறைய 1000 ஆரம்பநிலைக் கல்வி மாணவர்களே பாரம்பரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கல்வி வகுப்புக்களிலும், ஏறக்குறைய 160 இடைநிலைக்கல்வி மாணவர்களே தாய்மொழிக் கல்விக்கான திறமைசித்தி வகுப்புக்களிலும் சேர்ந்து படித்தார்களென அறியக் கிடக்கின்றது. அதாவது ஆரம்பநிலைக் கல்விமாணவர்களில் ஏறக்குறைய 9 வீத மாணவர்களும் இடைநிலைக்கல்வி மாணவர்களில் ஏறக்குறைய 2 வீத மாணவர்களுந்தான் தாய் மொழிக் கல்வியைப் பெற்றுர்கள் என்பது தெளிவு.

இப்புள்ளிவிபரத்திலிருந்து நாம் அறியக்கிடப்பது என்ன? அரசு தாய் மொழியைக் கற்பதற்கான வாப்பை அளித்திருந்தும் அதை எமது பெற்றுரும் மாணவர்களும் போதியளவு பயனை எடுக்க அக்கறை காட்டவில்லை என்பதே உண்மை.

இந் நிலையில் எழுத்தாளர்களே, உங்கள் எழுத்துக்களும் கலைப் படைப்புக்களும் யாருக்கு எதுவரைக்கும் என்ற கேள்வி எழாமலிருக்க முடியாது. இந் நிலமை நீடிக்குமாயின், மொறிசியஸ் சீசெல்ஸ் பிஜி தீவுகள், கரிபியன் நாடுகளில் வாழும் இந்திய வம்சாவழியினரின் நிலைதான் எம் சமுகத்தினருக்கும் இங்கே ஏற்படும். இம்மக்கள் இந்திய மொழி எதுவும் தெரியாத நிலையில், இந்திய கலை கலாச்சாரமின்றி வாழ்வதை நாம் அறியாமலில்லை. இந் நிலைமை எங்களுக்கும் ஏற்படவேண்டுமா? எழுத்தாளர்களே! இந் நிலைமை இங்கே வாழும் எம் புலம் பெயர்ந்த சமூகத்தவர்களுக்கு ஏற்பாடதவாறு பேணும் பணியில் உங்களுக்கு மிக முக்கியமான பங்குண்டு என நான் கருதுகிறேன். அந்த வகையில் உங்கள் எழுத்துக்களையும் படைப்புக்களையும் திசை திருப்பிப் பணியாற்ற வேண்டியது உங்கள் கடமை. தொடர்ந்து தமிழ் மொழியை கற்பதில் அக்கறை காட்டாவிட்டால் இங்கே இருக்கப்போகும் எமது அடுத்த சந்ததியினருக்கு உங்கள் எழுத்துக்கள் படைப்புக்கள் எவ்வித பயனுமளிக்க முடியாத் நிலைமைதான் ஏற்படும்.

நடைமுறையில் இருக்கும் தமிழ் மொழியைக் கற்பதற்கான பாரம்பரிய திறமைச் சித்தி பாடத்திட்டங்கள் தாய்மொழிகளைக் கற்பதற்காக கல்விச்சபைகளால் ஆக்கப்பட்ட விபரங்களையும் விளக்கங்களையும் உள்ளடக்காத மேல்வாரியான வழி முறைக் குறிப்புக்களை அடியொற்றி ஒரு சில அனுபவமுள்ள ஆசிரியர்களால் ஆக்கப்பட்டவையே. அந்தவகையில் அத்திட்டங்கள் ஆசிரியர்க்கு ஆசிரியர் வெவ்வேறு விதமாக நடைமுறைப் படுத்தப்படலாம். இவ்வகை குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் தமிழ் மொழியைக் கற்றல் கற்பித்தலுக்கான வழிமுறைகள் சாதனங்கள் ஆகியவற்றின் தரங்களை திறம்படுத்தும் வகையிலும் எழுத்தாளர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் பெரும் பங்குண்டு. இந்த வகையில் இப்பாட நெறிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எழுத்தாளர்கள் தமிழ் அறிஞர்கள் ஆகியோரின் தமிழ் அறிவுசார் கருத்துக்களை நாடி நிற்பது மிகப் பயன் தருவதாக அமையும்.

தமிழ் மொழி மிக நீண்டகால இலக்கிய வரலாற்றையும் செழிப்பையும் இலக்கணச் சிறப்பம்சங்களையுமுடையது. ஆனல் கல்விசார் அறிவியல்சார் மொழியாக இன்னும் வளரவில்லை என்றே கூறவேண்டும், இதற்கான காரணங்கள் முக்கியமாக இரண்டு! ஒன்று ஆரியமாயையினுல் சமூகத்திடையே வேரூன்றி நிற்கும் மத மூடக்கொள்கைகளும் பழக்க வழக்கங்களும்! இவைகள் மனிதன் இயற்கைத் தோற்றப்பாடுகளையும் மாற்றங்களையும் அவதானித்து பகுத்தாராய்ந்து இயற்கையின் மர்மங்களைப் பற்றிய விதிகளைக் கண்டு பிடிப்பதற்கு தடைக்கற்களாயிருந்தன. எல்லாம் அவன் செயல் என்று சும்மா இருந்தால் அன்றி அவன் செயல் சில விதிகளுக்கமைந்தது என்பதைக் கண்டுபிடிக்க முயலவில்லை, மற்றையது தொழில் நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக யுத்தரீதியாகவும் போக்குவரத்து ரீதியாகவும் வலுப்பெற்ற மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளின் காலனித்துவ சர்வாதிகாரத்துக்கு மீண்ட காலமாக அடிமைப்பட்டு இருந்தமையாகும். ஒரு இனம் தன் மொழியை வளர்க்க வேண்டுமாயின் அவ்வினத் துக்கென ஒரு நாடு வேண்டும். அல்லது பிரதேசம் வேண்டும்.

அறிவியல் ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் வளர்ச்சியடைந்த ஒரு நாட்டில் நாம் புலம் பெயர்ந்து வாழ்கின்றேம். இங்கே எமது மொழியில் கல்வியைப் பெறுவிட்டாலும் அறிவியல் தொழில் நுட்பவியல் சம்பந்தமான அறிவையும் திறன்களையும் பெறும் வாய்ப்பு எமக்குண்டு. அத்துடன் எமது மொழியை எமது மாணவர்களை கற்பதற்கான வாய்ப்பும் முதல் தரக்கல்வி நிலையிலும், இரண்டாந்தரக் கல்வி நிலையிலும் இப்பொழுது அளிக்கப்பட்டுள்ளது.. இச்சூழல் எமது மொழியையும் அறிவியல் ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும், இலகிய கலை கலாச்சார ரீதியாகவும் வளர்ப்பதற்கான ஊக்கத்தை எமக்களிக்கின்றது.

அரசு எமக்களித்துள்ள தாய் மொழியைக் கற்கும் வாய்ப்பை எமது மாணவர்கள் தவருது சிறந்த முறையில் பயன்படுத்தும் வகையில் இந் நாட்டில் வாழும் புலம் பெயர்ந்த எமது எழுத்தாளர்க்கும் பெரும் பங்குண்டு என்று நான் கருதுகின்றேன். எனவே இங்கே நடைபெறும் பாரம்பரிய. திறமைசித்தி தமிழ் பாட நெறி வகுப்புக்கள் சிறந்த முறையிலும் பயன் தருவகையிலும் அமைவதற்கு எழுத்தாளர்களும் தமிழ் அறிஞர்களும் தங்களாலான பணியை ஆற்றக் கடமைப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் அவர்கள் ஆற்றப்போகும் எழுத்தாளர் ஒன்றியத்தின் யாப்பில் இதையடிப்படையாகக் கொண்ட சரத்து நோக்கங்களில் ஒன்றுக இடம் பெறவேண்டுமென்பதை யாப்பிற்கான செயற்குழுவின் கவனத்திற்கு விடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஏன் தாயகத்தில் எழுதுவதில்லை?

## வெற்றிகொண்டான்

நான் ஏன் தாயகத்தில் எழுதுகிறேனென்று பல எழுத்தாளர்கள்! உ நான் ஏன் தாயகத்தை வாசிக்கிறேனென்று சில வாசகர்கள்! சென்ற சில வாரங்களாக தாயகத்தில் அசத்தியிருக்கிறார்கள். இவற்றை வாசித்தபோது தான் நான் ஏன் தாயகத்தில் எழுதுவதில்லை யென்று ஓர் எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

கனடாவில் வெளிவரும் பல பத்திரிகைகளையும் படிப்பவன் நான். பத்திரிகைகளில் வரும் சிறுகதைகள், கவிதைகள் தவிர அரசியல் கருத்துக்களை பொறுத்தளவில் ஒரு உறுதிப்பாடான கருத்தை வலியுறுத்தும் தைரியத்தை தாயகம் மட்டுமே கொண்டுள்ளதை காணமுடிகிறது.

தாயகத்தின் எழுத்தாளர்களை பொறுத்தளவில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதை அவர்களின் எழுத்தனுபவங்களினூடு கண்டு கொள்ள முடிகிறது. விளக்க வந்த விடயங்களை பக்குவமாகவும் நகைச்சுவை உணர்வோடும் எழுதும் முறையில் எல்லோருமே கை தேர்ந்தவர்கள். ஒரு காலத்தில் தாயகம் வாசிக்கவே ஒரு தராதரம் வேண்டுமென்று பலர் சொல்லிக் கேட்டபின்பு தாயகத்தில் எழுத எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று நினைத்தே நான் தாயகத்தில் எழுதுவதில்லை.

முக்கியமாக நல்ல கதைகள், கவிதைகள், அரசியல் கட்டுரைகள் போன்றவை அந்தந்த துறையில் ஞானமுள்ளவர்களால் எழுதப்படுவதால் பல நாடுகளிலும் ஏன் இலங்கையில் கூட தாயகம் பெயர் பெற்றுள்ளது. இப்படி பலராலும் விரும்பப்படும் தாயகம் மேலும் மேலும் வளர்ந்து பணி செய்ய தாயகத்திற்கு நான் செய்யும் மிக உயர்ந்த பணி தாயகத்தில் எழுதாமல் விடுவது தான் என்பதால் நான் தாயகத்தில் எழுதுவதில்லை.

இதுவரையில் யாரும் வாய் திறக்காதவாறு வன்மையானதும், உண்மையானதுமான கருத்துக்களை தொடராக எழுதிவரும் சின்னத்தம்பி வேலாயுதமும் அசை சிவதாசனின் ஆழமான கருத்துக்களும் ஆனந்தபிரசாத் அவர்களின் இசைபற்றிய கட்டுரைகளும் உலகத்தை அசை போட்டு வரும் உமாகாந்தன். கவிதைக்கு இலக்கணம் சொன்ன வ.ந.கிரிதரன் இவர்களின் மத்தியில் எப்படி பேனவை தூக்க முடியும்? முற்றும் அறிந்த முனிவர் முன்புமா? ஒரு பக்கம் கியூறியசும் ஒருபக்கம் ஜெயந்தீசனும் எங்கள் பிரச்சனைகளை சிரிக்கச் சிரிக்கச் சொல்லியே செருப்பால் அடித்து விடுவார்களே! எப்படி முடியும்?

இரண்டுவரிகளில் கவிஞர் கந்தவனத்தால் எழுதப்படும் வார்த்தைகளுக்கீடாக இருநூறு வரி எழுதினல் கூட சமப்படுத்த முடிவதில்லையே. தாயகத்தில் நான் எழுத நினைக்கும் கருத்துக்கள் அனேகமாக யார் வாயிலாவது தாயகத்தில் வருவது ஒரு வியப்புக்குரியது! உதாரணமாக சென்ற யூலை 23 ஐ நினைவுபடுத்தி பல பத்திரிகைகளிலும் தாயகத்திலும் கூட கட்டுரைகள் வெளிவந்தன. ஒரு பத்திரிகை 83 யூலை 23 தமிழர்களுக்கு மானிப்பாயிலும், பொறளையிலும் கொழும்பிலும் நடந்த மிருகத்தனமான தாக்குதல்கள், வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்ட கைதிகள் பற்றியும் விளாசு விளாசென்று விளாசியிருந்தது. இவ்வளவு அழிவுக்குமான அந்த ஒரு சம்பவம் பற்றி யாருமே எந்த இடத்திலும் வாய் திறக்கவேயில்லை. தமிழ் மக்களுக்கும் சிங்கள அரசாங்கத்திற்குமிடையேயான அரசியல் காரணங்களால் இவ்வகையான ஒரு அழிவு எதிர்பார்க்கப்பட்டதாக இருந்திருக்கலாம். அப்படியானுல் அழிவினல் அவஸ்தையுறும் முழு தமிழரும் இவ்வளவு அட்டூழியங்களுக்கும் இவர்கள் தானே காரணம் என்று சொல்லுமளவுக்கு எம்மவர்கள் நடந்து கொண்டனர்.

தலைவர் ஏதோ காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு நடத்தும் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் ஏமாளித் தமிழர்கள் ஏதோ ஒரு காரணம் சொல்லிவிடுவார்கள். இவர்களும் மானிப்பாயில் வரிசையாக நிற்கவைத்து சுட்டு வீழ்த்தியது ஈவு இரக்கமில்லாததென வர்ணிக்கும் முன் ஈவு இரக்கத்துடன் திருநெல்வேலியில் வைத்த கண்ணிவெடி பற்றி வாய் திறக்க மாட்டார்கள். எங்கள் போராட்டத்துக்காக நாங்கள் யாரையும் எப்படியும் கொன்று குவிக்கலாம் அதனல் ஏற்படும் எதிர் தாக்குதல்கள் எல்லாம் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள்! இருட்டில் ஒருதடவை சுவரில் மோதிக் கொண்டால் அது தெரியாத் தனமாயிருக்கலாம் இரண்டாம் தடவையும் மோதிக்கொண்டால் இது முட்டாள்தனம். சிறுபான்மை பெரும்பான்மை இனத்தின் கொலை விகிதாசாரம் இதுதான் என கோடிட்டு காட்டிய யூலைக் கலவரத்தின் பின்பும் அதே பாணியில் அதே வழியில் போனல் மக்களால் எப்படி அதை ஏற்றுக் கொள்ள முடியும்? இத்தனை பேர் இறந்தால் தான் ஈழம் காண முடியும் என்பது உங்கள் கொள்கையாகவோ அல்லது நியதியாகவோ இருக்கலாம். அதுக்கு அப்பாவிமக்கள் நாங்களா கிடைத்தோம்? ஒரு தூய்மையான போராட்டத்தில் சாவுக்கு பயந்துதான் நான் இப்படி எழுதுவதாக யாரும் நினைத்தால் அதில் தலைவர் உட்பட வெளிநாடுகளில் வாழும் லட்சோபலட்சம் தமிழரையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அன்றும் எத்தனையோ வாய்கள் முணுமுணுத்தன 13 இராணுவத்தினரை கொல்வதால் ஆயிரம் ஆயிரம் தமிழர்களை கொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமே தவிர உங்கள் இலக்கை அடைய முடியாது. ஆக இப்படியான ஒரு தொடக்கத்திலுல் தான் தமிழர் போராட்டமும் தமிழர் பிரச்சனைகளையும் உலகநாடுகளின் கவனத்திற்கு கொண்டு வர முடிந்ததென்றால் இன்று 10 வருடமாகியும் .........தந்த முன்னேற்றம் பிரேமதாசா கொஞ்சம் புலி பிடித்து வைத்துக் கொண்டும் பிரபாகரன் கொஞ்சம் பொலிசை பிடித்து வைத்துக்....

அவர் நான் தாற பொலிசுக்கு நீ முழுப் புலியும் தா அதுக்குச் சாப்பாடும் தரவேண்டும். ஆடுபுலி ஆட்டம்! இவர் பொலிசுக்கு புலி தா! அவர் புலிக்கு பொலிசு தா! இடையில் மக்கள் இதனுலெல்லாம் எமது இலக்கை அடையமுடியுமா? கூட்டணி 5 வருடமாக சாதிக்க தவறிவிட்டதாக காரணம் காட்டி ஆயுதம் எடுத்தவர்கள் 10 வருடத்தில் சாதித்ததெல்லாம் மின்சாரத்திலிருந்த மக்களை இலுப்பெண்ணைக்கு கொண்டு வந்ததுதான்.

திருநெல்வேலியில் நெருப்பு வைத்து வெலிக்கடையில் வெடிக்க வைத்த கெட்டித்தனம் பற்றி பேசாதீர்கள். இதை யாராவது எழுதமாட்டார்களா என பலதடவை நினைத்தேன். தாயகத்தில் எழுதுவதில்லை என்ற கொள்கை(?) யையும் மீறி எழுத நினைத்தபோது கோபியும் அசை சிவதாசனும் அருமையான விளக்கங்களை எழுதியிருந்தனர். உண்மை சாகாது

யூலை கலவரம் பற்றி எழுத இரண்டு முழுப் பக்கங்களை ஒதுக்கிய பத்திரிகையில் இந்த விடயம் பற்றி குறிப்பிடாததும் இதில் எங்கள் சாகசங்களையும் சிங்களவர்களின் கொடூரங்களையும் வர்ணிக்கும் இவர்களை நினைத்தால் சிரிப்பாகதானிருக்கிறது.

நானே பெருமைப்பட்டு எழுதாமல் விடுமளவுக்கு எனது மதிப்புக்குரிய தாயகம் பத்திரிகையில் புதிய எழுத்தாளர்கள், சஞ்சிகைகள், கலை நிகழ்ச்சிகள், மேடைநாடகங்கள் முதலிய விமரிசிக்கப்படும்போது ஒரு எல்லைக் கோட்டுக்குள் விடயத்தை நிறுத்தி ஊக்குவிப்பை கொடுக்கும்படியானதும் ஆக்கபூர்வமானதுமான கருத்துக்களை சொல்வதும், குறைகளிருப்பின் அவற்றை நோகாமல் சுட்டிக்காட்டி அதை நிவர்த்திக்க வேண்டிய வழிகளையும் கூறி முடிக்கும் அழகை காணமுடியும் இந்த விமர்சன வித்தியாசத்தை எப்படி வாசகர்களினுல் அவதானிக்க முடிகிறது? வித்தியாசமாயிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டு விமர்சிக்க வந்த விடயத்தை விட்டு தன்னையறியாமலேயே விலகி விடுவது, உணர்ச்சி வசப்படுவது போன்ற சில விமர்சகர்கள் தாயகத்தின் விமர்சனங்களின் தரத்தை எம் போன்ற வாசகர்களுக்கு இனம் காட்டித் தந்து கொண்டிருக்கின்றூர்கள். இந்தவகையில் அவ்விமர்சகர்கள் (தாயகத்தில் இடம் கிடைக்காமலோ என்னவோ) தாயகத்தில் எழுதாமல் விட்டு தங்களின் சிறந்த பணியை செய்வதை உணர்ந்த பின் எழுதவேண்டுமென்ற கொஞ்ச நஞ்ச ஆசையையும் விட்டுவிட்டேன்.

ஒரு சின்ன உதாரணத்திற்கு சஞ்சிகை வெளியீட்டுவிழா பற்றிய விமர்சனத்தில் ஆசிரியரின் பிள்ளைக்கு அப்பா சொல்லத் தெரியாது போன்ற சிறுபிள்ளைத்தனமானதும் சிறுமைத்தனமானதுமானவற்றை எழுதி தங்கள் திறமை இவ்வளவுதான் இதுக்குமேல் எழும்ப முடியாதென்பது போல காட்டிவிடுவார்கள். சஞ்சிகை நாடகம், கலைவிழா பத்திரிகை சிறுகதை என்று எதுவும் செய்ததில்லை ஆனுல் எதையும் விமர்சிக்க முடியும். இப்படி சகல கலா வல்லவர்களாக இருந்து கொண்டு ஒரு சத்துமில்லாத கோமாளித்தனமான எழுத்துக்களை வேறு பத்திரிகைகளில் எழுதுவதன் மூலம் தாயகத்தின் தரத்தை உயர்த்திக்காட்ட அவர்கள் செய்யும் பணியில் அநாவசியமாக நானும் தலையிட வேண்டும் என்பதற்காகவே நான் தாயகத்தில் எழுத விரும்புவதில்லை.

(சின்ன சின்ன ஆசை
தாயகம் ஏன் வாசிக்கின்றேன்
தாயகத்தில் ஏன் எழுதுகிறேன்
தாயகத்தில் ஏன் எழுதுவதில்லை வரைக்கும் வந்து விட்டது. ஆனுல் எனக்கு ஒரு வித்தியாசமான ஆசை. தாயகம் ஏன் வாசிப்பதில்லை என்றும் கேட்டு எழுதினுலென்ன? அவர்கள் சொல்லும் காரணங்கள் நல்லதாக இருந்தால் தாயகத்தை வாசிக்காமல் விட முயற்சிப்பவர்களுக்கும் உதவியாயிருக்குமே)


## சிவாஸ் ரேடிங் கோ
## மாபெரும் மலிவு விற்பனை

| | |
|---|---|
| சம்பா அரிசி 5 கிலோ | 4.99 |
| பஸ்மதி அரிசி (பரட் பிராண்ட்) 5 கிலோ | 7.99 |
| பஸ்மதி அரிசி 20 கி | 28.99 |
| மரக்கறி எண்ணெய் 3L | 2.99 |
| மாங்காய் கோடியல் | 1.59 |
| மிஸ்டர் குடாஸ் பார்பொயில்ட் அரிசி 10கிலோ | 4.99 |
| மிஸ்டர் குடாஸ் All purpose மாவு 10 கிலோ | 4.99 |
| கோழிக்கால் ருத் | .69 |
| (பத்து ரூபாவுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு) உடன் கோழி (ஒருவருக்கு ஐந்து மட்டும்) | 1.99 |
| ஆட்டுக்கால் ருத் | 1.99 |
| வறுத்த மிளகாய்த் தூள் 900 கி | 4.99 |
| எல்லா இலங்கை சவர்க்கார வகைகளும் | .48 சதம் |
| முட்டை (Tray of 30) (ஒருவருக்கு இரண்டு மட்டும்) | .99 சதம் |
| Fresh frozen King Fish | 2.99Lb |

மேலதிக விபரங்களுக்கு பின் அட்டையைப்பார்க்க..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

## வசந்த திசாநாயக, பற்றிக் பெர்ணன்டோ சரத் த சில்வா, ரஞ்சித் குமார

## தமிழாக்கம்; செ. லோகநாதன்

### இளைஞர் மாணவர்களை நோக்கி பிரதான கவனம் செலுத்தப்படுகிறது;

இளைஞர் மாணவர் சமுதாயத்தில் காணப்படும் உத்வேகத்தையும் ஆற்றல் வளத்தையும் மிக நன்றாக கிரகித்துக் கொண்டவர் விஜேவீர எனக் கூறமுடியும். இளைஞர் மாணவர் மத்தியிலும் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதும், தீவிரமாக செயல்படும் தன்மையும் கூடுதலான தொடர்புகளும் கொண்டதுமான சக்தி பல்கலைக்கழக மாணவ சக்தியே என்பதை விளங்கிக் கொண்டதனால் ஆரம்ப காலகட்டத்திலிருந்தே பல்கலைக்கழக மாணவர்களை அணிதிரட்டுவதில் ஜே.வி.பி. தலைமை பிரதான கவனம் செலுத்தியது.

மாணவர்கள் எதற்கும் புதியவர்கள். வாழ்க்கையில் பலதுறைகளிலும் அடிபட்டு, பல இடங்களுக்குமுகங் கொடுத்து கசப்பான அனுபவங்களைப் பெற்ற முதிய சந்ததியினரை விட மாணவர் மனதுள் ஏதாவது ஒன்றை புகுத்துவது இலகுவானது. ஏதாவது ஒன்றைச் சரி என எண்ணி அதனைப்பற்றிக் கொண்டால் எவ்வித பின்யோசனையுமின்றி அதற்காகத் தம்மை அர்ப்பணிக்கத் தயாரானவர்களே மாணவர்கள். புதியதும், அனுபவக் குறைவும், பயிலு நிலைச் சக்தியுமான காரணத்தால் ஒரு பிரச்சனையின் சகல பக்கங்களையும் பார்க்கக் கூடிய தன்மை இவர்களிடம் குறைவாகவே உண்டு. சரியான வழிகாட்டலின்றி இவர்களை இட்டுச் சென்றால் கட்டுப்படுத்த முடியாத தீயைப் போல் பெரும் அழிவை உண்டுபண்டும் சுபாவத்துடன் செயல்படுவர். மாணவர்களின் இக் குணம்சத்தை விளங்கிக் கொண்ட காரணத்தினாலே விஜேவீர மாணவர் சமுதாயம் குறித்து பிரதானமாக கவனம் செலுத்தினர்.

கலைத்துறை மாணவர்களுக்கு மட்டுமன்றி விஞ்ஞானம், பொறியியல் துறை மாணவர்கள் மத்தியிலும் பல்கலைக்கழக படிப்பை முடித்த பின்னரும் கூட தொழில் வாய்ப்புகள் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையே பரவியிருந்தது. தனியார் துறை மருத்துவக் கல்லூரி மூலமாக மருத்துவ மாணவர்களும் தமது எதிர்காலம் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமைக்கே முகங் கொடுத்தனர். இந்நிலைமைகளின் கீழ் புதியதும், அனுபவக் குறைவும், ஒரு பிரச்சனையின் சகல பக்கங்களையும் பார்க்கக் கூடிய ஆற்றல் குறைவும், இயற்கையாகவே காணப்படும் அவசர மனோபாவமும் ஆகிய காரணங்களினால் பல்கலைக் கழக மாணவர் மத்தியிலே மிகவும் சக்தி வாய்ந்த அடித்தளத்தை கட்டி எழுப்ப ஜே.வி.பி.யினால் முடிந்தது. பிற்காலத்தில் மாணவர் மத்தியில் இனப்பிரச்சனை மூலமாக ஏற்படுத்தப்பட்ட மனோபாவமும் ஜே.வி.பி.க்கு மாணவர் மத்தியிலே தம்மை உறுதிப்படுத்திக் கொள்ள மிகவும் உதவியாக அமைந்தது.

பிற்காலத்தில் ஜே.வி.பி.யின் மேல் மட்ட தலைவர்களான தேர்ந்தெடுக்கப்பட்ட சாந்த பண்டார, டி.எம். ஆனந்த, H.B. ஹேரத் சமன் பியசிறி பெர்ணன்டோ, உபாலி ஜயவீர, ரஞ்சிதம் குணரத்ன, லலித் விஜேரத்ன ஆகியோரைக் காண்பதன் மூலம் ஜே.வி.பி. பல்கலைக் கழக மாணவர் மீது எவ்வளவு தூரம் தங்கியிருந்தது, ஜே. வி.பி.யின் வளர்ச்சிக்கு பல்கலைக் கழகங்களிலிருந்து கிடைத்த மிகப்பெரும் உந்தல் எத்தகையது என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

மாணவர் இயக்கத்துள் மிகவும் கபடத்தனமாகவே ஜே.வி.பி செயல்பட்டது. மாணவர்களின் அன்றாட பிரச்சனைகள் தொடர்பாக போராடுவதற்கு அவ்வளவு தூரம் அக்கறை காட்டவில்லை. அக்கறை காட்டாதது மட்டுமன்றி அவர்கள் பலம் பொருந்தியவர்களாக வளரும் வரை வெடித்துக் கிளம்பிய போராட்டங்கள் வளர்ச்சி பெறுவதற்கு இடமளிக்கவும் இல்லை. 70 காலகட்டத்திலும் 80 ஆரம்ப காலகட்டத்திலும் வெடித்துக் கிளம்பிய மாணவர் போராட்டங்கள் செயலிழக்கக் கூடியவாறே ஜே.வி. பியின் நடவடிக்கைகள் அமைந்தன. தாய்லாந்தின் தமசாட் பல்கலைக் கழக மாணவர்களை படுகொலை செய்த சம்பவத்தை உதாரணமாகக் காட்டி மாணவர் போராட எத்தனித்தால் பெரும் அழிவு ஏற்படும் என்னும் கருத்தை மாணவர் மத்தியிலே திணிக்க பெரும் முயற்சி எடுத்தனர். அதுமன்றி தாம் தலைமை வழங்காமல் இடம் பெறும் போராட்டங்களை சீர்குலைக்க மறைமுகமாக நடவடிக்கை எடுத்தனர். 1979 ல் நடைபெற்ற கட்டுபெத்தை மாணவர் போராட்டத்தின் போது ஜே.வி.பி. செயல்பட்ட விதம் ஜே.வி. பி.யினரின் மறைமுக சீர் குலைவு வேலைகளுக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். இக்கால கட்டத்தில் ஜே.வி.பி. கவனம் செலுத்தியது தமது அரசியல் வகுப்புகள் மூலமாக மாணவர்களை இரகசியமாக வென்றெடுக்கவே தவிர போராடுவதற்கு அல்ல. போராட்டத்தில் ஈடுபடுவது தமக்கு தீங்கு பயக்கும் என்பதுதான் ஜே.வி.பி. யின் அக்காலத்துக்கு கருத்தாகும். மாணவர் இயக்கத்துள் தமது இருப்பை உறுதிப்படுத்தக் கூடிய அளவு இயங்குனர்களை உருவாக்கிய பின்னர் இந் நிலைமையில் ஓரளவு மாற்றத்தைக் காண முடிந்தது. உண்மையிலேயே தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவும் தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவுமே ஜே.வி.பிக்கு மாணவர் இயக்கம் அவசியப்பட்டதே தவிர வேறு எதற்காகவும் அல்ல. இந் நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ளும் மட்டத்திற்கே மாணவர் போராட்டங்களுடன் தொடர் பாயிருந்தனர் – மாணவர் போராட்டங்களை வழி நடாத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் விவசாயி இயக்கத்துள் ஜே.வி.பி யின் செயற்பாடுகள்;

தமது சக்தியை கட்டி எழுப்புவதில் மாணவர் இயக்கம் குறித்து பிரதானமாக கவனம் செலுத்திய ஜே.வி.பி, தொழிலாளர் வர்க்க இயக்கம் குறித்து 1971 க்கு முந்திய கால கட்டத்தைவிட கூடுதலாக கவனம் செலுத்தினர். மாணவர் இயக்கத்துள் எவ்வாறு செயல்பட்டார்களோ அவ்வாறே இடதுசாரி தொழிலாளர் மத்தியிலும் தமது இருப்பை எவ்வாறுயினும் உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றார்களே தவிர தொழிலாள வர்க்க போராட்டத்திற்கு தவறற்ற தலைமை வழங்கும் நோக்கம் ஜே.வி.பி.க்கு இருக்கவில்லை. "ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம், தொழிலாளி வர்க்கத்திற்கு ஒரு தொழிற்சங்க மையம்" என்னும் கோஷத்தின் கீழ் தொழிலாளி வர்க்க இயக்கத்துள் தமது பலத்தை நிலைப்படுத்திக் கொள்வதே நோக்கமாக விருந்தது. தனது இந்நோக்கத்தை அடைவதற்காக ஜே.வி.பியினர் ஆரம்பத்தில் இடதுசாரி தொழிற்சங்கங்களைத் தாறுமாறாகத் தாக்கினர். இத்தொழிற் சங்கங்களை அவ்வாறு தாக்கிக் கொண்டே அதற்குள் தமது அங்கத்தவர்களை நுழைவித்து தலைமையை கைப்பற்ற முயன்றனர். சில சங்கங்களின் தலைமைகளைக் கைப்பற்றினர். ஆனால் மாணவர் இயக்கத்துள் ஜே.வி.பி அடைந்த வெற்றியை தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு அடைய முடியவில்லை. ஜே.வி.பி. ஓரளவு வெற்றி பெற்றிருந்தாலும் அதுவும் வாலிப தொழிலாளர் மத்தியிலே ஓரளவு தூரத்திற்கு மட்டுமேயாகும். போராடுவதற்கு தயாராக இல்லை எனக் கூறி இடதுசாரி தொழிற் சங்கங்களைத் தாக்குவதும் அத் தொழிற்சங்கங்கள் கஷ்டப்பட்டு போராட்டத்திற்கான தீர்மானத் தை எடுக்கும் போது தொழிலாளி வர்க்கம் தயார் நிலையில் இல்லாதபோது போராட்டத்திற்கு இழுத்து தொழிலாளர்களை பலிகொடுக்க நடவடிக்கை எடுக்கிறார்கள் என அத் தொழிற்சங்கங்கள் மீது குற்றம் சுமத்துவதுமே தொழிலாளர் வர்க்க இயக்கத்துள் ஜே.வி.பியின் உபாயமாகவிருந்தது. ஜே.வி.பி.யினர் தமது இவ் உபாயத்திற்கு அமைய தொழிற்சங்கங்கள் போராடத போதும் அவற்றைத் தாக்கினர். அவை போராட்டத்திற்காக தீர்மானம் எடுத்தவுடன் போராட்டத்திற்கான நிலமை இன்னும் முதிர்ச்சி அடையவில்லை எனக் கூறி போராட்டத்தை சீர்குலைக்க மறைமுகமாக செயல்பட்டனர். போராட்டம் தோல்வி அடைந்த பின்னர் அவ்வாறு நிகழும் என தாம் ஏற்கனவே கூறியதாகவும், சந்தர்ப்பவாத தொழிற்சங்கங்கள் தொழிலாள வர்க்க இயக்கத்தை முதலாளித்துவ அடக்குமுறைக்கு பலிகொடுத்ததாகக் கூறிக் கொண்டு அத்தொழிற்சங்கங்களுக்கு எதிரான கருத்தியலை உருவாக்க முயன்றனர். ஜே.வி.பி. யினர் தமது உபாயங்களைச் செயல்படுத்தும்போது, அரசாங்கத் தினதும் ஜே.வி.பியினதும் நோக்கங்கள் வெவ்வேறாக இருந்த போதிலும் தொழிலாளர் போராட்டத் திற்கு எதிராக இருவரும் ஒரே இடத்திலேயே இருந்தனர். தொழிற்சங்கங்களின் ஐக்கிய நடவடிக்கைக் குழு உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு, சம்பள உயர்வு தொழிற்சங்கங்கள் மீதான அடக்கு முறை ஆகிய காரணங்களுக்காக 1980ம் ஆண்டு ஜூலை மாதத்தில் 'எதிர்ப்பு தினம்' ஒன்றை நடாத்த தீர்மானித்தது தொழிற்சங்கங்களின் இவ் நடவடிக்கையை அடக்குமுறையை வரவழைக்கும் மரணப்பொறி எனக்கூறிய ஜே.வி.பியினர் :எதிர்ப்பு தினத்திற்கு' எதிராகவே செயல்பட்டனர், அரசாங்கமும் ஜே.வி.பியினரும் எதிர்ப்பு தினத்தைக் கண்டித்து போஸ்டர் ஒட்டினர், இவ் எதிர்ப்பு தினத்தன்று ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சகிதம் வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களைத் தாக்கியதோடு சோமபால என்னும் தொழிலாள தோழரைப் படுகொலை செய்தனர். இப்படுகொலைக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் கோபம் பொங்கி எழுந்தது. தோழர் சோமபாலவின் மரண ஊர்வலம் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் கலந்து கொண்ட எதிர்ப்பார்ப்பாட்ட ஊர்வலமாக மாறியது. அரசாங்கத்திற்கு எதிராக மட்டுமன்றி ஜே.வி.பிக்கு எதிராகவும் தொழிலாளர் கோஷமிட்டனர். சோமபாலவின் மரணச் சடங்கின்போது மலர்வளையம் சாத்த வந்த அக்காலகட்டத்தின் ஜே.வி.பி தலைவர்களில் இருவரான லயனல் போபகேயும் எச்.என். பெர்ணாண்டோவும் தொழிலாளரின் எதிர்ப்புக் கூச்சல் காரணமாக திரும்பிச் சென்றனர்.

ஜே.வி.பியினரும் அரசாங்கமும் ஒரே இடத்தில் இருந்ததை காணச் சகித்துக் கொள்ள முடியாத சந்தர்ப்பம் 1980 ஜூலை வேலை நிறுத்தத்துடன் ஆரம்பமாகியது. இவ் வேலை நிறுத்தம் போராட்டத்தில் குறைபாடுகள் நிலவியது உண்மையே! ஆனால் சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். பாலதம்பு, முறுத்தெட்டுவே ஆனந்த அடிகள் ஆகியோரின் காட்டிக்கொடுப்புகள் இடம்பெற்றிருக்காவிட்டால் நிலவிய குறைபாடுகள் மத்தியிலும் அவ் வேலை நிறுத்தம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். பாலா தம்பு, முறுத்தெட்டுவவே அணந்த ஆகிய இருவரும் வேலை நிறுத்தத்திலிருந்து ஒதுங்கியது மட்டுமேயாகும். ஆனால் ஜே.வி.பி. யினரோ வேலைநிறுத்தத்திற்கு எதிராக பிரசார யுத்தத்தில் ஈடுபட்டனர். வேலைநிறுத்தத்திற்கு எதிராக 'யுத்தத்தில்' ஈடுபட்ட மற்ற சக்தி அரசாங்கமாகும். வேலை நிறுத்தத்திற்கு அரசாங்கம் தடை விதித்தது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் கூட்டம் நடாத்துவதற்குக் கூட இடமளிக்கப் படவில்லை. தொழிற் சங்க அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. வேலை நிறுத்தத்திற்கு எதிராக மிகவும் கேவலமான முறையில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந் நிலமைகளின் கீழ் எவ்வளவு குறைபாடுகள் நிலவினாலும் ஜே.வி.பி. உண்மையான மக்கள் சக்தியாக விருந்தால் அது வேலை நிறுத்தத்தை பாதுகாத்து இருக்கவேண்டும், அரசின் அடக்குமுறைக்கு எதிராக போராடியிருக்கவேண்டும். ஆனால் வேலை நிறுத்தத்தை தாக்கியதே ஜே.வி.பி யின் செயற்பாடாக இருந்தது. வேலை நிறுத்தப் போராட்டத்தை தடைசெய்த, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் பொதுக் கூட்டம் நடாத்த இடமளிக்காத அரசாங்கம், வேலை நிறுத்தத்திற்கு எதிராக கூட்டம் நடாத்த ஜே.வி.பி.க்கு அனுமதி வழங்கியது. ஜே.வி.பியினரின் வேலை நிறுத்த எதிர்ப்புக் கூட்டம் கம்பெல் மைதானத்தில் நடைபெற்றது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறு(சு)வை

## பறக்கும் தட்டு

நீண்ட காலத்தின் பின்னர் 'சத்தப்' பத்திரிகை பார்த்தேன். இன்னமும் 'திரு ஆலவாயன்' புராணம் முடியவில்லை. நியாயங்களுக்காக 'கடிப்பது' வேறு.. சிலரைத் திருப்திப் படுத்துவதற்காக கடிப்பது வேறு. என்னவோ, இருந்தாலும் நாலு விடயங்களை அறிவதில் Curious was just curious!

★ ★ ★

இன்னொரு வாரப் பத்திரிகை பார்த்தேன். தமிழீழத்தின் மேலே பறக்கும் தட்டு ஒன்று காட்சியளித்து மறைந்ததாம். பூமியில் யாழ்ப்பாணத்துக்கு நோக்கி ஆராய்ச்சி செய்கிறதாம். ஒருவேளை தலைவரைக் கவர்ந்து சென்று தங்களுக்கு தலைவணுக்கும் யோசனையோ என்னவோ?

றொறன்ரோவில் கடந்த வாரங்களில் இரவுகளில் விண்கற்கள் பூமியில் நுழையும் போது காண முடியும் என்று இரவுகளில் ஆராய்ச்சி செய்தார்கள். அத்தோடு பறக்கும் தட்டு ஒன்று றொறன்ரோவின் வடபகுதியில் காணப்பட்டது என்றும் செய்திகள் வந்தது.

★ ★ ★

அந்தப் பத்திரிகையில் தற்போது சர்வதேசக் கட்டுரைகளை ஒரு 'மாயாவி' எழுதுகிறார். இந்த மாயமான ஆவி யாராயிருக்கக் கூடும் என்று கியூறியஸ் மூளையை விட்டுக் கிண்ட, அது முன்பு தாயகத்தில் எழுதிய ஒருவர் தான் என்று புலப்பட்டது. சொந்தப் பெயரில் எழுதப் போக, கியூறியஸ் கிண்டி விடக் கூடும் என்றோ என்னவோ புனைபெயரில்... வசந்த முல்லை போலே வந்து அசைந்து ஆடும் வெண்புறுவே, உன் மாயமெல்லாம் நான் அறிவேன்..

புனை பெயரில் எழுதுவது பற்றி பொருமிக் கொள்ளும் விமர்சகர் என்ன செய்வாரோ? மீண்டும் ஆசிரிய தலையங்கங்கள் பற்றி கட்டுரை எழுது வாரோ என்னவோ? 'எதற்கும் பொறுத்திருந்து தான் பார்ப்போமே'

★ ★ ★

ஈழத்துப் பறக்கும் தட்டுக் கட்டுரையில் விண்கலங்களும் செய்மதிகளும் மீண்டும் பூமியில் நுழையும் போது பூமியை விட்டுப் புறப்பட்ட வேகத்தில் இறங்க முடியாது என்றும் அப்படி இறங்கினால் வளிமண்டலத்தின் மீதான உராய்வினால் எரிந்து சாம்பலாகி விடும் என்றும் எனவே இறங்கும் போது வேகத்தைக் குறைக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

★ ★ ★

கியூறியஸ் உயர்தரத்தில் யாழ்ப்பாணத்தில் கண்டிப்புக்கு பெயர் போன ஒரு இரசாயனவியல் ஆசிரியரிடம் கற்றவன். அந்தக் காலத்தில் அவரிடமே கேள்வி கேட்டு ஜில்மால் விட்டவன். அதாகப்பட்ட கியூறியஸ் எழுபதுகளின் மத்தியபகுதியில் இரசாயன வியலில் சிறந்த மாணவன் என்று பரிசு பெற்றதால் பாடசாலையில் 'மண்ணிலிருந்து விண்ணிற்கு' என்ற டாக்டர் இந்திரகுமாரின் புத்தகம் பரிசாகக் கிடைத்தது. (அதெல்லாம் அந்தக் காலம். இப்போது கியூறியஸின் இரசாயன வியல் ஆராய்ச்சி எல்லாம் றெஸ்ரோறன்டில் நிலம் கழுவும் போது எந்த இரசாயனப் பொருட்களைக் கலக்கலாம் என்பது தான்)

★ ★ ★

இந்த டாக்டர் இலங்கையின் நல்லதொரு கலைப் படைப்பான வாடைக் காற்று படத்தில் சம்மாட்டியாக நடித்தவர். இந்த வாடைக்காற்றுப் புத்தகம் நெடுந்தீவில் எரிக்கப் பட்டது. காரணம் அந்த ஊர்ப் பெண் ஒருத்தியை பேசாலையில் இருந்து வந்த சம்மாட்டியார் காதல் திருமணம் செய்வதாக கதை போகிறது. பிறகென்ன மானநட்டம் தான்.

★ ★ ★

விண்ணிலிருந்து மண்ணிற்கு என்ற புத்தகத்தில் இந்த விண்வெளி ஆய்வு பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி விண்கலங்கள் மீண்டும் இறங்கும் போது ஒரு குறிப்பிட்ட கோணத்தில் தான் பூமிக்குள் பிரவேசிக்க வேண்டும், கோணம் குறைவாக இருந்தால் உராய்வினால் எரிந்து விடும், கூடினால் வளிமண்டலத்தில் பட்டுத் தெறித்து விண்வெளியில் தொலைந்து விடும். (கடலில் கல்லை மிகவும் பதிவாக எறியும் போது, நீரில் கல் தெறிக்குமே!) அதில் வேகம் பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை.

அத்தோடு ஒரே இடத்தில் இருந்து கொண்டு செங்குத்தாக தோன்றிய பொருளை நூறு மைல் தொலைவில் நின்றது என்று கட்டுரையாளர் கருதுவது எதன் அடிப்படையில் என்று புரியவில்லை.

★ ★ ★

முன்பு இரவுகளில் முற்றத்தில் தூங்கும் போது விண்கற்கள் விழுவதைக் காணலாம். அப்போது விழுகின்ற பக்கத்தில் யாராவது இறப்பார்கள் என்று அப்பா சொல்வார். அதன் உண்மை பொய் எனக்குத் தெரியாது.

★ ★ ★

பறக்கும் தட்டுக்களை Flying Saucers என்றும் UFO என்றும் ஆங்கிலத்தில் சொல்வார்கள். Unidentified Flying Objects.. அடையாளம் காணப்படாத பறக்கும்

அறுஞர் கியூறியஸ் ஜி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள்.

பறக்கும் தட்டுகள், வேற்றுலக மனிதர்கள் என்பது பற்றி நிறையவே சொல்லலாம். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை கட்டுக்கதைகள். இது எந்த ரகமோ தெரியாது. சைபீரியாவில் ஒரு தடவை ஒரு பெரிய பொருள் ஒன்று பூமியுடன் மோதியது. இந்தச் சத்தம் இந்தோனேஷியா வரை கேட்டதாம். இந்த பொருள் விழுந்த இடத்தில் எட்டு அங்குலம் ஆழத்திற்கு மண் கருகிப் போயிருந்ததாம். இதில் மோதியது பறக்கும் தட்டாக இருக்க வேண்டும், அது அங்கு வந்ததற்கு காரணம், உலகிலேயே மிகப்பெரிய நன்னீர் ஏரி அங்கு இருப்பது தான் என்றெல்லாம் ரீடர்ஸ் டைஜஸ்டில் வாசித்திருக்கிறேன்.

★ ★ ★

அமெரிக்காவில் நியு மெக்சிக்கோ பாலைவனத்தில் 1956 இல் பறக்கும் தட்டு ஒன்று மோதிக் கொண்டதாகவும் அதில் வந்த மனிதர்கள் இறந்ததால் அவர்களின் உடல்கள் இப்போதும் அமெரிக்க விமானத் தளம் ஒன்றில் பத்திரமாக வைக்கப் பட்டிருப்பதாகவும் செய்திகள் உண்டு.

★ ★ ★

*Steven Spielberg* எடுத்த *Close Encounters of the third kind, E.T* போன்ற படங்கள் இந்த வேற்றுலக மனிதர்கள் பற்றியன. இதில் முதலாவது படத்தில் இந்த வேற்றுலக சஞ்சாரங்களுக்கும் இந்திய மந்திரங்களுக்கும் தொடர்பு இருக்கிற மாதிரிக் காட்டியிருந்தார்கள்.

★ ★ ★

முன்பு அமெரிக்க வானொலியில் எச். ஜீ.வெல்ஸ் என்று நினைக் கிறேன்.. அவர் செவ்வாய்க் கிரகத்திலிருந்து மனிதர்கள் இறங்கி உலகத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று விட்டார். சனங்கள் பீதியில் நடுங்கிப் போயின.

★ ★ ★

பேர்முடா முக்கோணம் பற்றி அறிந்திருப்பீர்கள். அப்பிரதேசத்தில் கப்பல்கள், விமானங்கள் காணுமல் போவதாக.. ஒரு தடவை விமானம் ஒன்று காணுமல் போய் விட்டது. அந்த விமானத்தை தேடி ஐந்து இராணுவ விமானங்கள் சென்றிருந்தன. அவற்றையும் காணவில்லை. அந்த ஐந்து விமானங்களிலும் மூவர்படி பதினைந்து பேர் பயணம் சென்றிருக்க வேண்டும். ஆனல் ஒருவர் போக முடியாமல் தங்கி விட்டார். ஆனல் விமானம் புறப்பட்ட போது விமானங்களில் மொத்தம் பதினைந்து பேர் இருந்திருக்கிறார்கள். அந்த பதினைந்தாம் ஆள் யார் என்பது தெரியாது. இந்த மர்மம் நீடித்த போது, நீண்ட காலத்தின் பின்னர் தனியார் வானொலி தொடர்பாளர் ஒருவர் தான் இந்த விமானங்கள் காணுமல் போன காலத்தில் தனது வானொலியில் செய்தி ஒன்றை ஒட்டுக் கேட்டதாகவும் அதில் 'என் பின்னே வர வேண்டாம், அவர்களைப் பார்த்தால் இந்த உலகத்தைச் சேர்ந்தவர்கள் மாதிரி தெரியவில்லை' என்று சொல்லப் பட்டதாகவும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கூறியிருந்தார்.

இதன் பின்னர் காணுமல் போனவர்களின் உறவினர்களின் வற்புறுத்தல் காரணமாக பழைய இராணுவ அறிக்கைகள் கிளறப்பட்ட போது, அரசாங்கம் கூறியது. 'என் பின்னே வர வேண்டாம்' என்று அந்த விமானங்களின் தலைவர் கூறியதாக. மற்ற விடயங்களை 'இரகசியம்' என்று மூடி மறைத்து விட்டது.

நீண்ட காலத்தின் பின் சென்ற வருடம் புளோரிடாவுக்கு அருகில் ஐந்து விமானங்கள் கடலில் மூழ்கியிருந்ததைக் கண்டு பிடித்தார்கள். இவை தான் பேர்முடா முக்கோண விமானங்கள், மர்மம் துலங்கியது என்று முழங்கிய பின்னர், விமானங்களைச் சோதனை போட்டதில் அவை வேறு விமானங்கள்.. மர்மம் இன்னும் துலங்கவில்லை. இப்படியாக பறக்கும் தட்டு விவகாரம் பற்றி பல கதைகள்.. தனியாக இருக்கும் போது கியூறியஸிடம் பேசிப் பாருங்களேன்.

★ ★ ★

சுதந்திரம் அதிகமாக வந்தால் சில நேரங்களில் இவ்வாறுன செய்திகள் அதிகமாக வரும். 'அங்காடிப் பத்திரிகைகளில்' நீங்கள் அடிக்கடி இந்த வேற்றுலக மனிதர்கள் பற்றிய விடயங்களை படிக்கலாம். எல்லாமே புழுகுகள். இவற்றை வீரகேசரியில் அபிலாஷினியின் மறுபிரசுரத்திலும் படிக்கலாம்.

ரஷ்யாவில் அடக்குமுறை ஒழிந்து சுதந்திரம் வந்த போது. கோர்க்கியில் பறக்கும் தட்டு வந்து இறங்கியதாக பத்திரிகை செய்தி வந்தது. அத்தோடு வந்த வேற்றுலகத்தினர் இந்தப் பத்திரிகையின் நிருபரின் வீட்டுக்கு போன் பண்ணி தங்களை அங்குள்ள பூங்காவில் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும் செய்தி கூறியது.

இவ்வாறுன பம்மாத்துக்கள் இப்போது சீனுவிலும் நடக்கிறது. தொகையான பத்திரிகைகள் தோன்றி, கட்டுப்பாடற்ற நிலையில் எதையாவது எழுதி விற்று விடலாம் என்ற சிந்தனையில் உள்ளன. இங்குள்ளவற்றைப் போல, எட்டாண்டில் தமிழீழம், யுத்த முனையிலிருந்து அஞ்சயன் மாதிரி.. இங்க வா! அஞ்சயன் தமிழன்! யுத்தம் நடக்கிறது, முனையில் நிற்கும் போது இராணுவம் ஷெல் அடிக்கும் போது நிருபரை விட்டு விட்டா அடிக்கிறது?

★ ★ ★

கொழும்பிலும் இவ்வாறுன பத்திரிகைகள் அதிகமாகி விட்டன. ஒரு பத்திரிகை தனது செய்தியில் 'மாத்தயா கொழும்பில் நிற்கிறார், தனது காதலியைக் காண வந்தார்' என்றது. அட முட்டாள்! மாத்தயா வந்து சேரும் வரை இராணுவம் என்ன வெள்ளியா பார்த்துக் கொண்டு நின்றது? ஒரு வேளை பறக்கும் தட்டை பார்த்துக் கொண்டிருந்திருக்கக் கூடும்.

இன்னொரு தடவை சண்டே ஒப்சேர்வர் பிரபாகரனுககு எட்டு மனைவிமார் என்றும் அதில் ஒரு பெண் சிங்களப் பெண் என்றும் சொல்லியிருந்தது.

இதுதான் சுதந்திரம் அதிகமானுலும் பிரச்சனை.. இல்லாவிட்டாலும் பிரச்சனை.

★ ★ ★

சுதந்திரம் கூடியதால் வந்த இன்னொரு விளைவு பற்றிப் பார்த்த போது சிரிப்பு வந்தது. எதியோப்பியாவில் கம்யூனிஸ்ட் ஆட்சிக் காலத்தில் பத்திரிகை நடத்த முடியாது. ஆட்சி கலைந்து சுதந்திரம் வந்தது. பத்திரிகைகள் மலிந்து விட்டன. முன்னெப்போதும் இல்லாதமாதிரி செக்ஸ் பத்திரிகைகளும் வந்து விட்டன. தங்கள் கலாசார சீரழிவு பற்றி கவலைப்பட்ட நண்பர் ஒருவரிடம் இவ்வாறுன சஞ்சிகை ஒன்றைப் பார்த்தேன். தங்கள் நாட்டுப் பிளேபோய் சஞ்சிகை என்றுர். அட்டையில் அழகுப் பெண்கள். மொடல்களாம். ஆபாசம் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சியாய் இருந்தார்கள். உள்ளே பார்த்தால் அவர்களின் அம்ஹாரிக் மொழிச் சஞ்சிகையில் ஆங்கிலத்தில் எழுதிய தலையங்கம் இருந்தது. 'படுக்கையில் உங்கள் மனைவியை திருப்திப்படுத்துவது எப்படி'. போச்சுடா என்று சொல்லி திருப்பிக் கொண்டு போனால், உள்ளே காமசூத்திர போஸ்கள். அங்கே தான் பிரச்சனையே! இதற்கு மொடல்களாக ஆட்களைப் பயன்படுத்தாமல் மரத்தினால் செய்த சிறிய பொம்மைகளை பயன்படுத்தியிருந்தார்கள். ஏதோ அவர்களாலானது.

★ ★ ★

இந்த ஈழத்துப் பறக்கும் தட்டு வெறும் விண்கல்லாகக் கூட இருக்கலாம். அல்லது செய்மதியின் பரிசோதனையாகவும் இருக்கலாம். ஆனால் வானத்தில் காண்கின்ற வெளிச்சங்களை பறக்கும் தட்டு என்று சொல்லப் போனால்...

★ ★ ★

சங்கம் உலகத்தமிழரில் வெளியிட்ட விளம்பரம் பார்த்தேன். இப்போது சங்கம் கம்பியூட்டர் விற்பனையிலும் இறங்கியிருக்கிறது. நல்ல விடயம். ஆனால் விளம்பரத்தில் ஏதோ படம் தயாரித்தது மாதிரி.. சங்கம் பெருமையுடன் தயாரித்து வழங்கும் என்ற மாதிரி இருக்கிறது. கம்பியூட்டர் உதிரிப்பாகங்களை பொருத்துவதில் என்ன பெருமை வேண்டிக் கிடக்கிறதோ?

Jobs Ontario திட்டத்தில் சங்கம் அங்கம் வகிப்பது தெரிந்ததே. இந்த திட்டத்தில் அங்கம் வகித்த நான்கு சங்கங்கள் பணத்தைக் கையாடியதால் அவற்றின் தொடர்பை நிறுத்தி விட்டார்களாம். அதில் ஒரு சங்கத்தில் ஆறரை லட்சம் டொலர்களைக் காணவில்லையாம். சங்கம் பற்றி எப்போது பத்திரிகையில் வருகிறதோ?

★ ★ ★

உலகத்தமிழரில் ஒரு செய்தி.. யாழ்ப்பாணத்தில் பசுமாடுகளை வெட்டுவது தடை செய்யப்பட வேண்டும் என்று மிருக வைத்தியர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம். ஆனால் குழந்தைகளைப் பலி கொடுக்க வேண்டாம் என்று கேட்கும் கலாநிதிகள் ஊரில் இருக்க முடியாத நிலைமை. வாழ்க.. மிருகாபிமானம்... இனம் இனத்தை சேரும்..

★ ★ ★

பாரிஸ் பத்திரிகை ஒன்றில் இந்த நூற்றாண்டின் அதிசிறந்த ஜோக் பார்த்தேன். புலிகளுக்கு நகைச்சுவை உணர்வும் இருக்கிறது என்று புரிகிறது. பாரிஸில் நடைபெற்ற ஜூலை கலவர நினைவு தினத்தில் திலகர் பேசியிருக்கிறார். 'குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, குட்டிசிறி டெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் அவர்கள் 'தமிழீழம்' என்ற கொள்கையில் அசைக்க முடியாத இலட்சிய வாதிகளாகவே இருந்தார்கள். அதனால் தான் புலிகள் இயக்கம் அவர்களை மாவீரர்களாக கௌரவிக்கிறது' என்று. குட்டிமணி, தங்கத்துரையைக் காட்டிக் கொடுத்தது யார் என்ற விவாதம் ஒரு புறம்.. இந்த ஜோக் ஒரு புறம்.. மற்ற இயக்கங்களை அழித்தது ஒரு புறம்.. சமஷ்டியைப் பரிசீலிப்போம் என்பது ஒரு புறம்.

★ ★ ★

திலீபன் உண்ணாவிரதம் இருக்க முன்வந்த போது தலைவர் 'நீ முன்னால் போ, நான் பின்னால் வருவேன்' என்று சொன்னதாக செய்தி.. இப்போது உலகத்தமிழரில் கரும்புலிகள் சிறப்பிதழிலும் தலைவர் 'தற்கொடை' செய்ய செல்கின்ற கரும்புலிகளுக்கு இவ்வாறு கூறித் தான் வழியனுப்புவாராம். 'வெறுமனே அவரது வாயிலிருந்து வருகின்ற வார்த்தை அல்ல, அந்த மாபெரும் தலைவரின் ஆத்மாவிலிருந்து எழும் குரல் இது. 'உண்மையிலேயே என்றோ ஒரு நாள் இதுதான் நடக்கும்' என்று உறுதியோடு தன்னுள் சொல்லி நிற்பவர் எம் தலைவர்.

முந்திப் பிறப்பவன் அண்ணன், பிந்திப் பிறப்பவன் தம்பி. என்ற ஒப்பற்ற தத்துவம் என்று சோ ஒரு படத்தில் கிண்டல் பண்ணுவார். அதே போல முந்தி இறப்பவன் மாவீரன்.. பிந்தி இறப்பவன்...?

என்ன பலாய்டா இது? காந்தீய வழியில் போராடப் போனாலும் இதே தான். படுகொலை செய்யப் போனாலும் இதே தான்.


**This newspaper is published by**
**Georgicka communications.**
**A member of**
**Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F",**
**Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினால்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம் சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**

**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANTONY BROTHERS
516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அந்தனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்


லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழ்,ஹிந்தி,
மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப்
பெறலாம்

- முத்திரை, சிகரெட்,
  TTC Tickets, Lottery Tickets
- ஃபாக்ஸ், போட்டோக்கொப்பி வசதிகள்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SIVA'S TRADING CO LTD**

**321-2739**

அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு வகைகள், பலசரக்கு வகைகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

## சிவாஸ் ரேடிங் கோ

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடன் இறால், நண்டு, கணவாய், மீன் மற்றும் கடலுணவு வகைகள் மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில் பெற தொடர்பு கொள்ளுங்கள் சுந்தரலிங்கம் (சுந்தரி)

இந்தியா ருடே, பேசும்படம், சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன், பொம்மை தவிர்ந்த அனைத்து தமிழக சஞ்சிகைகளும் 89 சதங்கள் மட்டுமே

தோசை, இடியப்பம், அப்பம் சுடச்சுடக் கிடைக்கும்

**P.S.S.T**

எக்கோ, தொம்சன் கசட்டுகள் 1.99
8 லேசர் இசைத்தட்டுக்கள் 29.99
வீடியோ பிரதி வாடகைக்கு 99 சதம்
Video Transfer (Any system) 8.99

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால் இரண்டு வீடியோப் பிரதிகள் வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால் ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

**Tel:609-0141**

**5210 Finch Ave East #23**
**(Finch/Middlefield)**

சகல தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org